விலை ரூபா 20 பக்கங்கள் 32

# உதயன்

28°c - 24°c
மழையுடன் கூடிய காலநிலை

சுடர் 31 கதிர் 041 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 21, புதன்கிழமை 06.01.2016

## தமிழக மீனவர்கள் பொங்கலுக்கு முன் விடுவிக்கப்படுவர்



கொழும்பு, ஜன. 6
கைது செய்யப்பட்டு இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் தைப் பொங்கலுக்கு முன்னதாக விடுவிக்கப்படுவார்கள் என்று, மீன்பிடி அமைச்சர் மகிந்த அமர வீர தெரிவித்துள்ளார்.
தமிழக மீனவர்கள் பக். 26

# மக்கள் நிராகரித்த கொள்கைகளுடன் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூட்டு

## ஒருபோதுமே ஏற்கமுடியாது என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, ஜனவரி 6
மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் கொள்கைகளுடன் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தன்னை இணைத்து வருகின்றார். இது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம்.
– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான



இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.
ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
கடுமையான மற்றும் பிடிவாதமான நிலைப்பாடுகளை எடுப்பதன் மூலம் இனப்பிரச் சினைக்குத் தீர்வு பக். 27

## கஞ்சா விற்றவருக்கு கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், ஜன. 6
கஞ்சா போதைப் பொருளை விற்பனை செய்த பொம்மைவெளி நபருக்கு யாழ்.நீதிமன்று 6 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது நேற்று.
நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் இந்த பக். 26

முச்சந்தி முரளி



அவுட்டானாலும் ஆடுகளம் விட்டு போக மாட்டன்...

## யாழ். பொங்கல் விழாவில் பிரிட்டன் அமைச்சர் ஸ்வைர்

### மைத்திரி, ரணிலுடன் இணைந்து பங்கேற்பார்

கொழும்பு, ஜன.6
யாழ்ப்பாணத்தில் தேசிய தைப்பொங்கல் விழாவில் பிரிட்டன் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலக இணை அமைச்சர் ஹியூகோ ஸ்வைர் பங்கேற்கவுள்ளார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-
அடுத்த வாரம் இலங்கை வரவுள்ள ஹியூகோ ஸ்வைர், கொழும்பில் உயர்மட்ட அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.
அத்துடன், எதிர்வரும் 15ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள தேசிய தைப்பொங்கல் விழாவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் பிரிட்டன் இணை அமைச்சர் ஹியூகோ ஸ்வைரும் பங்கேற்பார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இதேவேளை, யாழ்ப்பாணத்தில் பக். 26

## வடக்கு - கிழக்கு இணைக்கப்படா

### கூறுகின்றது அரசு

கொழும்பு, ஜன. 6
இலங்கை ஒற்றையாட்சி நாடாகவே இருக்கும் என்றும் தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படமாட்டா என்றும் இலங்கை அரசு தெரிவித்துள்ளது.
தொலைக்காட்சி ஒன்றின் நேரடி விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட பிரதி அமைச்சர் அஜித் பெரேரா, பக். 27

## கடற்படையின் முகாமிலேயே ரவிராஜ் படுகொலைத் திட்டம்

### அரச தரப்புச் சாட்சியாக மாறியவர் சாட்சியம்

கொழும்பு, ஜன. 6
கொழும்பிலுள்ள கடற்படைப் புலனாய்வு முகாமிலேயே, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த நடராஜா ரவிராஜ் படுகொலைக்கான திட்டம் தீட்டப்பட்டது என்று நீதிமன்றத்தில் அரச தரப்புச் சாட்சியாக மாறியுள்ள மனம்பெரிகேயினால் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது.
கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் படுகொலை பக். 27

## இரண்டு பேருக்கும் ஆதரவாம் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பினர்

யாழ்ப்பாணம், ஜன. 6
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் மக்கள் பேரவை ஆகிய இரண்டு தரப்புக்களுடனும் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு இணைந்து செயற்படுவதற்கு அந்தக் கட்சியின் மத்திய குழு அனுமதி வழங்கியுள்ளது.
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) மத்திய குழுக்கூட்டம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் தலைமையில், வவுனியாவில் உள்ள அந்த அமைப்பின் அலுவலகத்தில் நேற்று பக். 26

## பாகிஸ்தானுடன் இலங்கை நேற்று 8 உடன்படிக்கைகள்

### நவாஸ் ஷெரீப்புக்கு அமோக வரவேற்பு



கொழும்பு, ஜன. 6
நிதிமோசடிகள் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளிப்பு தொடர்பான இரகசியத் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை உள்ளிட்ட 8 உடன்படிக்கைகள் இலங்கை – பாகிஸ்தான் அரசுகளுக்கிடையில் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டன.
மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கைக்குப் பயணம் செய்துள்ள பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுச் பக். 27

## நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு வெளிநாட்டவர் தேவையில்லை

### அரசே அதனை முன்னெடுக்கும் என்கிறது வெளிவிவகார அமைச்சு

கொழும்பு, ஜன.6
இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாடுகளை முடுக்கி விடுவதற்கு, அமைதி ஏற்பாட்டாளர் என்ற பெயரில் எந்த வெளிநாட்டவரின் உதவியும் தேவையில்லை என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.
தேசிய நல்லிணக்கச் செயற்பாடுகள் அனைத்தும் அரசின் கீழேயே இடம்பெறுகின்றன. அதன் அனைத்து அரசியல் செயற்பாடுகளுக்கும் அரசே பொறுப்பு என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மகேஷினி பக். 27



## பொங்கலைப் புறக்கணித்து விடுதலைக்கு உதவுங்கள்

### தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை

கொழும்பு, ஜன. 6
தைப்பொங்கல் பண்டிகையைப் புறக்கணித்துத் தமது விடுதலைக்கான அழுத்தத்தைக் கொடுக்குமாறு தமிழ் அரசியல் கைதிகள் நேரடியாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.
வழக்கு விசாரணைக்காகக் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்திற்கு நேற்று முன்தினம் அழைத்து வரப்பட்டிருந்த தமிழ் அரசி பக். 26

## இந்திய மீனவர்களின் அத்துமீறல் அதிகரிப்பு

### நேற்றும் 12 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 6
இந்திய – முல்லைத்தீவு மீனவர்களுக்கு இடையே நேற்று முன்தினம் கைகலப்பு இடம்பெற்றிருந்த நிலையில், நேற்று யாழ்ப்பாணம், மன்னார் கடற் பகுதிகளில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
அவ்வாறு மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 12 பேரைக் கைது பக். 26

## எந்தப் பிரதேச செயலகத்திலும் வாகன வரி அனுமதிப் பத்திரம்

### அறிமுகமாகின்றது இலத்திரனியல் முறை

யாழ்ப்பாணம், ஜன. 6
வாகன வரி அனுமதிப் பத்திரங்களை மாகாணத்தின் எந்தப் பிரதேச செயலகத்திலும் பெறக்கூடிய வகையில் இலத்திரனியல் வாகன அனுமதிப் பத்திரம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக வட மாகாணப் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் பிரான்சிஸ் ஜோண்சன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பக். 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளக் குடியமர்ந்த மக்களுடைய தேவையைக் கண்டறியும் திட்டம்

## மத்தியுடன் இணைந்து மாகாண அரசு முன்னெடுக்கின்றது

யாழ்ப்பாணம், ஜன.6

குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த மக்களின் தேவைகளைக் கண்டறிவதற்கான ஆலோசனைக் கூட்டம் மாவட்டசெயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மத்தியுடன் இணைந்து மாகாண அரசால் முன்னெடுக்கப்படவுள்ள இந்தச் செயற்திட்டத்தில், போரால் இடம்பெயர்ந்து இன்றுவரை பகுதி பகுதியாகக் குடியமர்த்தப்படும் மக்களின் வாழ்வாதாரம், அடிப்படைத் தேவைகள் தொடர்பாகக் கண்டறிந்து செயலாற்றுவது எவ்வாறு என்பது தொடர்பிலும் இங்கு ஆராயப்பட்டுள்ளது.

குடாநாட்டில் படையினரால் சுவீகரிக்கப்பட்டுள்ள 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணிகள் தற்போது சிறு சிறு தொகுதிகளாக விடுவிக்கப்பட்டுள்ளன. வலி. வடக்கில் இறுதியாக 701 ஏக்கர் நிலப்பரப்புக்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், தொடர்சியாக இந்த நிலப்பரப்புக்கள் முழுமையாக விடுவிக்கப்படவுள்ளன என்று நல்லாட்சி அரசால் தெரிவிக் கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் மருதங்கேணி, மாதகல், அரியாலை, ஆனையிறவு, வலி.வடக்குப் பகுதிகள் மீள்குடியேற்றப்பட்ட மற்றும் மீள்குடியேற்றத்துக்காக மக்கள் காத்திருக்கும் பகுதிகளாக அமைந்துள்ளன.

எனினும், விடுவிக்கப்பட்ட நிலப்பரப்பில் மக்கள் இன்னமும் முழுமையாக குடியமரவில்லை. அனேக குடும்பங்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ள போதும், இவற்றில் பகுதியளவான பல்வேறு குடும்பங்கள் மீள்குடியமர்வதில் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளன.

மக்களுக்கான தேவைகள் பூர்த்தி செய்யப்படாத காரணத்தாலேயே இந்தப் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. மக்களின் அடிப்படைத்தேவைகளான குடிநீர்வசதிகள், தங்குமிடவசதிகள், மலசலகூடங்கள், சாலைகள், மின்சாரம், மருத்துவம், கல்வி மற்றும் பாதுகாப்பு என்பன முழுமையாக ஒழுங்குபடுத்தப்படாதமையே இவற்றுக்கான காரணமாகவும் அமைந்துள்ளன.

எனவே, இதுவரைகாலமும் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியமர்ந்த மக்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான திட்டங்களை முன்னெடுப்பதற்காக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடாக மக்களின் தேவைப்பாடுகள் கண்டறிப்படவுள்ளதுடன், தேவைப்பாடுகளைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவது தொடர்பாகவும் மேற்குறித்த கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம்வேதநாயகன்தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், வடமாகாணசபை அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்டச்செயலக அதிகாரி கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ந-ஐ-ரி5)

# புகைப்படங்களை வைத்து சிறுமியை மிரட்டியவருக்கு ஒத்திவைத்த சிறை

சாவகச்சேரி,ஜன.6

17 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தும்வகையில்நடந்துகொண்டு, சிறுமியின் நிர்வாணப் படங்களை தொடுபேசியில் எடுத்ததுடன் அவற்றை இணையத்தளத்தில் பதிவேற்றப் போவதாக மிரட்டிய வடமராட்சி இளைஞருக்கு ஐந்து ஆண்டுகள் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனையும், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 25 ஆயிரம் ரூபா நட்டஈடும் வழங்குமாறு உத்தரவிட்டது சாவகச்சேரி நீதிமன்றம்.

வடமராட்சியைச் சேர்ந்த குறித்த இளைஞர் ஒருவர் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுச் சிறுமியை காதலித்துள்ளார். அதன்போது அவரை நிர்வாணமாக்கி தொடுபேசியில் படங்கள் எடுத்துள்ளார்.

அதனை இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப் போகின்றேன் என்று சிறுமியை மிரட்டி, பதிவேற்றம் செய்யாமலிருக்க 30 ஆயிரம் ரூபா வழங்க வேண்டும் என்றும் குறித்த இளைஞன் மிரட்டியுள்ளார்.

இது தொடர்பாக குறித்த சிறுமியின் பெற்றோர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். அதையடுத்து பொலிஸாரின் வேண்டுகோளின் பிரகாரம் குறித்த இளைஞரிடம் பணம் தருகின்றேன் என்று கூறியுள்ளார்.

பணத்தைப் பருத்தித்துறைக்கு கொண்டு வருமாறும் பருத்தித்துறை பஸ் நிலையத்தில் நின்று தொடர்பு கொள்ளுமாறும் இளைஞன் கூறியுள்ளார். அவ்விதமே குறித்த சிறுமி செயற்பட்ட வேளையில் பஸ் நிலையத்தில் அங்குள்ள பாடசாலையின் மாணவர் ஒருவர் வந்து சிறுமியை அங்குள்ள உணவகத்துக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

பின் தொடர்ந்து சென்ற பொலிஸார் பெண் பணத்தைக் கையளிக்கும்போது இளைஞரையும், அவரது நண்பரையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். அந்த வேளையில் குறித்த பாடசாலை மாணவன் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாக தெரிவித்ததையடுத்து அவரைப் பிணையில் செல்ல அனுமதித்து, இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது பாடசாலை மாணவன் சாட்சியாக மாறிய நிலையில், எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார். இதனையடுத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் வகையில் புகைப்படங்கள் எடுத்தமைக்காக நஷ்ட ஈடாக 25 ஆயிரம் ரூபா செலுத்துமாறும், இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப் போவதாக அச்சுறுத்தி பணம் கேட்டமைக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஆறு மாதச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

(ந-ஐ-9)

# ஆஞ்சநேயர் ஜெயந்தி

யாழ்ப்பாணம்,ஜன.6

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தில் எதிர்வரும்வெள்ளிக்கிழமை ஆஞ்சநேயர் ஜெயந்தி நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். காலை 9 மணிக்கு சமய நிகழ்வுகளும் இடம்பெறும். முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று, ஆஞ்சநேய சுவாமி வீதியுலா எழுந்தருள்வார்.

(ந-ஐ-160)

# நடப்பு வருட நிர்வாக சபைத் தெரிவு

கொழும்புத்துறை, ஜன.6

யாழ். கொட்டடி சனசமூக நிலையத்தின் நடப்பு வருட நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

அதில் தலைவராக நா.தனேந்திரனும், உபதலைவராக கு. இந்திரகுமாரும், செயலாளராக க.கேதீஸ்வரனும், உபசெயலாளராக த.பிரபாசங்கரும், பொருளாளராக தெ.நிஷாகரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை சமாசப் பிரதிநிதியாக இ.சற்குணநாதனும், கலாசார பொறுப்பாளராக த.சுபாகரனும், விளையாட்டுத் துறைப் பொறுப்பாளராக பொ.ஸ்ரீஸ்கந்தராசாவும், மகளிர் விவகாரப் பொறுப்பாளராக திருமதி ஸ்ரீ.சத்தியமூர்த்தியும் போசகர்களாக க.தர்மலிங்கம், ரி. ஜெயபாலசிங்கம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(ந-ஐ-135)

# முதிரைக்குற்றிகளை ஏற்றிய இராணுவத்தினருக்குப் பிணை

மன்னார்,ஜன.6

அனுமதிப்பத்திரம் இன்றி முதிரை மரக்குற்றிகளைக் கொண்டு சென்றபோது, கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட



15 இராணுவத்தினரை தலா 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் செல்வதற்கு மன்னார் நீதிவான் ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா நேற்று செவ்வாய்க்கிழமை அனுமதியளித்தார்.

கஜிவத்தை இராணுவ முகாமில் உள்ள இராணுவ வீரர்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை தமது தேவைக்காக விறகு வெட்டச் சென்ற நிலையில், வெட்டப்பட்டுக் கிடந்த 14 முதிரை மரக்குற்றிகளை தமது வாகனத்தில் ஏற்றிக்கொண்டு கஜிவத்தை இராணுவ முகாமுக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது குறித்த மரக்குற்றிகளுடன் சென்ற இராணுவத்தின் வாகனத்தை, சிலாபத்துறை பொலிஸார் மற்றும் வனப்பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் இணைந்து சோதனையிட்டனர்.

முதிரை மரக்குற்றிகள் கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் இராணுவத்தினரிடம் இருக்கவில்லை.

அதையடுத்து குறித்த முதிரை மரக்குற்றிகளுடன் சென்ற 15 இராணுவத்தினரை சிலாபத்துறை பொலிஸார் கைது செய்த நிலையில், அவர்களை நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான், குறித்த இராணுவத்தினரை தலா 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார்.

(ந-ஐ-56)

# ஒட்டுசுட்டானில் பாதீனிய பரவல் அதிகரிக்கின்றது

## *கட்டுப்படுத்துமாறு கோரிக்கை*

முல்லைத்தீவு,ஜன.6

வடக்கு மாகாணத்தில் மிகக் குறைவாகக் காணப்படும் பாதீனியம் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் விவசாய போதனாசிரியர் பிரிவில் தான், அதிகமாகக் காணப்படுகின்றது. எனவே உடனடியாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட மறுவயற் பாதுகாப்பு உத்தியோகத்தர் அ.சுயேந்திரா தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற பாதீனிய ஒழிப்பு நடவடிக்கையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நஞ்சு இரசாயணங்களைச் சுமக்கும் இந்தப் பாதீனியச் செடிகளால் பயிர்கள் அழிவடைவதோடு மட்டுமல்லாது, குறித்த நஞ்சுகளுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் சுதேசிய செடி கொடிகளும், அழிவடைந்து விடுகின்றன. அத்தோடு நஞ்சுகளின் தாக்கம் காரணமாக கால் நடைகளும் பாதிக்கப்படுகின்றன.

இதனால் மனித உடல் நலமும் பாதிக்கப்படுகின்றது. குறித்த நஞ்சுப் பதார்த்தங்கள் கால்நடைகளிலும், மனிதர்களிலும் மரபணுக்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தும் தூண்டிகளாகச் செயற்படுவது அறியப்பட்டுள்ளது. அரிப்பு, தடிமன் போன்ற ஒவ்வாமை விளைவுகள் உண்டாகின்றன. பாதீனியங்களை விலங்குகள் உட்கொள்வதனால் அவற்றில் இருந்து கிடைக்கும் பால், நஞ்சுத்தன்மை கொண்டதாக மாறுகின்றது.

இந்தப் பாதீனியச் செடியானது அதன் வாழ்க்கைக் காலத்தில் கிட்டத்தட்ட 15 ஆயிரம் வித்துக்களை உருவாக்கும். அவை ஒவ்வொன்றும் 20 வருடம் வரை தரையில் இருந்து முளைத்து கொண்டே இருக்கும். இதனை இரசாயன முறையிலும், பௌதிக முறையிலும் கட்டுபடுத்த முடியும். பௌதிக முறையின்படி கையால் பிடுங்கி அழிப்பது கடினமானது. பாதீனியத்தை எரிதலுக்குள்ளாக்குவதன் மூலமே முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும்.

இந்தச் செடிகள் பரவலடையாமல் தடுக்க வேண்டுமானால், அது பூப்பதற்கு முன்னர் அழிக்க வேண்டும். வடமாகாணத்தைப் பொறுத்த வரையில் மிக குறைந்த அளவிலேயே இந்தப் பாதீனியம் காணப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஒட்டுசுட்டான் போதனாசிரியர் பிரிவில்தான் அதிகளவு பாதீனியங்கள் காணப்படுகின்றன. எனவே இந்தப் பாதீனியங்கள் உடனடியாக அழிக்கப்பட வேண்டும் - என்றார்.

(ந-ஐ-21,500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரியின் ஓராண்டு பூர்த்திவிழாவில் கோபாலகிருஷ்ண காந்தி பங்கேற்பு

கொழும்பு, ஜன.6

இலங்கையின் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்று ஓராண்டு பூர்த்தியாவதை முன்னிட்டு நடைபெறும் தேசிய நிகழ்வில் கோபாலகிருஷ்ண காந்தி பங்கேற்கவுள் ளார்.



இந்த நிகழ்வு எதிர்வரும் 8ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் கொழும்பு பண்டார நாயக்க சர்வ தேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பை ஏற்று கலந்து கொள்ளும் கோபாலகிருஸ்ண காந்தி இந்த நிகழ்வில் தலைமையுரை ஆற்றவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

மகாத்மாகாந்தி மற்றும் முன்னாள் தமிழக முதல்வர் ராஜாஜியின் பேரனான கோபாலகிருஷ்ண காந்தி இந்திய அரசு சார்பாகப் பல்வேறு உயர் பதவிகளை வகித் ததுடன் இலங்கையில் இந்தியத் தூதுவராகவும் கடைமையாற்றி யிருந்தார்.

ஜனாதிபதியின் ஒருவருட பூர்த்தி நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பல அரசியல் பிரமுகர்களும் வெளிநாட்டு பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது. (து)

# துவாரகேஸ்வரனுக்கு எதிராக ஊடகவியலாளர் முறைப்பாடு

*கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக*

யாழ்ப்பாணம், ஜன. 6

பிரபல வர்த்தகர் தி.துவாரகேஸ்வரன் யாழ்ப்பாணத்திலுள்ள ஊடகவியலாளர் ஒருவருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகக் குற்றம்சாட்டி பாதிக்கப்பட்ட ஊடகவியலாளரால் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முகப்புத்தகம் தொடர்பான விடயத்தில் இந்தச் சர்ச்சை உருவாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

துவாரகேஸ்வரன் கடந்த முறை வடக்கு மாகாண சபைத் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டுத் தோல்வியடைந்திருந்தார்.

இந்நிலையில் குறித்த ஊடகவியலாளருக்கு துவாரகேஸ்வரன் அலைபேசி மூலமாக அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகக் குற்றஞ்சாட்டி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பில் நேற்றையதினம் இரண்டு தரப்பினரும் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளனர். அதன் பின்னர் முகப்புத்தகம் சம்பந்தமான முறைப்பாட்டு விடயத்துக்குக் கொழும் பிலுள்ள சைபர் (இணையக் குற்றப் பிரிவு) பிரிவுக்கு முறைப்பாட்டைத் தெரிவிப்பதாக அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகர் வூட்லர் தெரிவித்தார். இதேவேளை, தமிழ் ஊடகவியலாளர் களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் அரசியல்வாதிகள் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள் ளது.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதும், அச்சுறுத்தப்பட்டதும் அதிகளவில் நடைபெற்றமை மறுக்க முடியாத உண்மையாகும். இதனை முன் னின்று அரங்கேற்றியவர்களில் பெரும் பாலானவர்கள் அரசியல்வாதிகளே. ஆட்சிகள் மாறியும் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்வது வேதனை தருகின்றது.

இந்நிலையில், யாழ்ப்பாணத்திலுள்ள ஊடகவியலாளர் நடராஜா குகன் என்பவருக்குக் கொலை அச்சுறுத் தல் விடுத்த அரசியல்வாதி மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். சமூகத்தில் நடைபெறும் நல்லவற்றையும், தீயவற்றையும் மக்களுக்கு எடுத்துச் சொல்லும் மகத்தான பணியில் ஈடுபட்டுள்ள ஊடகவியலாளர்கள் படுகின்ற அசௌகரியங்களை எவரும் கண்டு கொள்வதில்லை. மாறாக அவர்களுக்கு தீங்கை ஏற்படுத்த நினைப்போராலேயே எமது சமூகம் இன்று பல்வேறு பின்னடைவுகளைச்சந்தித்து வருகின்றது என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-4,ரி3)

**விற்பனைக்கு** 077 869 2261

10அடி நீளம் 2 அடி அகலமும், 2 அடி நீளம் 2அடி அகலமும் உடைய இரண்டு மிக்சர் வியாபாரம் செய்யக்கூடிய கண்ணாடி பிற்றிங் விற்பனைக்கு உண்டு

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு** தொடர்பு: 077 292 6909

BAP-XXXX இலக்கமுடைய நல்ல நிலையிலுள்ள Hero Xtreme மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

**வாகனங்கள் விற்பனைக்கு** 076 626 6333

Distributor ஆல் பாவிக்கப்பட்ட நல்ல நிலையில் பேணப்பட்ட PW xxxx இலக்கமுடைய Ashok Leyland Dost 9 அடி நீளமுள்ள பட்டாவும் LL xxxx இலக்கமுடைய Ashok Leyland Partner 14½ அடி நீளமுள்ள லொறியும் விற்பனைக்கு உண்டு.

**நியத்த ஜய**

வெற்றி வாரம்: 425
திகதி: 05.01.2016
வர்ணம்: மஞ்சள்

03 09 12 41 A

ரூ. 19,837,400/-

**லக்கின**

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

திகதி 05.01.2016 | வெற்றி வாரம் 1925 | வர்ணம் நீலம்

மகரம்

வெற்றி இலக்கங்கள் 02 16 37 49

வெள்ளிக்கிழமை வெற்றிப்போதி ரூ 3,307,380 /-

## A/L CHEMISTRY

Group Classes 2018 Batch
7 th Group ஆரம்பம்- 07.01.2016
ஒரு குழுவில் 10 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
ஆசிரியர் Mr.S.Sureshkumar Bsc(Hons)
T.P - 077 555 9028

**வேலைவாய்ப்பு** தொடர்பு: 077 283 5280

யாழ்.நகரில் உள்ள கையடக்கத் தொலைபேசி நிலையத்துக்கு வேலையாள்கள் தேவை.

1. காசாளர்
2. விற்பனையாளர்
3. தொலைபேசி திருத்துநர்

சம்பளம் 20,000/= (67372) (11.15)

**External Pharmacy Class** 077 678 6393

புதிய மற்றும் மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்

காலம்: 16.01.2016
சனிக்கிழமை 3.30 pm
Unique Dental Clinic
561,Palaly Road, Thirunelvely

## PHYSICS WORLD

பௌதீகவியல்
By. M.Karunahnithi B.Sc(Spl)
A/L 2018, 2017, 2016, Day
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

- 54, கலை மகள் வீதி, அரியாலை.
- ஐயா கடைச்சந்தி, மீசாலை.
- Science Corner - யாழ்ப்பாணம்.
- Subra - சித்தன்கேணி

077 618 3064

## ஆட்டிறைச்சிக்கடை இடமாற்றம்

திருநெல்வேலி மேல் மாடியில் இயங்கிய ஆட்டிறைச்சிக்கடை தற்போது கொக்குவில்பிறவுண்வீதியில் இயங்குகின்றதுஎன்பதை சகல வாடிக்கையாளருக்கும் அறியத்தருகின்றேன்.

உரிமையாளர் - ந.உதயகுமார் 077 085 6479

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

af
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

# பிரெஞ்சு மொழி





- இலங்கையில் FRENCH FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 136 நாடுகளில் 1092 கிளைகள். தலைமை நிறுவனம் 1883 PARIS இல நிறுவப்பட்டது.
- இலங்கையில் AF மட்டுமே INTERNATIONAL DIPLOMAS (DELF A1,A2) ஐ வழங்குகிறது.
- எமது A1 சான்றிதழைப் பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சைக்கு தோற்ற வேண்டிய தில்லை. A1 பரீட்சைக் கட்டணம் AF மாணவர்களுக்கு 4000/= ஏனையோருக்கு 1300/= (02.04.2016 நடைபெறுகிறது) கொஞ்சம் பிரெஞ் படித்தவர்களும் எழுமுடன் இணையலாம்.
இலவசம்: படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல். CD,BOOKS பாவனை...
- யாழ். வன்னி. மன்னார். திருகோணமலை. மட்டக்களப்பு. கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல படித்தே FRANCE, CANADA, SWITZERLAND... செல்கிறார்கள். பிரெஞ் மொழிபெயர்ப்புகள். பாடசாலை/பல்கலைக்கழக மாணவர்களுக்கு கட்டணம் மிக குறைவு.

ஆரம்பம் : 10.01.2016 8.30 a.m பதிவுகளுக்கு உடன் அழையுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

## SPOKEN ENGLISH

WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

பாடப்புத்தகங்கள், Video DVD, சான்றிதழ் முற்றிலும் இலவசம்!

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 10.01.2016 ஞாயிற்றுக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| 1. காலை | 08.00-10.00 | 3. பி.பகல் | 01.00-03.00 |
| 2. காலை | 10.00-12.00 | 4. மாலை | 03.00-05.00 |

ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்களும்கூட 3 மாதங்களில் தமிழ்போல சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!

அனைவருக்குமான தொடக்க வகுப்பு காலை 10.00 மணி ஞாயிற்றுக்கிழமை.

SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

## EXAMPOINT

Every Little Success
ICT . Education . Traininig & Development Centre

O/L & A/L

மாணவர்களுக்கான 5 நாள் கணனி மற்றும் ஆங்கிலப் பயிற்சி நெறி.

பயிற்சி கட்டணம் இலவசம்

பயிற்சி நெறியின் உள்ளடக்கம்

* *Introduction about computer*
* *Graphics Designing*
* *Internet and e-mail*
* *MS Office*
* *Methodology of spoken english*

விண்ணப்பத்துக்கு முந்துங்கள் — புதிய பிரிவு: 11-January / காலை 10 மணி

இப்பயிற்சி நெறியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

ExamPoint (Pvt) Ltd. 0776 28 48 45
No- 120/6, Palaly Road, Kantharmadam, Jaffna.
Tel : 021 221 6400 Email :info@exampoint.lk Web :www.exampoint.lk

## பணியாளர்கள் தேவை

யாழ் நகரில் இயங்கி வரும் மொத்த விற்பனை நிலையத்துக்கு வாகனத்தில் பொருள்கள் கொண்டு சென்று விநியோகிப்பதற்கு பணியா ளர்கள் (Delivery Boys) தேவை. விரும்புபவர்கள் கீழ்க் காணும் முகவரிக்கு எதிர் வரும் 12.01.2016 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

DSI மொத்த விற்பனை நிலையம்
154, நாவலர்வீதி, யாழ்ப்பாணம்

## தொழிற்பயிற்சிகள்

*Mobile Phone Repairing
சகல Phone களின் Hardware, Software செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும். காலம்: 03 மாதம்

*Electronics
சகல இலத்திரனியல் பொருள்கள் (Tv, DVD, Phone) திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்: 10 மாதம்

*Air - Conditioning
சகல குளிர் சாதனங்கள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்: 06 மாதம்

பயிற்சிகள் ஆரம்பம்: 11.01.2016 - கிழமை நாள்கள்
09.01.2016 (சனி, ஞாயிறு)

விவரங்களுக்கு
*Jaffna Technical Institute*

இல.23, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.077 824 9949
கிளை:-New Asian Center 56/15B ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.021 221 7474

O/L படித்தவர்கள் , வேலை செய்பவர்கள் அனுமதிக்கப்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை
## பொது அறிவித்தல் - 2016

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | அறிவித்தல் |
|---|---|---|---|
| 01. | ஆதனவரி 2016 | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள் | 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டமான சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி 2015ம் ஆண்டு அறவிடப்பட்ட ஆதன வரி வீதத்தின் பிரகாரம் 2016ம் ஆண்டிற்கான ஆதன வரி அறவீடு மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2016ம் ஆண்டிற்கான ஆதன வரியை 31.01.2016ம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்த வரியில் 10% கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்தந்த காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதன வரியை செலுத்த தவறின் 15% [illegible] கட்டணம் ஆதன வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே குறித்த ஆதன வரிகளை 31.01.2016ம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக் கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். |
| 02. | ஆதனப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்தல் | ஆதனப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்யப்படாத ஆதனச் சொந்தக்காரர்கள் | பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை பிரதேச சபை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து பெயர்மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் |
| 03. | 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் கட்டட அனுமதி வழங்கல் | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொது மக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள் | 1. தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், மதில்கள் அமைப்பதாயினும் அல்லது பழைய கட்டடத்தினை திருத்துவதாயினும் பிரதேச சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டடங்கள் மதில்கள் அமைக்கப்படல் வேண்டும். 2. புதிய கட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாதவிடத்து உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பிக்க வேண்டும். 3. அத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேச சபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தை செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடியேறுதல் வேண்டும். 4. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும். 5. அனுமதியற்ற கட்டடங்களுக்கு பின்வருமாறு தண்டப்பணம் அறவீடு செய்யப்படும். |

| தொ. இல | அனுமதியற்ற கட்டப்பட்ட கட்டட விபரம் | வதிவிடம் (குடியிருப்பு) ஒரு சதுர மீற்றருக்கு | வர்த்தக மற்றும் வேறு கட்டடங்கள் ஒரு சதுர மீற்றருக்கு |
|---|---|---|---|
| 1 | அத்திவார வேலை மட்டும் பூர்த்தி (தூண் பீட மட்டம்) | ரூபா 100.00 | ரூபா 250.00 |
| 2 | கூரை மட்டம் வரை (கூரை நீங்கலாக) | ரூபா 150.00 | ரூபா 500.00 |
| 3 | கூரை உட்பட நிர்மாணம் | ரூபா 200.00 | ரூபா 750.00 |
| 4 | நிர்மாணம் பூர்த்தி செய்யப்படல் | ரூபா 250.00 | ரூபா 1,000.00 |
| 5 | எல்லைச்சுவர் / அணைச்சுவர் நிறுவுதல் | ரூபா 200.00 | ரூபா 200.00 |
| 6 | தாழ்த்த நிலங்கள் / தெற்காணிகளை மீட்டல் | ஒவ்வொரு 150 சதுர மீற்றருக்கும் ரூபா 2,500.00 | |
| 7 | தொலைத் தொடர்பு மற்றும் வானலை வாங்கிக் கோபுரங்களை நிறுவுதல் | உயரத்தில் ஒவ்வொரு 5 மீற்றருக்கும் ரூபா 10,000.00 | |

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | அறிவித்தல் |
|---|---|---|---|
| 04. | காணி உப பிரிவிடுகை | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட ஆதன உரிமையாளர்கள் | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும் |
| 05. | சூழல் பாதுகாப்பு உரிமம் | தொழில் / வியாபார நடவடிக்கைகளை பிரதேச சபை எல்லைக்குள் மேற்கொள்வோர் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2000 ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் திகதி 1159/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் "இ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் / வியாபார நடவடிக்கைகளை பிரதேச சபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். |
| 06. | வியாபார அனுமதிப் பத்திரம் 2016 | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம் / தொழில் நிலையத்தவர்கள் | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உப அலுவலகங்களில் 2016ம் ஆண்டு ஜனவரி 20ம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி அவ்வவ் உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2016ம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade License) பெற்றுக்கொள்ளவும். 31.03.2016ம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம். |
| 07. | துவிச்சக்கர வண்டி உரிமம் | துவிச்சக்கரவண்டி உரிமையாளர்கள் | துவிச்சக்கர வண்டிகள் வைத்திருப்போர் 2016.03.31ம் திகதிக்கு முன் அவ்வவ் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2016ம் ஆண்டிற்கான வாகன, மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும். |
| 08. | மிருகங்களுக்கான உரிமம் | வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் | வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2016.03.31ம் திகதிக்கு முன் அவ்வவ் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2016ம் ஆண்டிற்கான வாகன, மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும் |
| 09. | விளம்பரங்கள் அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல் | விளம்பரங்களைக் காட்சிப்படுத்தும் முகவர்கள், நிறுவனங்கள், வர்த்தக உரிமையாளர்கள் | பிரதேச சபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேச சபையின் அனுமதியைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்த வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும். கட்டண விபரம் பின்வருமாறு |

| தொ. இல | விபரம் | பிளாஸ்ரிக் (1சதுர அடி) | துணி (1சதுர அடி) |
|---|---|---|---|
| 1 | தனியார் வளவுகளில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் பிரச்சார பலகைகள் | ரூபா 50.00 | ரூபா 25.00 |
| 2 | பிரதான பாதைக்கு தெரியக் கூடிய விதத்தில் உள்ள இடத்தைப் பயன்படுத்தி பிரதான பாதைக்கு அருகில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப் படும் விளம்பரப் பலகைகள் | ரூபா 60.00 | ரூபா 30.00 |
| 3 | உள்ளூராட்சி மன்றங்களின் வளவுகளை பயன்படுத்திய வண்ணம் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகள் | ரூபா 100.00 | ரூபா 50.00 |

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | அறிவித்தல் |
|---|---|---|---|
| 10. | வீதி ஒழுங்கும் தெருவோர வியாபாரமும் | பாதசாரிகள், வாகன ஓட்டுநர்கள், மற்றும் வியாபாரிகள் | வீதிஒழுங்கைப் பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றோம். சந்தைச் சுற்றாடலில் இருந்து 1Km சுற்றுவட்டாரத்தில் கடல் உணவுகள், மரக்கறி, இறைச்சிகள் என்பன விற்பது தடை செய்யப்பட்டுள்ளது. |
| 11. | கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல் | கால்நடை வளர்ப்போர் | சபை எல்லைக்குள் அலைந்து திரியும் கட்டாக்காலிகளை உரிமையாளர்கள் கட்டி வளர்க்க வேண்டும். கட்டி வளர்க்காது விட்டால் சபையினால் பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் |
| 12. | பொதுச்சுகாதாரத்தைப் பேணுதல் | உணவு கையாளும் நிலையம் மற்றும் பொதுமக்கள் | அபிவிருத்தி செய்யப்படாத பற்றைகள் உள்ள காணிகள் துப்பரவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும் |
| 13. | பொது இடங்களில் கழிவு போடுதலும் டெங்கு நுளம்புப் பெருக்கத்திற்கு காரணம் அளிப்பதும் | பொதுமக்கள், வியாபார நிலையங்கள், அரச தனியார் நிறுவனங்கள் | திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| 14. | பட வரைஞர்களை பதிவு செய்தல் | படவரைஞர்கள் | 2016ம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2016ம் ஆண்டு ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும், புதுப்பித்துக்கொள்ளவும் தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். |
| 15. | தரகர் முறை நீக்கல் | சந்தைக் குத்தகையாளர்கள் | எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் முறையான நடைமுறை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர் [illegible] |

மேற்படிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொடர்புபட்டோர்கள் [illegible] பிரதேசம் செயற்பட்டுத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் [illegible]

வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
06.01.2016

திருமதி.குகனேஸ்வரி சண்முகலிங்கம்
செயலாளர்.

A/L- 2016, 2017, 2018
தொடர்பு: 077 773 0840
CHEMISTRY/ Biology
தமிழ்/ English Medium (67373) (13.18)
தனி/குழு வகுப்புகள் சிங்கம் மாஸ்டர்

வேலையாள்கள் தேவை
076 752 8957
புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள இரும்புக்கடை ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.(அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)
(67379)(11.17.18)

**Spoken English**
ஆரம்பம்: 06.01.2016
4.30 pm
***Colombo Royal College***
பிரபல ஆசிரியர்
(c 28273) (14,16)
Beefort International School
136, Navalar Rd, Jaffna.

மணமகள் தேவை
தொடர்பு: 077 879 1128
56 வயதுடைய ஒருவருக்கு மறுமணம் செய்வதற்கு மணமகள் தேவை. வயதெல்லை 42- 48 வரை. விதவை, விவாகரத்துப் பெற்றவர்கள், பிள்ளைகளற்றவர்கள் விரும்பத்தக்கது. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. (67351) (11.15.17)

கார்கள் விற்பனைக்குண்டு
தொடர்பு: 072 773 3322
072 784 8040
இந்தியன், AMBASSIDER DIESEL CLASSIC, 15
எண்ணிக்கை கொண்ட கார்கள் விற்பனைக்குண்டு மிகக் குறைந்த விலையில்.
S.P.S AUTO MOBILES (PVT) LTD
251/18. ஸ்ரீ சங்கராஜ மாவத்தை.
கொழும்பு -10.

## பிரத்தியேக வகுப்புக்கள்
★ கணிதம் ★ விஞ்ஞானம்
★ ஆங்கிலம் ★ வரலாறு
தனியாகவோ, குழுவாகவோ வீடுவந்து கற்பிக்கப்படும்
தொடர்புகளுக்கு
077 675 1822, 077 323 3200,077 444 2557
(67343) (13.15)

## உடனடி வேலைவாய்ப்பு
எமது வேலைத்தளங்களில் கட்டட வேலைக்கு கீழ்வரும் தொழிலாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள்.
★ மேசன் (Mason)
★ கூலியாள்கள் (Labours)
தகுதியுள்ளவர்கள் நேரில் வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
யூரோவில் (சி.28283) (13.15)
இல.45,காட்டுக்கந்தோர் ஒழுங்கை,யாழ்ப்பாணம்.

USAID
FROM THE AMERICAN PEOPLE
"Civil Society Initiatives to Promote the Rule of Law in Sri Lanka"
மகளிர் அபிவிருத்தி நிலையம் வன்முறைகளால் பாதிக்கப்படும் மக்களுக்கு இலவச சட்ட சேவைகளை நடத்தி வருகிறது
தொடர்புகளுக்கு:
இலவச சட்ட சேவை பிரிவு
மகளிர் அபிவிருத்தி நிலையம்,
இல.07, இரட்ணம் லேன்,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.:- 021 222 4398, 021 321 5144
மேலதிக இலவச சட்ட சேவை பிரிவுகள் - வவுனியா,மட்டக்களப்பு மாவட்டங்களில்
(59259) (45.3.7)

கூரைத் திருத்த வேலை மற்றும் புதிய சீலிங் வேலை என்பவற்றைச் செய்யக்கூடிய ஆற்றலுள்ள தொழிலாளர்கள் உடன் தேவை
எமது நிறுவக வேலைத் திட்டத்தின் கீழ் யாழ்.நகர்ப்பகுதியிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றுக்கு கூரைத் திருத்த வேலைகள் (கூரை ஓடுகளை அகற்றல், 2"x1" பழுதடைந்த சிலாகைகளை அகற்றி புதியனவற்றைப் பொருத்துதல், மீண்டும் கூரை ஓடுகளை பொருத்துதல் மற்றும் புதிய சீலிங் வேலைகள் (வெளிப்பகுதி / உட்பகுதி) என்பவற்றைச் செய்யக் கூடிய ஆற்றலுள்ள தொழிலாளிகள் நேரடியாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ உடன் தேவை. கொடுப்பனவு இருநாள்களுக்கு ஒரு தடவை வழங்கப்படும். தேவைப்படின் உணவு மற்றும் தங்குமிட வசதி வழங்கப்படும்.
உடன் தொடர்புகளுக்கு - முகாமையாளர்
076 824 5454 (67380) (11.15.17.18)


## மான் இறைச்சியுடன் கைதாகினார் ஒருவர்

வவுனியா, ஜன.6

வவுனியா-புளியங்குளத்தில் இரண்டு கிலோ மான் இறைச்சியுடன் ஒருவரை வவுனியா வனசீவராசிகள் பாதுகாவல் காரியாலய உத்தியோகத்தர்கள் கைது செய்துள்ளனர்.

வவுனியா மாவட்ட வனசீவராசிகள் பாதுகாவல் காரியாலய உத்தியோகத்தர்கள் வெளிக்களப் பணியில் ஈடுபட்டிருந்தவேளை புளியங்குளம் பகுதியில் இரண்டு கிலோ மான் இறைச்சியை விற்பனைசெய்வதற்கு எடுத்துவந்த குறித்த நபரைக் கைது செய்தனர். அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நேற்று வவுனியா மாவட்ட நீதிவான்முன் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார் நீதிவான். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள்

**கடந்த ஞாயிற்றுக்கிழமைவெளியான உயர்தரப் பரீட்சை முடிவுகளில் பாட சாலைகள் ரீதியாக எமக்குக் கிடைக்கப் பெற்ற பெறுபேறுகள்.**

**வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி**

**கணிதப் பிரிவு**
மகேந்திரகுமார் காயத்திரி - 3ஏ.
**உயிரியல் பிரிவு**
பாலகுமார் சுகன்யா- 3ஏ.
**வர்த்தகப்பிரிவு**
மகேந்திரன் கயலினி- 3ஏ, கந்தசாமி நவீதா- 3ஏ, ஹரிகரன் சயந்தினி -3ஏ, சின்னத்தம்பி சரணியா - 3ஏ.
**கலைப்பிரிவு**
சச்சிதானந்த சிவகுமார் நிவிதா- 3ஏ, இராசரத்தினம் ஹசந்தினி -3ஏ.

**வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்**

**கணிதப் பிரிவு**
பார்குல் அஸானா சாஜகான் -3ஏ, சயந்தி சிவசிதம்பரம் ஏ,பி,சி.
**வர்த்தகப்பரிவு**
தனுசிக்கா புவனேந்திரராசா -3ஏ, நவீனா பத்மலிங்கம் -3ஏ, யதுசலா மனோகர ராசா-3ஏ, சரண்யா ஸ்ரீகாந்தரங்கநாதன் -3ஏ, கேதுஜா இராசரட்ணம் - 3ஏ, வைஸ்ணவி வெள்ளைப்பாண்டியன் - 3ஏ, திவ்னுஜா சண்முகராஜா- 3ஏ, செனோவி ஜெயரட்ணம் -2ஏ,பி, கெலன் றபித்தா குபேந்திரன் -2ஏ,பி, வேர்ஜினியா பற்றிக் இம்மானுவேல் - 2ஏ,பி.

**கலைப் பிரிவு**
பாத்திமா நஸீரா 2ஏ,பி.
**உயிரியல் பிரிவு**
மயூரி சுப்ரமணியம் - 3ஏ, திபோசிகா யோகலிங்கம் - 3ஏ, றியன்ஸியா இளங்கோ - 3ஏ, திவேகா முருகானந்தன் -3ஏ கழ்சிகா மகேந்திரன் - 2ஏ,பி, பாத் திமா சிமானாகுஷிமத் - 2ஏ,பி, சாகித்தியா புவிராஜசிங்கம் -2ஏ,சி.

**யாழ்.விக்னேஸ்வராக் கல்லூரி**

**உயிரியல் பிரிவு**
ஈ.தர்சினி -2ஏ,பி, சி.சக்தி -1ஏ,2பி, ரா.அபர்ணன்- ஏ,பி,சி, ஈ.பாபு -3பி.

**கணிதப் பிரிவு**
சி.ராகவேந்தன் -2ஏ,சி, செ.நிதர்சன் - 2சி,எஸ்.
**வர்த்தகப்பிரிவு**
ப.நிருசன் -3ஏ, யோ.சோபித்திரியா -2ஏ,பி, கு.அஜிந்தா-2ஏ,பி, சி.ருசாலினி -ஏ,பி,சி, பு.தர்சா- ஏ,பி,சி.
**கலைப்பிரிவு**
வ.ஐங்கரன் -1ஏ,2பி, ச.சஞ்சிகாந் - 2ஏ,பி, ஜெ.சிந் துஜா-ஏ,பி,சி, து.சுகிர்தா- ஏ,பி,சி, சி.கிருஸ்ணதாஸ் - 2பி,சி, பு.புஸ் பாஞ்சலி- 2பி,சி. (ஜ-10,422)

**யாழ்.இந்து மகளிர் கல்லூரி**

**விஞ்ஞானப் பிரிவு**
எஸ். நிவேதிகா- 2ஏ,பி, எஸ்.சுபலட் சுமி- ஏ,2பி, ஏ.மே சிஞானரூபி- ஏ,2பி, எம். ஆத்மிகா- ஏ,பி,சி, ஜெ.டிசா யினி- ஏ,சி,எஸ், எஸ். அம்பிகா- ஏ,பி,சி, பி.துசாங்கி- ஏ,பி,சி, எஸ்.சாம் பவி- ஏ,2சி, எஸ். நிசோபா- ஏ,எஸ்,சி.

**வணிகப் பிரிவு**
என்.வேணுஜா- 3ஏ, ரி.பிரதாயினி- 3ஏ, எஸ். துவாரகா- 2ஏ,பி, ஆர்.ரம்ஜிதா- 2ஏ,பி, ஜி.மஜிதா- 2ஏ,பி, ஏ.சிவமுகுந் தினி- 2ஏ,பி, கே. மிதுசா- ஏ,2பி, லவண்யா- ஏ,2பி.
**கலைப் பிரிவு**
ஐ.ஜனனி- 3ஏ, கே.மதிவதனி- 3ஏ, ரி.காவேரி- 2ஏ,பி, எல்.தயாலக்சி- 2ஏ,பி, எஸ்.விதுர்சனா- 2ஏ,பி, ஆர்.கோபினா- 2ஏ,சி, எஸ்.காயத்திரி- 2ஏ,சி, கே.பிரிய தர்சினி- 2ஏ,சி, பி.மதுஸ்கா- 2ஏ,எஸ், எஸ்.தேவகி-ஏ,பி,சி, என்.மதுரா- ஏ,2சி, கே.மதினி- ஏ,2சி, ரி.இளமதி- ஏ,2சி, கே.கிருஜா- ஏ,2சி, எஸ்.கல்பனா- ஏ,2பி, ஆர்.ரூபினி- ஏ,பி,சி, கே.லக்சனா- 3பி, யு.லக்சனா- 3பி, ரி.தாட்சாயினி- 3பி.

**மானிப்பாய் இந்துக் கல்லூரி**

**கணிதப் பிரிவு**
அ.நிதுர்சன் - 3ஏ, சி.மயூரன் - ஏ பி சி, பு.பானுசன் - ஏ பி சி, சி. தனுசன் - ஏ,2எஸ்.
**உயிரியில் பிரிவு**
தி. சிந்துஜன் - ஏ,சி,எஸ், எ. துவாரகன் - 2பி,சி.
**வர்த்தகப் பிரிவு**
இ.இராகவன் - ஏ,2சி, ஏ.தினேஸ் - ஏ,2சி.
**உயிரியல் தொழில்நுட்பம்**
ம.அபிசாந் - 3சி, ஆ.ஆனந்தவிஸ்ணு - 2சி,எஸ்.

**பொறியியல் தொழில்நுட்பம்**
அ.ஜீசஸ்றொக்கின்சன் - 2பி,எஸ், ர.டினோஜன் - பி,2சி, வை. கஜன் - பி,2சி, செ. அர்ஜீன் - 3சி, க. திலீப்குமார் - 3சி, ஜெ. திசாங்கன் - 2சி,எஸ்

**கலைப்பிரிவு**
ப. குருபரேசன் - ஏ,2பி, கு.பிரதீபன் - ஏ,பி,சி, த.தனுஜன் - 2பி,சி.

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**

**கணிதப்பிரிவு**
விக்னேஸ்வரன் சர்மினா - 3ஏ.
**உயிரியல் பிரிவு**
கந்தசாமி பிரியங்கா - 3பி.
**வணிகப்பிரிவு**
சாந்தறூபன் விவேகா - 2ஏ,பி.
**கலைப்பிரிவு**
வரதராசா பதுசா ஏ,2பி.

**உடுப்பிட்டி அ.மி.க. பாடசாலை**

**கணிதப் பிரிவு**
பி.நிஷாந்த்- 2ஏ,பி, பி.துஜீவன்- ஏ,2பி, கேசவி- ஏ,பி,சி, யதுகுலன்- பி,2சி, அமிர்தவர்ஷன்- ஏ,சி,எஸ், வான்மீகன் - பி,2சி.

**விஞ்ஞானப் பிரிவு**
கே.கலைச்செல்வி- 2ஏ,பி, வி.விது- ன்-2ஏ,பி, எம்.கரிலக்ஷன்- ஏ,2பி.
**வர்த்தகப் பிரிவு**
பி.அஜிந்தா- 3ஏ, பி.நிலெக்ஷன்- 3ஏ, ரி.சங்கீர்த்தனன்- 3ஏ, ஆர்.ராகவேந் திரன்- ஏ,பி,சி, சிந்துயா- 2ஏ,பி, பிரி யங்கா- 2ஏசி, எஸ்.செந்தூரன்- 3ஏ, ரி.தர்ஷன்- ஏ,2பி, எஸ்.துவாரகன்- ஏ,2பி.
**கலைப் பிரிவு**
தமிழ்ச்செல்வன்- ஏ,2பி, சுகன்யா- 2ஏ, பி, எஸ்.சுவன்யா- ஏ,2பி, எஸ்.கோமளா- ஏ,2சி, பி.புவீந்திரராசா- 3பி. (ஜ-108)


## பாராட்டி வாழ்த்து

சுதுமலை வடக்கைச் சேர்ந்த சமாதான நீதிவானும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய தர்மகர்த்தா சபை செயலாளருமாகிய

**திரு.இராசகுலசேகரம் குமாரகுலசிங்கம்**



அவர்கள் சென்ற மாதம் 15ஆம் திகதி (15.12.2015) மகரகம கலாசார மண்டபத்தில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் **இந்து கலாசார அமைச்சர் கௌரவ திரு. சுவாமிநாதன்** அவர்களால் **அரச கலாபூஷணம் விருது** வழங்கி கௌரவிக்கப்பட்டு, எமது கிராமத்துக்கும் எமது ஆலயத்துக்கும் பெருமை தேடித் தந்ததையிட்டு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய தர்மகர்த்தா சபையினர் மனமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவரும் இவரது குடும்பத்தினரும் சகல செல்வங்களையும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

சுதுமலை.

**சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலய தர்மகர்த்தா சபையினர்.**



## ECONOMICS ZONE
## (635,K.K.S.ROAD, JAFFNA

மேற்படி கல்வி நிறுவனத்தில் கல்வி கற்று 2015 இல் க.பொ.த.உயர் தர பரீட்சையில் **வர்த்தக** பிரிவில் உயர்சித்தி பெற்ற மாணவர்களை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



M.லஜீவன்- 3 A
மாவட்டநிலை 01
K.H.C






T.டினேஸ் -3 A
மாவட்டநிலை 02
J.H.C

| பெயர் | பெறுபேறு | மா.நிலை | பாடசாலை |
|---|---|---|---|
| S. சேந்தன் | 3A | 12 | J.H.C |
| T. துஷ்யந்தன் | 3A | 35 | K.H.C |
| S.கபிலன் | 3A | 37 | J.H.C |
| M.சாரங்கன் | 3A | 41 | K.H.C |
| R.கிருஷாணி | 3A | 57 | K.H.C |
| N.செந்தூரன் | 3A | 64 | K.H.C |
| N.அபிராமி | 3A | 70 | K.H.C |
| K.உஷாந்தி | 3A | 77 | K.H.C |
| S.சோபனா | 2AB | 106 | K.H.C |
| B.ஹரிகரசர்மா | 2AB | 107 | K.H.C |
| T.ஜினோசன் | 2AB | 112 | K.H.C |
| S.அஜந்தன் | 2AB | 09 | (கிளிநொச்சி |

| | |
|---|---|
| S.சுருதிகா | A2B |
| S.மிதுஷா | A2B |
| A.அரவிந்தன் | A2B |
| S.டிலக்ஷன் | 3B |

பொருளியல் மற்றும் கணக்கீட்டு ஆசிரியர்
**R.THARSHAN**
**T.P.077 431 6814**

* 33 மாணவர்களில் 10 மணவர்கள் 3A சித்தி
* பொருளியல் பாடத்தில் 100 % சித்தி
* 2016,2017,2018 DAY CLASS வகுப்புக்கள் பல பிரிவுகளில் சிறப்புற நடைபெறுகின்றன.

வாழ்த்துவோர்:
**ஆசிரியர், பழைய மாணவர்கள், 2016,2017பிரிவு மாணவர்கள்**

**மீண்டும் வெற்றிகள் தொடரும்..........**



## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி

## ஜனனி ஐயாத்துரை

**கலைப்பிரிவில் 3A**

சித்திபெற்று யாழ். மாவட்டத்தில் 19 ஆவது இடத்தைப் பெற்றமையை எண்ணி மகிழ்வடைகின்றோம். இவரை ஊக்குவித்த பாடசாலை ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்



கலைப்பிரிவில் கதிர் ஒளியாய்
கண்ணின் மணியாய் எங்கள் ஜனனி
கலைத்துறையில் சிறப்பெய்தி
பல்கலைக்கழகம் சென்று
பட்டங்கள் பல பெற்று
பார் போற்றும் பெண்ணாக
கலை மகளின் ஆசிபெற்று
வாழ வாழ்த்துகின்றோம்.



(64188) (13,15)

வாழ்த்தும் அன்பு நெஞ்சங்கள்

அப்பா, அம்மா, அக்காமார் - குடும்பம், அண்ணன்மார் - குடும்பம், தம்பி, தங்கைகள், மாமன்மார் - குடும்பம்,சித்திமார் -குடும்பம், பூட்டியம்மா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீயில் எரிந்த முன்னாள் போராளி சிகிச்சை பயனின்றி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 6
நுளம்புத் தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்காகப் புகை போடும் நோக்கில், விறகுக்கு மண்ணெண்ணெய் ஊற்றித் தீ பற்ற வைத்த கண் பார்வையிழந்த முன்னாள் போராளி தீப் பிடித்து எரிந்து உயிரிழந்தார்.
இந்தப் பரிதாபச் சம்பவம் முல்லைத்தீவு கேப்பாப்பிலவு, வற்றாப்பளையில் இடம்பெற்றது.
இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சிவகுமார் செல்வகுமாரி (வயது-30)என்பவரே உயிரிழந்தார். எனினும் சடலத்தை அடக்கம் செய்ய அவர்களிடம் வசதி இருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த நவம்பர் மாதம் 12ஆம் திகதி இரவு சகோதரன் வீட்டில் இருந்த வேளை அவர் விறகில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீ மூட்டியுள்ளார். அதன்போது அவர் உடுத்தியிருந்த சேலையிலும் தீப் பிடித்துள்ளது. அவர் கண்பார்வை இழந்திருந்தமையால் தனது சேலையில் தீப் பிடித்ததை அவர் கண்டிருக்கவில்லை. தீப் பற்றியபோதே அவர் அதனை உணர்ந்துள்ளார். உடனடியாக அவர் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டார்.
பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. எனினும் சிகிச்சை பயனளிக்காது கடந்த சனிக்கிழமை மதியம் அவர் உயிரிழந்தார்.
நீதிமன்றப் பணிப்புரைக்கு அமைய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். அதன் பின்னர் அந்த முன்னாள் போராளியின் சடலத்தை அவரது சகோதரியிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனாலும் சடலத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டு செல்லக் கூடிய பண வசதி தமக்கு இல்லையென அந்தச் சகோதரி தெரிவித்துள்ளார். உயிரிழந்த முன்னாள் போராளிக்கு மூன்று பெண் பிள்ளைகள் உள்ளனர் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
தற்போதுள்ள சகோதரியின் கணவரும் கைவிட்டுச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. அதனால் தாம் பஸ்ஸுக்குரிய பணத்துடன் மாத்திரமே வந்திருந்ததாகவும், சாப்பிடக்கூட வசதியற்ற நிலையில் உள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். இதனால் சடலத்தை அரச செலவில் அடக்கம் செய்யுமாறு சகோதரி கோரியுள்ளார்.
சடலத்தைக் கொண்டு செல்லவும் அதற்கான வாகனத்தையும் மனிதாபிமான அடிப்படையில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் தனது செலவில் ஒழுங்கு செய்து வற்றாப்பளைக்கு அனுப்பி வைத்துள்ளார்.
கடந்த சனிக்கிழமை அவர் உயிரிழந்த போதும் பொலிஸாரின் அக்கறையீனம் காரணமாக அந்தச் சம்பவ விசாரணை நேற்றுவரை இழுபறியில் இருந்து நேற்றைய தினமே விசாரணை இடம்பெற்று சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.
(த-4-86)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 09.12.2015 புதன் கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப குல விளக்கு
அமரர்
**சரஸ்வதி கதிரமலை**
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (06.01.2016) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிரியைகள் 08.01.2016 வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால்
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்
377/30, வீரமணி வீதி, யாழ்ப்பாணம்.
024 568 5697
குடும்பத்தினர்.

## 22 ஆம் ஆண்டு நினைவலைகள்

வருடங்கள் பல சென்றாலும் உங்கள் நினைவுகளுடன் என்றும் வணிகர்கள்
அமரர்
**சங்கரப்பிள்ளை நமசிவாயம்**
(முன்னாள் தலைவர் – சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம், முன்னாள் உரிமையாளர் – அம்பிகா பார்மசி – சாவகச்சேரி.)



**மண்ணில்**
22.08.1937
**விண்ணில்**
06.01.1994

மன்றச்சேவைக்கென வந்து அகால அமரத்துவமடைந்த அமரரின் நினைவுநாளும் நினைவுக் கூட்டமும் இன்று (06.01.2016) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்ற அலுவலகத்தில் உள்ள அமரரின் நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் இந்த நிகழ்வில் அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டிக் கொள்கின்றோம்.
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் (62834) (11.18)

## 02 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

நிலமாய் 28 . 06 . 1948
நிழலாய் 29 . 12 . 2013




**அமரர் க. தங்கவடிவேல்**
**(கிருஷ்ணபிள்ளை)**

நற்குணமும் நற்பண்புகளும்
நிறைந்ததொரு மானிடனாய்
நானிலத்தில் வந்துதித்து
இல்லறத்தில் இனியவராய்
பொது நலத்தில் சேவகனாய்
வாழ்ந்து மறைந்த அப்பாவே!!
ஊர்போற்ற வாழ்ந்த
உம்மை எந்நாளும் மறவோமே...

(62240)
(11,15)
கலைமகள் வீதி,
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

மேற்படி எமது சங்கத்தின் பணிப்பாளர் திருமதி அ. நிர்மலா அவர்களின் தந்தையார்



**மனுவல் சவிரிமுத்து**
அவர்கள் 07.12.2015ஆம் திகதி காலமாகியதையிட்டு துயருற்றி ருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
**பணிப்பாளர்கள்– பணியாளர்கள்**
**அங்கத்தவர்கள்**
**புங்குடுதீவு– நயினாதீவு பல.நோ. கூட்டுறவுச் சங்கம்.**

## அஞ்சலிக் கூட்டம்

**திருமதி நாகநந்தினி (நந்தினி) குணராஜ்**



180,நாவலர் வீதியில் பிரபல வைத்தியராக கடமையாற்றிய முன்னாள் டாக்டர் சோமசேகரம் சண்முகலிங்கம் அவர்களின் புதல்வியும் திரு. ராஜேந்திரன் குணராஜ் (கனடா) அவர்களின் மனைவியும் மதுமிதாவின் தாயுமான திருமதி நாகநந்தினி குணராஜ் 08.12.2015 அன்று கனடாவில் காலமானார்.
அவர்கள் தனது இல்லத்தை மாற்றுவலுடையோரின் பாவனைக்காக பல வருடங்கள் தந்து உதவியவர். பின்னர் சங்கத்திற்கே கொடுத்தவர்.
அன்னாரின் ஞாபகார்த்தமாக ஒரு அஞ்சலிக் கூட்டம் நாளை (07.01.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.
திருமதி நந்தினியுடன் தொடர்புடைய அனைவரையும் பயன்பெற்ற மாற்றுத்திறனாளிகள் அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.
நிர்வாக சபை,
**வலுவிழந்தோர் புனர்வாழ்வு சங்கம்,**
**47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு,**
**யாழ்ப்பாணம்.**
(67376)
(13.15)

## ஆண்டு ஐந்தில் அகம் நெகிழ்ந்து பிரார்த்திக்கின்றோம்

உருவாய் 17 . 02 . 1920
அருவாய் 01 . 01 . 2011



**சிவபூசா துரந்தரர் வேலுப்பிள்ளை**
**சிவசுப்பிரமணியம்**
திதி: மார்கழி அபரபக்கத்துத் துவாதசி (06.01.2016) புதன்கிழமை
ஈர்த்து எம்மை ஆட்கொண்ட எம் தந்தையே
ஆராத இன்பம் அருளினீர் எப்போதும்
இமைப்பொழுதும் எம்நெஞ்சில் நீங்கா நின்தாளினைப்
போற்றிப் புகழ்ந்து பிரார்த்திக்கின்றோம்
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்**
24, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
(67384)

## நீரில் மூழ்கிய சிறுமிகள் சாவு

மட்டக்களப்பு,ஜன.6
வாழைச்சேனைப் பிரதேசத்தில் நீரில் மூழ்கிய 13,14 வயதான இரு சிறுமிகள் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
நேற்றுமாலை பூங்கா அருகில்இருந்தகுளம் ஒன்றில் இறங்க முற்பட்டபோதே, இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகவும், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறுமிகள் இருவரும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும், இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
(த-ஜ-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையின் கடின உழைப்பே முதலிடம் பெறக்காரணமாகியது

## கலைப்பிரிவில் வவு. மாவட்டத்தில் முதலிடம் பெற்ற கம்சாயினி தெரிவிப்பு



வவுனியா, ஜன.6

எனது அப்பா மாட்டில் பால் கறந்து விற்று, அதன் மூலம் கிடைத்த வருமானத் திலேயே என்னைப் படிப்பித்தார். அதை உணர்ந்த தால் தான் நானும் விடாமுயற்சியுடன் கல்வி கற் றேன்.- இவ்வாறு வவுனியா மாவட்டத்தில் கலைப் பிரிவில் 3 ஏ சித்தி பெற்று முதலாம் இடம்பெற்ற செல்வி கம் சாயினி அழகு சுந்தரம் தெரிவித்தார்.கடந்த ஞாயிற் றுக்கிழமை2015ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளி யாகியிருந்தன. அதில் கலைப் பிரிவில் வவுனியா மாவட்டத்தில் கம்சாயினி முதலிடம் பெற்றிருந்தார். அவரிடம் இது குறித்து கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.நான் பிரத்தியேக வகுப் புக்களுக்குப் போகவில்லை. பாடசாலை ஆசிரியர்கள் கற்பிக்கும் விடயங்களை வீட்டில் வந்து படிப்பேன். அம்மாவும் அப்பாவும் எனக்கு உற்சாகம் தந்து படிக்கச் சொல்லுவார்கள் என்று தெரி வித்தார் கம்சாயினி.எங்கள் வீட்டில் சரி யானபெருளாதார கஷ்டநிலை. அப்பா மாடு வளர்க்கிறார். பால் கறந்து அதனைக் கொண்டுபோய் விற் றுத்தான் என்னைப் படிப்பித்தார். நான்இந்தப் பெறுபேற்றைப் பெறுவதற்கு முதல் காரணம் அப்பா தான் என்றும் அவர் தெரி வித்தார்.

விளையாட்டுத்துறையில் உள்ள ஈடுபாடு, சங்கீதம் பாடுவதில் உள்ள ஆர்வம் என்பவை படிப்புக்கு ஆறுதலையும், உற் சாகத்தையும் ஊட்டி ன. பாட சாலை யில் கல்வி கற்பித்த ஆசிரியர்களும் எனக்கு உதவிபுரிந்தனர். எதிர்காலத்தில் பல் கலைக்கழகம் சென்று வரலாற்று ஆசிரி யராகி, எமது வரலாற்றைச் சரியாக எமது சமூகத்துக்குக் கற்பித்து சமூகப் பற்றை ஊக்குவிப்பதே எனது தலையாய இலக்கு. என்ன கஷ்டங்கள் வந்தாலும் மாண வர்களாகிய நாங் கள் கற்றலில் கவனம் செலுத்த வேண்டும். - என்றார் கம்சா யினி.

(ற-ஜ-402)

# பெரியோர்களின் ஆலோசனையை பின்பற்றியதால் கிடைத்தது வெற்றி

## வவு. மாவட்டத்தில் உயிரியல் பிரிவில் முதலிடம் பெற்ற லக்சன் கூறுகின்றார்



யாழ்ப்பாணம், ஜன.6

பெரியோர்களின் ஆலோச னையைப்பின்பற்றிப்படித்து பெரியவனாக வரவேண்டும் என்ற ஆர்வமே நான் பெறு பேற்றில் வவுனியா மாவட் டத்தில் முதலாம் இடத்தைப் பெற உதவியது.இவ்வாறு வவுனியா தமிழ் மகாவித்தி யாலத்தைச் சேர்ந்த மாண வன் செந்தில்காந்தன் லக் சன் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 2015ஆம் ஆண்டுக.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளியாகியிருந்தன. அதில் உயிரியல் பிரிவில் வவுனியா மாவட்டத்தில் லக்சன் முதலிடம்பெற்றிருந்தார் அவரிடம் இது குறித்து கேட்டபோதே அவர் இவ்வாறு கூறி னார். எனக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர்கள், பாடசாலைமற்றும்கல்விநிலையங்களை என்றும் மறக்க முடியாது. அம்மா பத்மா யினி, அப்பா வைத்தியர் செந்தில் காந்தன் இவர்கள் என்னைப்படிக்கச் சொல்லி வற்புறுத்து வதில்லை.அவர்களின் அன்பானஅரவணைப் பும்,தியாகமனப்பாங் கும், எனக்குக்கற் கும் ஆர்வத்தைத் தூண்டின என்று கூறினார் லக்சன்.

நம்பிக்கையுடன் கற் றேன். அதனால் வெற்றியடைந்தேன். இந்த மக்களை நேசிக்கின்றேன். அம்மா, அப்பா, ஆசி ரியர், பெரியோரை மதிக்கின்றேன். மதிப்பு வைத்துப் படித்தால் நல்ல பெறுபேறு வரும் என்ற விடயத்தை என்னுடைய நண்பர்களுக்குக் கூறி வைக்கின்றேன். அப்பா மாதிரி சிறந்த வைத்தியராக, சிறந்த வைத்திய நிபுணராக இந்த மண்ணில் நீண்டகாலம் பணியாற் றுவதே எனது இலக்கு. எனது சமூகத்துக் காக என்றும் மேலும் படித்துப் பணியாற் றுவேன்.-என்றார்

(ற-ஜ-402)

# எனது கிராம முன்னேற்றத்தில் எனது பங்களிப்பு இருக்கும்

## மன்னார் மாவட்டத்தில் கலைப்பிரிவில் முதலிடம் பெற்ற றிஸ்வீனா பேகம் தெரிவிப்பு



மன்னார், ஜன.6

எனது தந்தை விவசாயம் செய்கின்றார். சிரமத்தின் மத்தியில் என்னைப் படிப்பித் தார். இந்தச் சந்தர்ப்பத்தில் எனது பெற்றோருக்கு நன் றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். - இவ்வாறு தெரிவித்தார் முசலி தேசிய பாடசாலை மாணவியான றிஸ்வீனா பேகம்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 2015ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளியாகி யிருந்தன. அதில் கலைப் பிரிவில் மன் னார் மாவட்டத்தில் றிஸ்வீனா பேகம் முதலிடம் பெற்றிருந்தார். அவரிடம் இது குறித்துக் கேட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

எனது கற்றல் நட வடிக்கைக்காக பல்வேறு வகை யிலும்உதவிகளைப் புரிந்த பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள் ளுகின்றேன்.

போரால் பாதிக்கப் பட்டு பின் தங்கிய கிராமமாக உள்ள முசலியை எதிர் காலத்தில் முன்னோக்கிக் கொண்டு செல்வதில் எனது பங்களிப்பு இருக்கும் என்றும் தெரிவித்தார் றிஸ்வீனா பேகம்.

(ற-56)

# கற்றலில் கிடைத்த சுதந்திரமே சிறந்த பெறுபேற்றுக்குக் காரணம்

## வவு. மாவட்டத்தில் வர்த்தகப் பிரிவில் முதலிடம் பெற்ற தனுஸ்காந் தெரிவிப்பு



வவுனியா,ஜன.6

கற்பதற்குத் தரப்பட்டிருந்த சுதந்திரமே என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந் துள்ளது என்று வவுனியா மாவட்டத்தில் வர்த்தகப் பிரி வில் 3ஏ சித்தி பெற்று முத லாம் இடம் பெற்ற கிருஸ் ணசாமி தனுஸ்காந் தெரி வித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 2015ஆம் ஆண்டு க. பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளியாகியி ருந்தன. அதில் வர்த்தகப் பிரிவில் வவுனியா மாவட்டத்தில் தனுஸ்காந் முதலிடம் பெற்றிருந்தார். அவரிடம் இது குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

நான் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல் வேன். அங்கு கற்பிப்பதை நன்கு அவ தானிப்பேன். வீட்டில் கற்பதைவிட பாடசாலையில் கற்பிப்பதை அவதா னிப்பது, கற்றலில் வெற்றியைத் தந்தது என்று தெரிவித்தார் தனுஸ்காந்.

இந்தப் பெறுபேறு எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. ஆசிரியர்களும் எனக்குச் சிறந்த முறையில் கற்பித்தார்கள். அவர் களுக்கும் எனது அம்மா சற்குணதேவி அப்பா கிருஸ் ணசாமி ஆகியோருக்கும் எனது நன்றிகள். இவர்கள் தான் எனது வெற்றிக்கு உறு துணையாக இருந்தவர்கள்.

எந்த விடயத்தி லும் கட்டுப்பாடு விதிப்பது எனக் குப் பிடிக் காது. எனது அம்மா,அப்பா எனக்கு எந்த விதக்கட்டுப் பாடுகளும் படிப் பதற்கு விதிக் கவில்லை.நான் மனவிருப்புடன் கற் றேன். சிறந்த பெறுபேற்றைப் பெறாத மாணவர்கள் கவலைப்படவேண்டாம். மீண்டும் முயற்சி செய்யுங்கள். வெற்றி கிடைக்கும்.படிப்பதற்கு எந்தனையோ வழிகள் உண்டு.எந்தத் துறையையும் நீங்கள் தெரிவு செய்து மேற்படிப்பைப் படிக்கலாம்.இதைத்தான் படிக்க வேண் டும் என்ற கட்டாயம் இல்லை. எதையும் சாதிக்கும் மனப்பாங்குடன் செயற்பட்டால் வெற்றி கிடைக்கும். சிறந்த கணக்காளராகி வீட்டுக்கு உழைத்துக் கொடுப்பதே எனது எதிர்கால இலக்கு என்று தனுஸ்காந் தெரிவித்தார்.

(ற-ஜ-402)

# கடின முயற்சியாலேயே அகில இலங்கை ரீதியில் முதலிடம் கிடைத்தது

## குருநாகல் மலியதேவ ஆண்கள் கல்லூரி மாணவன் ஆகீல் முஹமட் தெரிவிப்பு

குருநாகல், ஜன.6

2015ஆம்ஆண்டுக்கான க.பொ.த உயர் தரப்பரீட்சைக்கு தோற்றிய குருநாகல் மலியதேவ ஆண்கள் கல்லூரியில்ஆங்கிலமொழியில் வர்த்தகப்பிரிவில் கல்வி பயின்ற மாணவன் பளீல் முஹமட் ஆகீல் முஹமட் அகிலஇலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள் ளார்.கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியான2015 ஆம் ஆண்டுக்கான க. பொ. த. உயர் தரப் பரீட்சைப் பெறு பேற்று அடிப்படையில் குருநாகல் மலி யதேவ ஆண்கள் கல்லூரியில் ஆங்கில மொழியில் வர்த்தகப் பிரிவில் தோற்றிய பளீல் முஹமட் ஆகீல் முஹமட் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரி வித்த ஆகீல் முஹமட் அகில இலங்கை மட்டத்தில் நான் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொள்வேன் என்று எதிர்பார்க் கவில்லை. நான் முதலில் அல் லாஹ்வுக்கு நன்றி தெரிவிக்கின் றேன் என்று தெரிவித்தார்.

(ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பாடசாலைக் கட்டடத்தில் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம்

## அகற்றுமாறு கோரி மதவுவைத்த குளம் மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

வவுனியா,ஜன.6



வவுனியா மதவுவைத்த குளம் சிறுவர் பாடசாலையில் தண்ணீர் சுத்திரிப்பு இயந்திரம் பொருத்தப் படுமானால் குறித்த பாடசாலை மாணவர்களுடைய கல்வி பாதிப் படையும் எனவும், அதை அங்கி ருந்து வேறு இடத்துக்கு மாற்று மாறும் தெரிவித்து மதவுவைத்த குளம் கிராம சேவையாளருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று முன் னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் வவுனியா மதவு வைத்த குளம் கிராம மக்களால் நேற்றுக் காலை குறித்த சிறுவர் பாடசாலைக்கு முன்பாக நடத்தப்பட்டுள்ளது.

குறித்த கிராம சேவையாளர் மக் களுடன் கலந்துரையாடாமல் தன் னிச்சையாக முடிவெடுத்துள்ளார் என்றும், இது குறித்துப் பிரதேச செய லாளரும் அக்கறை காட்டவில்லை எனவும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டு கின்றனர்.

மதவு வைத்த குளம் கிராமமக்களுக்கு வவுனியா பிரதேச செயலகத்தால் வழங்கப்படவுள்ள உதவித் திட்டத்தின் கீழ் தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று வழங்கப்படவுள்ளது.

இதனை மதவு வைத்த குளம் சிறுவர் பாடசாலையில் (முன்பள்ளி கட்டடத் தில்) வைப்பதற்கு அந்தப் பகுதி கிராம சேவகர் தீர்மானம் எடுத்துள்ளார்.

இந்த இடத்தில் நீர் சுத்திகரிப்பு இயந் திரத்தை வைத்து பொதுமக்களுக்கு விநியோகித்தால் குறித்த மாணவர் களுடைய கற்றல் நடவடிக்கை பாதிக் கப்படும்.

எனவே நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தைப் புதிய கட்டடம் ஒன்றைக் கட்டி அதில் வைக்க வேண்டும் என பொதுமக்கள் தெரிவித்தனர்.

கிராமசேவகர் அந்தப் பகுதி மக்களின் அபிப்பிராயங்கள் எதனையும் கேட்காது தன்னிச்சியாக முடிவுகள் எடுத்து செயற்படுத்துகின்றார் என்றும் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரி வித்தனர்.

இது தொடர்பாக பிரதேச செயலா ளரிடம் தெரியப்படுத்துவதற்காகச் சென்ற கிராம அபிவி ருத்திச் சங்க நிர்வாகி களைப் பிரதேச செய லாளர் தவறான முறை யில் நடத்தி வெளியேறு மாறு கூறியதோடு, கிராம அபிவிருத்திச் சங்கத்தை கலைத்து விடப்போவதாகவும் கூறினார் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வவுனியா பிரதேச செயலாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது; குறித்த கிராம சேவையாளர் அண் மையில் ஓய்வு நிலையை அடையப் போகின்றார். அவருடைய அனுபவத் தில் அவர் சரியான விடயத்தையே மேற்கொள்வார். அவர் மீது எந்தப் பிழையும் இல்லை.

குறித்த கிராம அபிவிருத்திச் சங்கத் தின் செயலாளர், பொருளாளர் தங் களது பிரச்சினைகளை சரியான முறையில் என்னிடம் அணுக வில்லை. இருவரும் கிராம அபிவி ருத்திச் சங்கத்தில் இருப்பதுதான் பிரச்சினை. எனவே அவர்களை மாற்றவேண்டும் என்றுதான் கூறி யிருந்தேன் - என்றார்.

(ற-ஜ-21,402)

# ஆசிரியர்கள் இல்லாதபோதும் 82 சதவீத மாணவர்கள் சித்தி

## வன்னேரிக்குளம் மகா வித்தியாலய மாணவர்கள் சாதனை

கிளிநொச்சி, ஜன.6

கிளிநொச்சி வன்னே ரிக்குளம் மகாவித்தி யாலயத்தில் கலைப் பிரிவில் புவியியல் பாடம் தவிர்ந்த ஏனைய பாடங்களுக்கு எந்த ஆசிரியர்களும் இல் லாத நிலையில் 82 வீதமான மாணவர் கள் சித்தியடைந்துள் ளனர் என்று பாட சாலை அதிபர் தெரிவித் துள்ளார்.

> “உயர்தரப் பிரிவு ஆரம்பிக்கப் பட்டபோது எந்த ஒரு ஆசிரிய ரும் நியமிக் கப்படவில்லை.”

வெளியிடத்தில் இருந்து ஆசிரியர்களைவரவழைத்து மாணவர்களுக்கு பாடங் களை கற்பித்தோம் என் றும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரி வித்ததாவது:-

2013 ஆம் ஆண்டு வன் னேரிக்குளம் மகா வித்தி யாலயத்தில் உயர்தரப் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட போது எந்த ஒரு ஆசிரி யரும் நியமிக்கப்பட வில்லை. பாடசாலையில் உள்ள ஆசிரியர் ஒரு வரைக் கொண்டு வகுப் புக்களை நடத்தி வந்தோம். பின்னர் 2014 ஆம் ஆண்டு புவியியல் பாடத்துக்கு ஒரு ஆசிரியர் நியமிக்கப்பட் டார். உயர் தரத்தில் கலைப் பிரிவில் புவியியல் பாடத் துக்கென நியமிக்கப்பட்ட ஒரு ஆசிரியரைத் தவிர ஏனைய பாடங்களுக்கான ஆசிரியர்கள் நியமிக்கப் படவில்லை. அதனால் பாடசாலை மாணவர்க ளின் உயர்நிலை செயற் பாட்டு நிதி மற்றும் ஏனைய வர்களின் பங்களிப்பு, பழைய மாணவர்களின் ஒத்துழைப்பு என்பனவற் றைக் கொண்டு வெளி யிடத்தில் இருந்து ஆசிரி யர்களை அழைத்து மாண வர்களுக்குப் பாடங்களை கற்பித்தோம்.

இதனால் முதன்முறை யாக கடந்த ஆண்டு பரீட் சைக்குத் தோற்றிய எமது பாடசாலையில் இருந்த மாணவர்களில் 82 வீத மானவர்கள் சித்தி பெற் றுள்ளனர்.

கடந்தாண்டு வன்னேரிக் குள மகாவித்தியாலயத் தில் இருந்து க.பொ.த உயர்தரப் பரீட் சைக்கு 11 மாணவர்கள் தோற்றியி ருந்தனர், அவர்களில் 9 மாணவர்கள் 3 பாடங்களி லும் சித்தியடைந்துள்ள னர்.- என்றார்.

(ற-ஜ- 21,ரி3)

## புதிய நெறியியலாளர் குழு தெரிவு

அச்சுவேலி,ஜன.6

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு புதிய நெறியியலாளர் குழு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் கடந்த ஞாயிற் றுக்கிழமை சங்கமண் டபத்தில் நடைபெற்றது.

அதில் தலைவராக நா.சுந் தரலிங்கம், உப தலை வராக ப.இராசேந்திரம் ஆகியோரும், ஏனைய உறுப்பினர்களாக சு.சுப் பிரமணியம், சி.பகவத் சிங்கம் சி.நாகேந்திரம், சி.புஸ்பகரன், கா.தினேஸ் குமார் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்ட னர்.

(ற-ஜ-11-17)

# ஒரு கோடி ரூபா பணத்துடன் குடும்பப் பெண் தலைமறைவு

## பணத்தைப் பறிகொடுத்தவர்கள் மன்னார் பொலிஸில் முறைப்பாடு

மன்னார், ஜன.6

மன்னாரில் குடும்பப் பெண் ஒருவர் சுமார் ஒரு கோடி ரூபாவை சுருட்டிக் கொண்டு தலைமறைவாகி யுள்ளார். குறித்த பெண் ணிடம் பணம் கொடுத்து ஏமாந்த பலர் தற்போது மன் னார் பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்துள் ளனர்.

சீட்டுப் பிடித்தல், வட்டிக்குப் பணம் வாங்குதல், நகை களைக் தேவைக்கு வாங் குதல் என்பற்றின் மூலமே இந்தப் பெண் பலரை ஏமாற்றியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பெண் இப்போது இந்தியா தப்பிச் சென்றுள் ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தப் பெண்ணின் கண வர் மத்திய கிழக்கு நாடு ஒன்றில் பணியாற்றுகின் றார். குறித்த பெண்ணுக்கு இரு குழந்தைகள் உள்ள னர். இவர் மன்னாரில் பல இடங்களில் வீடுகளை வாட கைக்குஎடுத்து வசித்துள்ளார்.

வீட்டுடன் கூடிய அரிசி ஆலை ஒன்றையும் அவர் நடத்தி வந்துள்ளார். அத னால் பலர் அந்தப் பெண் ணுக்கு அறிமுகமாகி இருந் துள்ளனர். அத்துடன் குறித்த பெண் சீட்டுப் பிடித் தல் போன்ற செயற்பாட் டிலும் ஈடுபட்டிருந்தார்.

இவர் தனக்கு அறிமுக மானவர்களிடம் வட்டிக்குப் பணம் பெற்றுள்ளார். அத் துடன் தேவைக்கெனக் கூறி பல லட்சம் ரூபா பெறுமதி யான நகைகளையும் அவர் வாங்கியுள்ளார். அத்துடன் தனியார் நிறு வனங்களில் குழு அடிப் படையில் கடன்களும் பெற்றுள்ளார்.

குறித்த பெண் பின்னர் தனக்குப் பணம் கொடுத் தவர்களையும், நகை களைக் கொடுத்தவர்களை யும் ஏமாற்றத் தொடங்கி யுள்ளார். இந்த நிலை யில் தற்போது இரு குழந்தை களுடன் குறித்த பெண் தலைமறைவாகியுள் ளார். இவர் சுமார் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் மோசடி செய்துள்ளார் என்று கூறப் படுகின்றது.

(ற-ஜ-56)

# அறிவொளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

வவுனியா, ஜன.6

போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான இலவசக் கல்வி வழங்கி வரும் அறிவொளி கல்வி நிலையத்தால் 276 மாண வர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப் பட்டதுடன் சிறுவர் நூல் ஒன்றும் வெளியிடப் பட்டுள்ளது.

போர் காரணமாக வெகு வாகப் பாதிக்கப்பட்ட வன் னிப் பிரதேசத்தில் மாண வர்களின் கல்வி நிலையை உயர்த்தும் முகமாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி யின் கல்வி மேம்பாட்டு பிரிவால் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர் களுக்கு மெல்லக் கற் றலை வழங்கும் பொருட்டு இலவசக் கல்வி நிலைய மாக அறிவொளி கல்வி நிலையம் கடந்த 2 வரு டங்களுக்கு முன்னர் நெடுங்கேணி, சேனைப் புலவில் ஆரம்பிக்கப் பட்டது.

அதனைத் தொடர்ந்து அது இன்று 9 இடங்களில் தனது இலவச கல்வியை புலம்பெயர் தமிழ் மக் களின் நிதி உதவியில் வழங்கி வருகின்றது. அந்த வகையில் இந்த நிலை யத்தில் கல்வி கற்கும் 276 மாணவர்களுக்கும் இலவச கற்றல் உபகர ணங்கள் வழங்கப்பட்டன. சிறுவர்களின் ஆக்கங் களைத் தாங்கிய அறி வொளி என்ற நூல் வெளி யீடும் இடம்பெற்றது.

வவுனியா, கனகராயன் குளம் மகா வித்தியாலயத் தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ் தேசிய மக் கள் முன்னணியின் தலை வர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம், முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர்களான செல்வராஜா கஜேந்திரன், பத்மினி சிதம் பரநாதன், சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணி வண்ணன், சர்வதேச இந்து இளைஞர் பேரவை யின் தலைவர் சிவபாதம் கஜேந்திரகுமார், வவுனியா தமிழ் சங்கத் தலைவர் எஸ்.என்.ஜி.நாதன், மனித உரிமைச் செயற்பாட்டாளர் அருட்தந்தை சக்திவேல், முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி விநாயகமூர்த்தி மற்றும் பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண் டனர்.

(ற-ஜ-402)

# இந்திய மீனவரின் அத்துமீறலுக்கு இலங்கைக் கடற்படையே காரணம்

## சாந்தி சிறீஸ்காந்தராசா எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.6

இந்திய மீனவர்களால் திட்டமிடப்பட்டு எமது கடல் வளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றமைக்கு இலங்கைக் கடற் படையினரின் கடமை தவறிய செயற் பாடுகளே காரணம் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்காந்தராசா சாடியுள் ளார்.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு கடற்பரப்பரப்புக்குள் றோலர் படகில் நுழைந்த இந்திய மீனவர்கள் தீர்த் தக்கரை கடற்பரப்பில் நின்ற உள்ளூர் மீனவரது படகை முற்றாக சேதப் படுத்தியிருந்ததுடன், வலைகளை யும் சேதப்படுத்தியிருந்தனர். இது குறித்துக் கருத்து தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது:-

முல்லைத்தீவுக் கடற்பரப்பிலிருந்து 5 கடல் மைல் தூரம் வரை இந்திய மீனவர்களின் றோலர் படகு வரும் வரை கரையோரத்தை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள கடற் படையினர் எங்கே போனார்கள்? இவ்வாறு திட்டமிடப்பட்டு எமது கடல் வளங்கள் அழிக்கப்பட்டு வருகின்ற இந்த நிலைமைக்கு கடற்படையின ரின் கடமை தவறிய செயற்பாடுகளே காரணமாகும்.

அத்துடன் பாதிக்கப்பட்ட முல்லைத் தீவைச் சேர்ந்த குறித்த மீனவருக் கான இழப்பீடு நிவர்த்தி செய்யப்பட வேண்டும்- என்றார். (ற-ஜ-21, ரி7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீன்பிடித் துறைமுகங்கள் இந்த ஆண்டு அபிவிருத்தி

## யாழ். அரச அதிபர் தலைமையிலான கலந்துரையாடலில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.6

கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சால் பருத்தித்துறை மற்றும் குருநகர் மீன்பிடித்துறை முகங்கள் இந்த ஆண்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.



பருத்தித்துறை மற்றும் குருநகர் மீன்பிடித்துறைமுகங்கள் தொடர்பான ஆரம்பக்கட்டக்கலந்துரையாடல் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. யாழ். மாவட்ட அரசஅதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் மேற்குறித்த பகுதியில் சாத்திய வள ஆய்வுகளை மேற்கொள்வது தொடர்பிலும், மீன்பிடித் துறைமுகங்களை அமைத்து அதனுடாக முன்னேற்றகரமான செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

இந்தத் துறைமுகங்கள் 7 ஹெக்ரேயர் நிலப்பரப்பில், 200 முதல் 300 படகுகள் தரிக்கக் கூடிய தாக அமைக்கப்படவுள்ளன. மீன்களைப் பாதுகாப்பதற்கான குளிரூட்டிய அறைகள், ஏல விற்பனை நிலையங்கள், எரிபொருள் நிலையம், மீள்களஞ்சியப்படுத்தும் அறை என்பவற்றைக் கொண்டனவாகவும் அவை அமைக்கப்படவுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் நீரியல் வள அமைச்சின் அதிகாரிகள், துறைமுக மற்றும் படகு நிறுத்துமிட அபிவிருத்தித்திட்ட உத்தியோகத்தர்கள், கடற்றொழில் கூட்டுறவுச்சங்கங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற-ஜ-ரி5)

## சாவகச்சேரி நீதிமன்றுக்கு புதிய பதிவாளர்

சாவகச்சேரி,ஜன.6

சாவகச்சேரி நீதிமன்றப் பதிவாளராக ஏ.ஆர்.எம். உவைஸ் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

சாவகச்சேரி நீதிமன்றப் பதிவாளராகப் பணியாற்றிய எம்.எஸ்.எம். நசீர், வவுனியா குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து, மன்னார் மேல்நீதிமன்றப் பதிவாளராகக் கடமையாற்றிய ஏ.ஆர்.எம்.உவைஸ் சாவகச்சேரி நீதிமன்றப் பதிவாளராகப் பொறுப்பேற்றுள்ளார். (ற-ஜ-9)

## நூல் வெளியீடு

புதுக்குடியிருப்பு, ஜன.6

மனநலமருத்துவர்எஸ்.சிவதாசன் எழுதிய "சிறுவர்களுடன்" எனும் நூல் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புதுக்குடியிருப்புமாநாட்டுமண்டபத்தில் நடைபெறவுள்ளது..

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகக் கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.சாந்தினி ஸ்ரீகந்தராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஜ-422)

## வலி.கிழக்கில் இரவுவேளை வாழைக்குலைகள் திருட்டு

அச்சுவேலி,ஜன.6

வலி .கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் நீர்வேலி, சிறுப்பிட்டிப் பகுதிகளில் திட்டமிட்ட முறையில் வாழைக்குலைகள் இரவு வேளையில் திருடப்படுகின்றன என்றும், வாழைத்தோட்டங்களில் காவலுக்கு இருக்கும் விவசாயிகளையும் திருடர்கள்தாக்கமுற்படுகின்றனர் என்றும் வலி. கிழக்கு பிரதேசசெயலக சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

குறித்த பகுதியில் வாழைக்குலைத் தோட்டங்களில் வாழைக்குலைகளை முன்கூட்டியே அவதானித்து வைத்துவிட்டு, இரவுவேளையில் களவாடப்படுகின்றன என்றும், தோட்டங்களில் காவலுக்குத் தங்கி இருக்கும் விவசாயிகளையும் தாக்க முற்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டதுடன்,இதனைக்கண்காணிப்பதற்கும், தடுத்து நிறுத்துவதற்கும் இரவுவேளையில் பொலிஸ் ரோந்து நடவடிக்கை மேற் கொள்ள வேண்டுமென்றும்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சந்தேகமான முறையில் நடமாடுவோரைக்கைதுசெய்ய வேண்டும் எனவும் பொது நிறுவனங்கள் மற்றும் விவசாய அமைப்பு களின் பிரதிநிதிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

கோரிக்கையை ஏற்றுக் கொண்டபொலிஸ்தரப்பினர் வீதிரோந்து நடவடிக்கையை மேற்கொள்ளும்போதுஇரவு வேளையில் சந்தேகமான முறையில் நடமாடுவோர் கைதுசெய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் என்று தெரிவித்தனர்.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் எம். பிரதீபன் தலைமையில் நடைபெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் அச்சுவேலி, கோப்பாய் பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் அதிகாரிகள், கோப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் கே.மகேந்திரன் மற்றும் உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ஜ-11)

## குருநகரில் நேற்றுமுன்தினம் புகையூட்டல் நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம், ஜன.6

குருநகர் பிரதேசத்தில் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக சுகாதாரப் பகுதியினரால் நேற்றுமுன்தினம் காலை மூன்று மணி நேரம் புகையூட்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

ஜே/68, ஜே/69, ஜே/72 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி இந்தப் புகையூட்டல் பணிகள் இடம்பெற்றன.

யாழ்.மாநகர சபை புகையூட்டும் பிரிவினருடன் இணைந்து, பிராந்திய சுகாதார சேவைகள் பணி மனையை சேர்ந்த புகையூட்டும் பிரிவினரும் இந்தப் புகையூட்டும் பணியில் ஈடுபட்டனர்.

காலை 6 மணிக்கு ஆரம்பமாகிய புகையூட்டும் பணிகள் தொடர்ந்து மூன்று மணித்தியாலநேரம் இடம்பெற்றன. புகையூட்டும் பிரிவினர் பதினைந்து குழுக்களாகப் பிரிந்து பிரதேசத்தில் சகல பகுதிகளையும் உள்ளடக்கி பணியில் ஈடுபட்டனர் என்று பிரதேசத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜேராஜா தெரிவித் தார்.

குருநகர்ப் பிரதேசத்தில் டெங்குத் தொற்றைத் தடுக்கும் முகமாக இந்தப் பணிகள் இடம்பெற்றதோடு, அதன் தாக்கம் தற்போது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள் ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-17)

## மாணிக்கவாசகர் விழா

யாழ்ப்பாணம்,ஜன.6

வடலியடைப்பு சித்தி விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் 8 ஆம்திகதிவெள்ளிக்கிழமைகாலை 7மணிமுதல் மாணிக்கவாசகர் விழாவும், திருவாசக முற்றோதலும் நடைபெறவுள்ளன. இதனைத்தொடர்ந்து திருவாசக முற்றோதல் மறு நாள் சனிக்கிழமை காலை 7 மணிமுதல் சங்கானை இலுப்பைத்தாழ் ஸ்ரீ முருகன் ஆலயத்திலும் நடைபெறவுள்ளது. (ற-ஜ-ரி5)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்

கிளிநொச்சி,ஜன.6

சுவிஸில் இயங்கும் நலிவடைந்தோர்உதவிச்சங்கம், வன்னிமாவட்டத்திலுள்ள நூறு வறிய மாணவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கல்வி உபகரணங்களை வழங்கியுள்ளது.

சுவிஸில்வசித்துவரும்புலம்பெயர் தமிழர்கள் இணைந்துஉருவாக்கிய நலிவடைந்தோர் உதவிச் சங்கம், வடமாகாணத்தில் போரால் பாதிக்கப்பட்ட வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தொடர்ந்தும் உதவி வருகிறது.

இதன் அடிப்படையில் கடந்த வாரம் வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக நூறு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளது.

நலிவடைந்தோர் உதவிச் சங்கத்தின் வடபகுதிக்கான இணைப்பாளர் பரா.சந்திரகுமார் தலைமையில் கனகராயன் குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சைவமகா சபைத் தலைவர் சோதி மூர்த்தி, வவுனியா மாவட்ட அறநெறிப் பாடசாலை இணைப்பாளர் வி.குணரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை - இந்த நிகழ்வில் அறநெறிப்பாட சாலையும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சைவமகாசபையின் அனுசரணையுடன் இயங்கும் இந்தப் பாடசாலை பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இயங்கி வரும்.

அதேவேளை, இரு வாரங்களுக்கு முன்புவன்னிமாவட்டத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டுக்குட்பட்ட நூறுமாணவர்களுக்குகல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-115)

## விடுமுறைக்கால கொடுப்பனவு பொங்கலுக்கு முன்

யாழ்ப்பாணம்,ஜன.6

நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 2015 ஆம் ஆண்டுக்கான விடுமுறை நாள் களுக் கான கொடுப்பனவை தைப்பொங்கலுக்கு முன்னர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது என்று சங்கத்தின் பொது முகாமையாளர் கே.சிவலிங்கம் தெரிவித்தார்.

குறித்த சங்கத்தால் பணியாளர்களுக்கான சகல கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த 2015 ஆம் ஆண்டுக்கான சகல கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது விடுமுறை நாள்களுக்கான கொடுப்பனவை வழங்க வேண்டி யுள்ளது. இந்தக் கொடுப்பனவும் எதிர்வரும் தைப் பொங்கலுக்கு முன்னர் வழங்கப்படும்.

பணியாளர்களுக்கான வாழ்க்கைச் செலவு, மேலதிக நேரக்கொடுப் பனவு மற்றும் விசேட படிகள் யாவும் வழமையாக அந்தந்த மாதத்திலேயே வழங்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார். (ற-ஜ-17)

## "சுத்தமான நகரம்" திட்டத்தில் சாவகச்சேரியில் கழிவகற்றல்

சாவகச்சேரி, ஜன.6

சாவகச்சேரி நகர சபையின் "சுத்தமான நகரம்" திட்டத்தின் கீழ் சபையின் பதினொரு வட்டாரங்களிலும் வாகனங்கள் மூலம் கழிவுகளை அகற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கால அட்டவணைப் பிரகாரம், விசேட ஒலிபெருக்கிபொருத்தப்பட்ட கழிவகற்றும் வாகனங்கள் வருகைதரவுள்ளதால் வரியிறுப்பாளர்களை இது விடயத்தில் ஒத்து ழைக்குமாறும், குறித்த தினங்களில் கழிவகற்றும் வாகனங்கள் தமது வீதிக்கு வராத பட்சத்தில் 021 227 0806 இலக்கத் தொலைபேசிக்கு அறிவிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முதலாம் வட்டாரத்தில் 1,12,23 ஆகிய திகதிகளிலும், இரண்டாம் வட்டாரத்தில் 2,13,24 ஆகிய திகதிகளிலும், மூன்றாம் வட்டாரத்தில் 3,14,25 ஆகிய திகதிகளிலும், நான்காம் வட்டாரத்தில் 4,15,26 ஆகிய திகதிகளிலும், ஐந்தாம் வட்டாரத்தில் 5,16,27 ஆகிய திகதிகளிலும், ஆறாம் வட்டாரத்தில் 5,17 ஆகிய திகதிகளிலும், ஏழாம் வட்டாரத்தில் 7,18,29 ஆகிய திகதிகளிலும், எட்டாம் வட்டாரத்தில் 8,19,30 ஆகிய திகதிகளிலும், ஒன்பதாம் வட்டாரத்தில் 9,20,31 ஆகிய திகதிகளிலும், பத்தாம் வட்டாரத்தில் 10,21 ஆகிய திகதிகளிலும், பதினொராம் வட்டாரத்தில் 11,22,28 ஆகிய திகதிகளிலும் கழிவு அகற்றும் வாகனங்கள் வரவுள்ளன.

இந்தத் திகதிகளில் தமது காணிகளில் சேகரித்து வைத்துள்ள குப்பைகளைவாகனத்தில் கையளிக்குமாறும் நகரசபையின் செயலாளர் கா.சண்முகதாசன் அறிவித்துள்ளார். (ஜ-9)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சியை வலியுறுத்தி ஜனவரி 8 இல் போராட்டம்

## நுகேகொடையில் களமிறங்குகிறது ஜே.வி.பி.



கொழும்பு, ஜன. 6

நல்லாட்சியை மலரச் செய்வதற்காக மக்கள் வழங்கிய ஆணையை மீறும் வகையில் புதிய அரசின்செயற்பாடுகள் அமைந்துள்ளன என்று ஜே.வி.பி. குற்றஞ் சாட்டியுள்ளது.

எனவே, மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து நல்லாட்சியை நோக்கிப் பயணிக்குமாறு அரசை வலியுறுத்தி எதிர்வரும் 8 ஆம் திகதி மாலை 3 மணிக்கு நுகேகொடையில் ஆர்ப்பாட்டமும், பேரணியும் நடத்தப்படும் என்றும் அக்கட்சி அறிவித்துள்ளது.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் முற்பகல் பெலவத்தையிலுள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அக்கட்சியின் பிரசாரச் செயலாளரான விஜித ஹேரத் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்கூறியவைவருமாறு– குடும்ப ஆதிக்கத்தைப் பலப்படுத்தவோ, அரசியல் நியமனங்களை வழங்கவோ, ஊழல் மோசடியாளர்களைப் பாதுகாக்கவோ மக்கள் ஆணை வழங்கவில்லை. நாட்டில் நிலவிய எதேச்சாதிகாரத்துக்கு முடிவுகட்டி புதியதொரு அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்காகவே ஜனவரி 8ஆம் திகதி மக்கள் ஆணை வழங்கினர். இதை அரசு இன்னும் உரிய வகையில் புரிந்துகொள்ளவில்லைப் போல் தெரிகின்றது. மக்களின் ஆணைக்கு மதிப்பளிக்காது அதை எட்டி உதைக்கும் வகையிலேயே அரசின்செயற்பாடுகள் இருக்கின்றன.

ஆகவே, நல்லாட்சிக்காக மக்கள் வழங்கிய ஆணையை மதித்துச் செயற்படுமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கவுள்ளது ஜே.வி.பி. இதன் ஓர் அங்கமாக எதிர்வரும் 8ஆம் திகதி ஆர்ப்பாட்டமும் பேரணியும் நடத்தப்படவுள்ளன.

நுகேகொடையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். பிற்பகல் 3 மணியளவில் கொஹுவல மலர்ச் சந்தியிலிருந்து ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமாகும். சிவில்அமைப்புகளின் பிரதிநிதிகள், கலைஞர்கள் என நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காக பாடுபட்ட அனைவரும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்– என்றார். (த–சி)

# சாவுத் தண்டனையை நீக்கவேண்டும் மைத்திரி

## மனித உரிமை ஆணைக்குழு பரிந்துரை

கொழும்பு, ஜன 6

இலங்கையில் சாவுத் தண்டனையை நீக்கவேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இலங்கை மனித உரிமைகள்ஆணைக்குழு நேற்று முன்தினம் பரிந்துரை செய்துள்ளது.

> சுமார் 60 நாடுகளில் நிராகரிக்கப்பட்டுள்ள மரணதண்டனையை இலங்கையிலும் இல்லாது செய்யவேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

சாவுத் தண்டனையை நீக்குவது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நேற்று முன்தினம் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இலங்கை மனித உரிமைகள்ஆணைக்குழு இவ்வாறு பரிந்துரை செய்துள்ளது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளர் கலாநிதி தீபிகா உடகமவால் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

சபாநாயகர் கரு ஜயசூரிய, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோருக்கும் இந்தக் கடிதத்தின் பிரதிகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவால் அனுப்பப்பட்டுள்ளன.

சாவுத்தண்டனையானது கொடூர மற்றும் மனிதாபிமானமற்ற தண்டனையிலிருந்தான சுதந்திரம் மற்றும் உயிர்வாழும் உரிமைகளை கடுமையாக மீறுகின்றதும், மிகக் கடுமையானதும், மாற்ற முடியாத தண்டனையுமாகும். அத்துடன், குற்றத்தைத் தடுப்பதற்குத் திறனற்றதாகவும் உள்ளது என்று வளர்ச்சியடையும் உலகின் ஏற்புடையை விரைவாக இலங்கை அங்கீகரிக்க வேண்டும் என்பதே ஆணைக் குழுவின் நிலைப்பாடாகும் என்று மனித உரிமைகள் ஆணைக் குழு, ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

மேற்படி இந்தக் கடுமையான தண்டனையானது குற்றத்தைத் தடுக்காது எனவும் வளர்ச்சியடைந்த நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. அந்தவகையில், சுமார் 60 நாடுகளால் நிராகரிக்கப்பட்டுள்ள மரண தண்டனையை இலங்கையிலும் இல்லாது செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

இலங்கையின் அரசமைப்பில் மனித உரிமைகளுக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. எனினும், இந்தத் தண்டனை மூலம் மனிதன் உயிர்வாழும் உரிமையும், சுதந்திரமும் முற்றாக இல்லாதொழிக்கப்படுகின்றது என்பதையும் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

சாவுத் தண்டனையானது ஒவ்வொரு குற்றங்களின் தீவிரத் தன்மைக்கமைய சிறைத்தண்டனைக் காலத்தின் பிரதியீடு செய்யப்படல்வேண்டும். அதற்கமைய சமூகத்தில் குறித்த குற்றத்தின் தீவிர தாக்க விளைவைக் கருத்திற்கொண்ட தேசியக் கொள்கையின் அடிப்படையில் சிறைத்தண்டனைக் காலம் மாற்றப்படல் வேண்டும் எனப் பரிந்துரை செய்வதாகவும் மனித உரிமைகள்ஆணைக்குழுஅனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

# பொங்கலுக்கு முன்னர் அமைச்சரவை மாற்றம்

## தொண்டமானுக்கும் அமைச்சுப் பதவி

கொழும்பு, ஜன. 6

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சரவை தைப்பொங்கலுக்கு முன்னர் மாற்றியமைக்கப்படவுள்ளது என நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது.

இந்த அமைச்சரவை மாற்றத்தின் போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரான ஆறுமுகன் தொண்டமான் எம்.பிக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது என்றும் மேற்படி வட்டாரங்களிலிருந்து அறியமுடிகிறது.

தேசிய அரசின் வரவு–செலவுத் திட்டத்துக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவாக வாக்களித்திருந்தது. அத்துடன், மைத்திரி ஆதரவு அணி பக்கமே அந்தக் கட்சி நிற்கின்றது. இதனடிப்படையிலேயே தொண்டமானுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது.

ஜனவரி 4ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சரவையை மாற்றியமைப்பதற்கு அரசு முன்னதாகத் தீர்மானித்திருந்தாலும், நாடாளுமன்றத்தை அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றுவதற்கான யோசனை உள்ளிட்ட சில விடயங்களால் அதை 9ஆம் திகதிக்குப் பிற்போடுவதற்கு அரசு தற்போது முடிவெடுத்துள்ளது.

இதன்படி, மகிந்த ஆதரவு அணியிலிருந்து மைத்திரி அணிக்கு ஆதரவு வழங்கவுள்ள உறுப்பினர்கள்சிலருக்கு அமைச்சு, இராஜாங்க, பிரதி அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

அதேவேளை, நிதி அமைச்சர் பதவியில் மாற்றங்கள் நிகழும் எனக் கூறப்பட்டாலும் இதுபற்றி இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. நிதி அமைச்சர் பதவியிலிருந்து ரவி கருணாநாயக்க நீக்கப்படவேண்டும் என்ற கருத்து தேசிய அரசுக்குள் வலுத்துள்ளது எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பதவியைத் துறந்த திலக் மாரப்பனவுக்கு அமைச்சுப் பதவிவழங்குவது குறித்தும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆக இருக்கவேண்டும் எனக் கூறப்பட்டிருந்தாலும், தேசிய அரசொன்று அமையும் பட்சத்தில் அத்தொகையை நாடாளுமன்றத்தின் ஒப்புதலுடன் 45 ஆக அதிகரித்துக்கொள்ள முடியும். இராஜாங்க, பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க முடியும். (த–சி)

# அவன்கார்ட் தலைவரிடம் ஆணைக்குழு விசாரணை

## பீகொக் மாளிகை உரிமையாளரும் முன்னிலையாகி வாக்குமூலம்



கொழும்பு, ஜன. 6

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதி மற்றும் பீகொக் மாளிகையின் உரிமையாளரும் இலங்கை தொழிற்கட்சித் தலைவருமான ஏ.எஸ்.பி.லியனகே ஆகியோர் பெரும் நிதி மோசடிகள் மற்றும் இலஞ்ச ஊழல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன் நேற்று முன்தினம் முன்னிலையாகினர்.

ரக்னா லங்கா ஆயுதக் களஞ்சிய சாலை நிறுவனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பில் வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதி பல தடவைகள் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டிருந்தார். எனினும், சுகவீனம் காரணமாக அவரால் விசாரணைகளுக்காக முன்னிலையாக முடியவில்லை என அவரது சட்டத்தரணி தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், அவர் நேற்று முன்தினம்பெரியமோசடிகள்தொடர்பில்விசாரணைசெய்யும்ஜனாதிபதி ஆணைக் குழு முன் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு 75 கோடி ரூபா பெறுமதியான பீகொக் மாளிகையை அன்பளிப்புச் செய்வதாகத் தெரிவித்திருந்த அதன் உரிமையாளரும் பிரபல தொழிலதிபரும், முன்னாள் நைஜீரியாவுக்கான இலங்கைத் தூதுவருமான ஏ.எஸ். பி.லியனகே ஜனாதிபதி ஆணைக் குழு முன் முன்னிலையாகியிருந்ததுடன், அவரிடம் இரண்டு மணித்தியாலங்கள் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

மகிந்த ஆட்சிக்காலத்தின்போது நைஜீரியாவுக்கான இலங்கைத் தூதுவராக லியனகே நியமிக்கப்பட்டிருந்தார். அவர் தனக்குச் சொந்தமான ராஜகிரியவில் அமைந்துள்ள பீகொக் மாளிகையை மகிந்த ராஜபக்ச வுக்கு வழங்குவதற்கு முன்வந்தமை தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக் கொள்வதற்கே நேற்று ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தோல்வியுற்ற மகிந்த ராஜபக்ச வுக்கு உத்தியோகபூர்வ இல்லம் வழங்கப்படாமையால் எனது பீகொக் மாளிகையை வழங்க முன்வந்தேன். அதற்கமைய அந்த வீட்டில் சில திருத்தங்களையும் மேற்கொண்டேன். எனினும், மகிந்த ராஜபக்ச எனக்குக் கோடிக்கணக்கான பணம் வழங்க முன்வந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றமை பொய்யானது.

பீ கொக் மாளிகையை பரிசளிப்பதற்கு எனது தரப்பிலிருந்து பெரும் எதிர்ப்புகள் கிளம்பியமையால் நான் முடிவை மாற்றிக்கொண்டேன்" என்று லியனகே ஜனாதிபதி ஆணைக்குழு முன் வாக்கு மூலம் வழங்கியுள்ளார். (த–சி)

# பிரான்ஸ் பிரஜையின் அலைபேசி திருட்டு

கொழும்பு,ஜன.6

பிரான்ஸ் நாட்டவரொருவரின் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான அலைபேசி ஒன்றை ஓட்டோச் சாரதி ஒருவர் திருடியுள்ளார்.

பிரான்ஸ் நாட்டிலிருந்து இலங்கைக்குப் பயணத்தை மேற்கொண்டு, ஹற்றன் சிவனொளிபாதமலைக்குச் சென்ற பிரான்ஸ் நாட்டவர் மீண்டும் விடுதிக்கு ஓட்டோ ஒன்றில் திரும்புகையில், அதன் சாரதி அவரது அலை பேசியைத் திருடியுள்ளார்.

இது தொடர்பாக பிரான்ஸ் பிரஜை ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் தலைமையில் அரை மணி நேரத்தில் ஓட்டோச் சாரதி கைது செய்யப்பட்டார்.

சாரதியிடம் இருந்து மீட்கப்பட்ட அலைபேசி பிரான்ஸ் பிரஜையிடம் கையளிக்கப்பட்டது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யபட்ட ஓட்டோச் சாரதிக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாக ஹற்றன்பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (த–ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 லட்சம் படைச் சிப்பாய்களுக்கு விசேட வரப்பிரசாத அட்டைகள்

கொழும்பு, ஜன.6
மூன்று லட்சத்துக்கும் அதிகமான படைச் சிப்பாய்களுக்கு விசேட வரப்பிரசாதங்களைக் கொண்ட விசேட வரப்பிரசாத அட்டைகளை விநியோகிக்க பாதுகாப்பு அமைச்சு, தேசிய பாதுகாப்பு அமைச்சு மற்றும் படைச்சிப்பாய்களின் சேவைக்கான அதிகாரசபை ஆகிய மூன்றும் கூட்டாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.
பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தனவின் ஏற்பாட்டில் வழங்கப்படவுள்ள இந்த விசேட அட்டைகள் மூலம் அதன் உரிமையாளர்கள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் விசேட விலைக்கழிவுகளையும், ஏனைய வரப்பிரசாதங்களையும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும், ஏற்கனவே சுமார் 50 அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் இந்த விசேட சலுகைகளை வழங்க இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.
முதற்கட்டமாக 5 ஆயிரம் படைச் சிப்பாய்களுக்கு எதிர்வரும் 25ஆம் திகதி கொழும்பில் ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள வைபவத்தில் இவை வழங்கப்படுமெனவும் அத்துடன், போரில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த நூறு பிள்ளைகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான புலமைப் பரிசில்களும் இந்த வைபவத்தின் போது வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.
(த-சி)

# சிகிச்சைக்காகக் கைவிலங்கு கழற்றப்பட்ட கைதி தப்பினார்

கொழும்பு, ஜன.6
கராப்பிட்டிய வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட கைதியொருவர் சத்திர சிகிச்சைக்காக அவரது கைவிலங்கு கழற்றப்பட்டுச் சிகிச்சை முடிந்த பின் அவர் வைத்தியசாலையிலிருந்து தப்பியோடியுள்ளதாகக் காலி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.
அக்மீமன பொலிஸ் வலயத்துக்குட்பட்ட தல்கம்பொல பிரதேசத்தில் கடந்த முதலாம் திகதி நடந்த திருமண வைபவமொன்றில் இவர் கலந்துகொண்டிருந்தார். அங்கு இரு சாராருக்கிடையில் ஏற்பட்ட ரகளையொன்றின்போது இவர் உட்பட மேலும் சிலர் வாள்வெட்டுக்கும் தடியடிக்கும் உள்ளானார்கள்.
இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இவரும் வேறொருவரும் அக்மீமன பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கராப்பிட்டிய வைத்தியசாலையில் கைவிலங்குகளுடன் சேர்க்கப்பட்டனர்.
அங்கு இவருக்கு அவசர சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவிருந்ததால்கைவிலங்கு கழற்றப்பட்டு சத்திர சிகிச்சை நடத்தப்பட்டது. அதன்பின் விடுதியில் சேர்க்கப்பட்டிருந்தவர் அடுத்த நாள் (2ஆம் திகதி அதிகாலை அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.
இவரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகக் காலி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (தி)

# குளவிகள் கொட்டி குடும்பஸ்தர் சாவு

கொழும்பு, ஜன.6
நானுஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடரதல்லையில் 65 வயது நபர் ஒருவர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.
நேற்றுச் செவ்வாய்க்கிழமை நண்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான எஸ்.முத்துசாமி என்பவரே உயிரிழந்துள்ளார்.
விறகு வெட்டச் சென்றபோது இவர் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவரது சடலம் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (த)

ஒளிப் படச் செய்தி



# சாவகச்சேரி நகர சபை இதனைக் கவனிக்குமா?



சாவகச்சேரி நகரை அண்டியுள்ள பகுதியில் உள்ள மயானத்துக்குச் செல்லும் வீதியையே படங்களில் காண்கிறீர்கள்.
சாவகச்சேரி நகர சபையினால் பராமரிக்கப்படும் கண்ணாடிப்பிட்டி பிரதேசத்தில் நான்கு மதங்களைச் சேர்ந்தவர்களுக்குமென தனித்தனியான மயானங்கள் நீண்டகாலமாக பாவனையில் உள்ளன.
இந்து மயானம் சிறந்த முறையில் புனரமைக்கப்பட்டு நிரந்தர பணியாளர் மூலம் தினமும் துப்புரவாக வைக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய மதங்களுக்கென ஒதுக்கப்பட்ட மயானங்களுக்குச் செல்லும் வீதியும், மயானங்களும் பற்றைகளாகக் காணப்படுகின்றன. (த-ஐ-9)





# போதைப்பொருள் கடத்தும் முயற்சி முறியடிப்பு

கொழும்பு, ஜன. 6
பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்குப் போதைப்பொருள் கடத்த மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.
லாகூர் விமான நிலையத்தின் ஊடாகப் போதைப்பொருள் கடத்தப்படவிருந்த நிலையில் இந்த முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய இரண்டு பேரை பாகிஸ்தான் அதிகாரிகள் கைது செய்துள்ளனர். ஹெரோயின் போதைப் பொருள் நிரப்பப்பட்ட 107 கப்சியூல்களை அதிகாரிகள் மீட்டுள்ளனர்.
இந்தக் ஹெரோயின் போதைப்பொருளின் சந்தைப் பெறுமதி பல்லாயிரக்கணக்கான அமெரிக்க டொலர்கள் என மதிப்பீடு செய்யயப்பட்டுள்ளது.
ஹானீப் மற்றும் ஜாவெட் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (த)

# கோதுமை மாவின் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜன.6
கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.
இதன்படி, கோதுமை மா கிலோ ஒன்றின் விலை 2 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகக் கோதுமை மாவை விநியோகிக்கும் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.
எது எவ்வாறு இருப்பினும் ஒரு கிலோ கோதுமை மாவுக்கான கட்டுப்பாட்டு விலையாக 87 ரூபா சந்தைகளில் நிலவி வருகின்றது. குறித்த கட்டுப்பாட்டு விலையில் மாற்றம் ஏற்படவில்லை என நுகர்வோர் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.
எனவே அதிக விலைக்குக் கோதுமை மாவை விற்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதிகார சபை மேலும் கூறியுள்ளது.
(தி)

# மேலாடை இல்லாது அலைந்தவர் கைது

கொழும்பு, ஜன.6
நாத்தாண்டி, கொட்டாரமுல்ல பகுதியில், கடவுச்சீட்டு மற்றும் நுழைவிசைவு எதுவும் இல்லாமல், வீதியில் மேலாடை இன்றி அலைந்து கொண்டிருந்த வெளிநாட்டுப் பிரஜை ஒருவரை கொஸ்வத்த பொலிஸார் நேற்றுச் செவ் வாய்க் கிழமை அதிகாலை ஒரு மணிக்கு கைது செய்துள்ளனர். குறித்த நபர் குறித்து கிடைக்கப் பெற்ற தகவலையடுத்தே அவரை பொலிஸார் கைது செய்துள்ள னர். தான் ரஷ்ய நாட்டுப் பிரஜை என்றும் மொஸ்[illegible] இங்கு வந்ததாகவும் த[illegible] 34 வயதாகின்றது என்றும் கைது செய்யப்பட்ட நபர், தான் ஒன்றில் அரைகுறை ஆங்கிலத்தில் எழுதி பொலிஸாருக்குக் கொடுத்துள்ளார். தனக்கு ஆங்கிலம் தெரியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
இவ்வாறு கைது செய்யப்பட்டவர், கடவுச்சீட்டு இல்லாமல், இலங்கையில் தங்கியிருப்பதற்கான நுழைவிசைவு இல்லாமல் எவ்வாறு, எப்போது இங்கு வந்தார் என்பது குறித்து தெரியவில்லை என்றும் இவர் எங்கு தங்கியிருந்தார் என்பது குறித்தும் அறிய முடியாதுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.
[illegible] நாட்டுப் பிர[illegible] நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (த)

# நீதிவான் நெலும்தெனிய இடமாற்றம்

கொழும்பு,ஜன.6
ஊடகவியலாளர் பிரகித் எக்னெலிகொட காணாமற் போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கை விசாரணை செய்து வரும் ஹோமகம நீதிவான் வை.ஆர்.பி. நெலும்தெனியவுக்கு இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகவும், சாதாரண இடமாற்றத்தின் அடிப்படையிலேயே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் நீதிச் சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
இதன் பிரகாரம் நீதிவான் நெலும்தெனிய மொரட்டுவ நீதிமன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். முக்கிய பல வழக்கு விசாரணைகளில் ஈடுபட்டு வரும் காரணத்தால், கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலப்பிட்டிய மற்றும் மேலதிக நீதிவான் நிசாந்த பீரிஸ் ஆகியோருக்கான இடமாற்ற உத்தரவுகள் நீக்கப்பட்டிருந்தன.
இந்த நிலையிலேயே மேற்படி இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளதுடன் எக்னெலிகொட காணாமற் போன சம்பவம் தொடர்பில் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஆறு பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-ஐ-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வெறும் வாய்ப் பேச்சுக்கள் எமக்கு உரிமைகளைத் தரா!

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவுக் கிராம மக்களுக்குச் சொந்தமான, நானூற்று எழுபத்தைந்து(475) ஏக்கர் நிலம், இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டு, இன்னமும் அவர்கள் வசமே உள்ளது.

அந்த நிலத்தை- காணிகளை- உடனடியாக விடுவிக்குமாறு கோரி பொதுஅமைப்புகளும் காணி உரிமையாளர்களும் ஒன்றிணைந்து கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். இராணுவ முகாமின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கேப்பாபிலவில் பூர்வீகமாக வாழ்ந்த மக்கள், சொந்த மண்ணுக்குச் சென்று குடியிருக்க இயலாத நிலையில், கால் ஏக்கர் காணியில் வாழ்ந்து பெரும் இடர்களை அனுபவித்து வருகிறார்கள்.

அதன் மத்தியில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடக்கு மாகாண மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என்று பொதுபொதுக்கையாகத் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டை முன்னிட்டு அலரி மாளிகையில் இருந்து மக்களுக்கு ஆற்றிய விசேட உரையின் போதே, அவர் தமிழ் மக்களின் நிலங்களை திரும்பக் கையளிப்பது குறித்தும் தொட்டுக் காட்டினார்.

ஆனால், அதன் மத்தியில் ஜனாதிபதியின் பணிப்பின் பிரகாரம், வீடமைப்பு அதிகார சபை, விசேட அதிரடிப் படையினருக்கு, ஐந்து ஏக்கர் காணியை வழங்கியுள்ளது.

நாவற்குழி 300 வீட்டுத் திட்டக் குடியிருப்புக்கு அருகில், கடல் ஏரியை அண்டிய பகுதியில், விசேட அதிரடிப் படை முகாம் ஒன்றை அமைக்க ஏற்பாடாகி உள்ளது.

அரசின், ஏன் ஜனாதிபதியினதும் செயல்களும் போக்குகளும், தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களையும் தவிர்க்கமுடியாத தேவைகளையும் தட்டிக் கழித்தே, காலத்தைக் கடத்தும் கோலங்களையே பிம்பமாக முன்னிறுத்துகின்றன.

ஜனாதிபதியையும், ரணில்-மைத்திரி அரசையும் மனதார விரும்பியே, தமக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளையும் வாழ்வி யல் சேவைகளையும் பெற்றுக்கொள்ள இயலும் என்ற எதிர்பார்ப்புடனேயே, இரு தரப்புகளுக்கும் ஆட்சி அதிகாரம் அனுபவிக்க தமிழ் மக்கள் ஆதரவு வழங்கி உதவினர்.

அதற்கான நன்றிக் கடனை, பிரதியுபகாரமாக வழங்கும் நேர்மையான மனதையோ, அன்றி செயலூக்கத்தையோ இரண்டு தரப்பினர்களிடம் இருந்தும் எதிர்பார்க்க இயலவில்லை!


தமிழ் மக்களுக்குச் சகல உரிமைகளும் வழங்கப்படும் என்ற வெறும் வாய்ச் சொற்கள், நாட்டின் ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு கிடைக்கும் உரிமைகளையும், தேவைகளையும் ஒத்ததாக, நிகராக இருக்கும் என்று எதிர்பார்க்க இயலவில்லையே!

எமது நாட்டைப் புதிய பாதையில் வழிநடத்திச் செல்வதற்கு வகை செய்யப்படும் என்றும்--

நாட்டில் சட்டம் ஒழுங்கை உறுதிப்படுத்தும் சமூக முறையை உருவாக்க எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் சிலாகித்துப் பேசியுள்ளார்.

ஆனால், இப்போதைய ஆட்சியாளர் தரப்பினரின் உரைகளுக்கும், நடைமுறைகளுக்கும் இடையில், மிகப்பெரிய இடைவெளி காணப்படுவதைத் தவிர்க்க வேண்டும். அதனைநாடி, ரணில் அரசு தனது வாக்குறுதிகளை மனதார்ந்து, செயல்வடிவில், வெளிக்கொணர வேண்டும். இல்லையேல் யாவும் 'அம்போ' என்றாகி விடும்....!

# ராஜபக்சவின் புதிய அரசியல் உபாயத்தை சிறிசேன முறியடித்து விடுவாரா?



சண்டேரைம்ஸ் கட்டுரையில் இருந்து
ரெங்கன்

ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்துள்ள பங்காளிக் கட்சிகள் தமது கூட்டமைப்பை மேலும் உறுதி செய்து கொள்வதற்கான இரண்டு ஆவணங்களைத் தயாரிப்பதில் இப்போது இறங்கியுள்ளன. ஒன்று, முறையான ஒரு பொது உடன்பாடு. ஏற்கனவே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் நடைமுறையில் இருந்துள்ளது. இப்பொழுது தமது கூட்டமைப்பு பதவியில் இருக்கப் போகும் காலம் வரை வழிகாட்டும் வகையில் ஓர் ஆவணம் தேவையென்று அவர்கள் கருதுகிறார்கள். அந்த வகையில் இரண்டாவது ஆவணம், ஐக்கிய தேசிய முன்னணிக்கான அமைப்புச் சட்டம் ஒன்று இருக்க வேண்டும் என்பதன் அடிப்படையிலானதாகும்.

> வரவு– செலவுத் திட்டத்தைக் கடுமையாகக் குறைகூறுகின்ற பெரும்பாலான மத்திய தர வகுப்புக்களைச் சேர்ந்த அனேகர் இந்த அரசை ஆதரித்தவர்கள் என்றும் ரணவக்க கூறினார்.

இந்த ஆவணத்தின் வரைவை சட்ட நிபுணர்கள் குழுவொன்று ஆராய்ந்து வருகின்றது. அது இந்த மாதம் கையெழுத்திடப்பட விருக்கின்றது என்று ஐ.தே. கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார். பங்காளிக் கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடுகளில் ஒன்று என்னவென்றால், ஜனாதிபதித் தேர்தலின்போதும் பொதுத் தேர்தலின் போதும் கைலஞ்சம், ஊழல் மற்றும் தகாத செயல்கள் தொடர்பாக அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருப்பது பற்றியதாகும். ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச்செயலாளர் அமைச்சர் சம்பிக்க ரணவக்க இதுபற்றி குறிப்பிடுகையில், செயற்பாடுகள் நகரும் முறையைப் பார்த்தால் எமக்கு மகிழ்ச்சியளிப்பதாக இல்லை. அவன்ட்கார்ட், ஆர்.ஏடி.ஏ. மற்றும் இவை போன்ற பிரச்சினைகள், பில்லியன் கணக்கில் ஒழுங்கீனங்கள் தொடர்பாக இன்னமும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை–என்றார்.

ஆனால் கபீர் ஹாசிம் இதற்குக் காரணம் சட்ட நடைமுறைகளில் ஏற்படும் தாமதம் என்று கூறினார். அதேநேரம் அதிகாரிகள் பலர், முன்னைய அரசுக்கு விசுவாசமானவர்களாக இருந்து வருகின்றனர். அவர்கள் புலனாய்வுகளை நிறுத்தவும், வேறு வகையில் தலையிடவும் செய்கிறார்கள்–என்றார். வரவு–செலவுத் திட்டத்தைப் கடுமையாகக் குறை கூறுகின்ற பெரும்பாலான மத்திய தர வகுப்புக்களைச் சேர்ந்த அனேகர் இந்த அரசை ஆதரித்தவர்கள் என்றும் ரணவக்க கூறினார்.

வெளிநாடு சென்று ஓய்வெடுத்துக் கொண்டு திரும்பியுள்ள நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கடுப்புடனேயே காணப்பட்டார். குற்றச்சாட்டுக்கள், விமர்சனங்கள் தொடர்ந்து இடம்பெற்ற போதிலும், அங்கீகரிக்கப்பட்டுள்ள வரவு–செலவுத்திட்ட முன்மொழிவுகளை தாம் தொடர்ந்தும் முன்னெடுக்கப் போவதாக அவர் தமது அமைச்சு அதிகாரிகளிடம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கூறியுள்ளார்.

அவர் பத்திரிகையாளர்களிடம் கூறுகையில்; கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து 51 அமைச்சுக்களின் ஊடாக 482 அம்சங்களை நடைமுறைப்படுத்த ஆரம்பித்திருக்கிறோம் என்று கூறினார். நிதி ஒழுங்குமுறை உச்சமுறையில் கடைப்பிடிக்கப்படும், வருமானம் சேகரிக்கப்படும். நிதிநிலை அறிக்கையானது வெட்டி ஒட்டுகின்ற ஒரு வேலையன்று-என்றார். பல்வேறு மட்டங்களில் அவை குறித்து விவாதித்திருக்கிறோம். 97 வீத மக்கள் அவைகளை ஆதரிக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும் என்று அமைச்சர் கூறினார். ஏனையவர்கள் எப்போதுமே திருப்தியடையாதவர்கள்-என்றார். முன்னாள் ஜனாதிபதி 350 பில்லியன் ரூபாவுக்கான செலுத்தப்படாத நிலுவைகளை விட்டுச் சென்றுள்ளார் என்று குறிப்பிட்ட அமைச்சர், இதில் 175 பில்லியன் ரூபாவை நாங்கள் கடந்த வருடம் செலுத்தியுள்ளோம்-என்றார்.

கடந்த 27 ஆம் திகதி மாத்தறை மாவட்டத்தில் ஊறுபொக்க ஹொரகஸ்மண்டிய என்ற இடத்தில் மாகாண சபை உறுப்பினர் சரத் டி அல்விஸ் என்பவரின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் காரியாலயத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச திறந்து வைத்தமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தது. அங்கே அவர் பேசுகையில்; கட்சியிலிருந்து ஆள்கள் துரத்தப்படுவார்களானால் அவர்கள் தங்களுக்கென புதிய கட்சியொன்றை ஆரம்பிப்பதைவிட வேறு வழியில்லை என்று கூறினார். அது நிச்சயமாகக் கட்சித் தலைவரான சிறிசேனவுக்கு விடுக்கப்பட்டதொரு செய்தி என்பதில் சந்தேகம் சிறிதும் இல்லை. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் முழுக்கட்டுப்பாட்டையும் தமது ஆளுமைக்குள் கொண்டுவரவும் ராஜபக்சவுக்குக் கட்சியில் பொருத்தமான ஒரு பதவியைக் கொடுத்து கட்சியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் சிறிசேன பகீரதப் பிரயத்தனம் செய்து வருவது தெரிந்ததே. அவ்வாறு இல்லையெனில் கட்சி பிளவுபடுவதைத் தவிர்ப்பது சாத்தியமில்லாதுபோகும்.

ராஜபக்ச அதன் பின்னர் பத்திரிகையாளர் சந்திப்பொன்றையும் நடத்தியிருந்தார். எனது கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சியாகும். நான் ஓர் ஆள்தான் கட்சியை விட்டு விலகாதவன். நான் ஓர் ஆள் தான் எமது கட்சியை ஐ.தே.கவுக்குக் காட்டிக் கொடுக்காதவன். அரசியலிலுள்ள அனேகர் தமது கட்சிகளைக் காட்டிக் கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் அதைச் செய்யவில்லை. அதை நாங்கள் ஒரு போதும் செய்யமாட்டோம். புதிய கட்சியொன்று உதயமாகப்போவது பற்றி எனக்குத் தெரியாது. எதுவானாலும் நிலைமைகளைப் பார்க்கையில் புதிய கட்சிகள் உதயமாகாது என்று கூறமுடியாது. அவர்கள் ஒரு கட்சியிலிருந்து துரத்தப்பட்டால் அவர்கள் எங்காவது போயாக வேண்டும். அவர்கள் புதிய கட்சியும் ஆரம்பிக்கலாம். அதனால் புதிய கட்சிகளும் உருவாக முடியும்.

இப்பொழுது அரசு எதிர்க்கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து கொண்டு செயற்பட்டு வருகின்றது. சரியான மார்க்கத்தில் பயணிப்பதானால் பலமான எதிர்க் கட்சியொன்று இருக்க வேண்டும். பலமான எதிர்க்கட்சி இல்லாது போனால் அரசு வழிதவறிப் போய்விடக்கூடும். நிதிநிலை அறிக்கையின்போது இது வெளிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, வலுவான எதிர்க் கட்சி ஒன்றை வைத்திருக்க வேண்டியது அனைவரதும் பொறுப்பாகும்-என்றார் ராஜபக்ச.

பதவியிலிருந்தபோது தமது அரசைப் பலப்படுத்துவதற்கு எதிர்த்தரப்பிலிருந்து பெரும் எண்ணிக்கையானவர்களை தம்பக்கம் சாய்த்துக் கொண்டவர் இவர். அது ஒரு காலம். சிறிசேன பதவி ஏற்றதன் பின்னர் சுதந்திரக் கட்சியின் கிளைக்காரியாலயம் ஒன்றை ராஜபக்ச திறந்து வைத்திருப்பது இதுவே முதல் தடவை. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிறிசேனவுக்கு ஒரு செய்தியை அவர் வழங்கியிருப்பதும் குறிப்பிடக்கூடியது. இது ராஜபக்சவின் புதியதோர் அரசியல் உபாயமாகத் தெரிகின்றது. இப்பொழுது புதிதாக உருவாக்கப்பட்டு வரும் எதிர்த்தரப்பு இணைந்த கூட்டணிக்கு அவருடைய ஆசீர்வாதமும் ஆதரவும் நிறையவே உண்டு. ராஜபக்ச ஆதரவுக் குழுவின் தலைவராக விளங்கும் நாடாளு மன்ற உறுப்பினர்களின் தலைவர் தினேஷ் குணவர்த்தன கூறுகையில்; புதிய கூட்டணி அமைப்பதற்கான பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. மீண்டும் கூடவிருக்கின்றோம். பலகட்சிகள் நாடாளு மன்றத்துக்கு வெளியில் இருந்தும் இணையவிருக்கின்றன-என்றார்.

இவ்வாறு தற்போதைக்கு சுதந்திரக் கட்சியிலிருந்து கொண்டே கட்சியில் சிறிசேன முழுக் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது அவரது திட்டமாகத் தெரிகின்றது. அதனால் கட்சிக்குள் இரண்டு அதிகார மையங்கள் நிலவும் சாத்தியம் ஏற்படப் போகின்றது. என்றாலும், உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் கட்சியின் முழுக்கட்டுப்பாட்டையும் சிறிசேனவால் உருவாக்கிக் கொள்ள முடியுமா என்பது இனிமேல்தான் தெரியவரும்.

> “தற்போதைக்கு சுதந்திரக் கட்சியிலிருந்து கொண்டே கட்சியின் சிறிசேன முழுக் கட்டுப்பாட்டையும் நிலை நாட்டிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது அவர் திட்டமாகத் தெரிகின்றது.”

## திறப்பு விழாவுக்கு முதலமைச்சர் வருகை தராதது ஏன்?

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் மற்றும் ஏனைய 13 உறுப்பினர்களின் தளராத முயற்சியால் பலகோடி ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்ட திட்டம் சங்கானை புதிய மீன் சந்தையாகும்.

இந்தச் சந்தையை முன்கொண்டு வருவதற்காக முன்னாள் தவிசாளர் அயராத முயற்சியை முன்னெடுத்து வந்ததுடன் சபையினது அங்கீகாரத்தையும் பெற்றிருந்தார்.

இந்த நிலையில் வடமாகாணத்தின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இந்தச் சந்தை திறப்பு விழாவை புறக்கணித்ததுடன் தனது செய்தியை கௌரவ உறுப்பினர் ஊடாக வாசிக்க வைத்திருந்தார்.

பட்டின அபிவிருத்திச் சபையினர் தங்களது செலவில் நினைவுக் கல்லை உருவாக்கி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் முதலமைச்சரின் அனுமதியின்றி பொறித்துள்ளமை நிகழ்வுக்கு வந்த அனைவரையும் வெறுப்படையச் செய்துவிட்டது.

முன்னாள் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் பெயரை முதலில் அங்கு பொறித்துவிட்டு ஏனையவர்களின் பெயரைப் பொறித்திருந்தால் மீனவர்களாகிய நாம் ஏற்றிருப்போம். ஆனால் இதற்கு முற்றிலும் மறுதலையாக காணி விடயங்கள் தொடர்பாகப் பேசியவர்கள் குப்பை அரசியல் செய்து முடித்துள்ளனர்.

மேலும் பிரதேச சபையானது முன்னாள் தவிசாளருக்கோ அல்லது உறுப்பினர்கள் (14 பேர்) எவருக்குமோ அழைப்பிதழ்கூட அனுப்ப விரும்பவில்லை.

தன்னிச்சையாக பிரதேச சபைச் செயலாளர் ஒரு சிலருக்கு அறிவித்துவிட்டு சந்தை புனரமைப்புடன் தொடர்புபடாதவர்கள் தமக்குத் தாமே மாலைகளை அணிவித்து, தங்களையே புகழ்ந்து விட்டு சந்தை திறப்பு விழாவை குப்பையாக்கி சீர்குலைத்து விட்டமை நல்லதாகப் போய்விட்டது.

இந்த நிகழ்வில் வடமாகாண முதலமைச்சரும் அங்கு வருகை தராமல் விட்டது குறையே.

எனவே பொருத்தமில்லாத கல்லை அகற்றி உதவ சங்கானை வாழ் மக்களுக்கு மீனவ சங்கங்களும் ஒன்றாக திரண்டு முழுமைக்கு ஒத்துழைப்போம். இடம்பெற்ற ஊழல் மோசடியை விசாரணை செய்வோம்.

இந்த விடயத்தில் வடமாகாண முதலமைச்சர், அமைச்சு கூடிய கவனம் எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

மு.க.செல்வநாயகம்
சங்கானை.

## நூல்களைத் தயாரிப்பதில் குறைபாடுகள் வேண்டாம்

தரம் ஒன்று மாணவர்களுக்கெனத் தயாரிக்கப்பட்டுள்ள தமிழ்ப்பாட நூல்களில் காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பாக கல்வியாளர் ஒருவர் உதயன் பத்திரிகையில் எழுதிய கட்டுரையை வாசித்தபோது பெற்றோர் என்ற வகையில் பலரும் அதிர்ச்சிக்கு ஆளாகியிருப்பார்கள்.

எமது நாட்டின் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் எந்த அளவுக்கு திறமையற்ற வகையில் இயங்குகின்றது என்பது இந்தக் கட்டுரையின் வாயிலாகப் புரிகின்றது. பாலர்களுக்கான நூல்களைத் தயாரிப்பதில் அதிக கவனம் செலுத்தப்படல் வேண்டும். அவர்களின் கல்விக்கான அத்திபாரத்தைப் பாதிக்கும் வகையில் நூல்களில் குறைபாடுகள் இருக்குமாயின், பாலர்களின் எதிர்காலக் கல்வியே கேள்விக் குறியாகிவிடும். இத்தகைய நூல்களைத் தயாரிக்கும்போது அதற்குரிய ஆலோசனைச் சபையில் அறிஞர்கள் இடம்பெற்றிருத்தல் அவசியமாகும். அத்துடன் அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனைகளும் பெறப்படுதல் அவசியமானதாகும்.

வெறுமனே அரைவேக்காட்டுத் தனத்துடன் பாலர்களுக்கான நூல்களைத் தயாரித்து அவர்களின் எதிர்காலத்தைப் பாழாக்க வேண்டாமெனப் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தி.மகேஸ்வரி , உடுவில்

## பாராட்டுதல்களுக்கு உரியவர்கள்

யாழ்ப்பாணத்துக்கும் காரைநகருக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 786 ஆம் இலக்க அரச பஸ்ஸில் எனது அயலவர் ஒருவர் தமது வங்கிப் புத்தகம், தேசிய அடையாள அட்டை, ஏ.ரி.எம். அட்டை ஆகியவற்றை இரண்டொரு தினங்களுக்கு முன்னர் தவறவிட்டிருந்தார். இதனால் அவர் மிகுந்த மனவேதனையுடன் காணப்பட்டார்.

இந்த நிலையில் குறித்த பஸ்ஸில் கடமையில் இருந்த சாரதியும், நடத்துநரும் தவறவிடப்பட்ட ஆவணங்களை உரியவரிடம் ஒப்படைத்துள்ளனர். இவர்களது இந்தச் செயல் பாராட்டத் தக்கது.

நா. நிர்மலாதேவி
வட்டுக்கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மேடம்

முன்னெடுக்கும் காரியங்கள் அனைத்திலும் திறம்படச் செயற்பட்டு வெற்றி பெறக்கூடிய ஆற்றல்கொண்ட மேட ராசிக்காரர்களே, இந்த ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் ராசியாதிபதி செவ்வாய்க்கு நட்புக் கிரகமான பொன்னவன் எனப் போற்றக்கூடிய குரு பகவான், பஞ்சம ஸ்தானமான 5-ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்வது அற்புதமான அமைப்பாகும். இதனால் பொருளாதார ரீதியாக உயர்வான நிலை இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தரக்கூடிய சம்பவங்கள் நடைபெறும்.

இதுமட்டுமன்றி 08-01-2016 முதல் கேது பகவான் இலாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், எல்லா வகையிலும் அனுகூலமான பயன்களை அடையமுடியும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கும் இலாபங்கள் பெருகும். சிலருக்கு வீடு, மனை வாங்கக்கூடிய யோகமும் உண்டாகுமானாலும், இந்த ஆண்டு முழுவதிலும் சனி பகவான் 8 இல் சஞ்சரிப்பதால் அஷ்டமத்துச் சனி நடைபெறுவது சற்று சாதகமற்ற அமைப்பாகும். ஆண்டின் தொடக்கத்தில் நற்பயன்களை வாரிவழங்கும் குரு பகவான், வரும் 02-08-2016 முதல் ரோக ஸ்தானமான 6ஆம் வீட்டில் சஞ்சரிக்கவிருப்பது அனுகூலமற்ற அமைப்பாகும்.

இதனால் அலைச்சல், தொழில், உத்தியோக ரீதியாக நெருக்கடிகள் போன்றவை ஏற்படும். எனவே 2016-ஆம் ஆண்டின் முற்பாதியில் சாதகமான பயன்களை அடைந்தாலும், பிற்பாதியில் மிகவும் கவனத்துடன்நடந்துகொள்வது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி பாதிப்புக்கள் ஏற்படும். குடும்பத்திலுள்ளவர்களாலும் மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். பணவரவிலும் நெருக்கடிகள் நிலவும். பணக் கொடுக்கல்-வாங்கலிலும் கவனம் தேவை.

### உடல் ஆரோக்கியம்

உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை எடுத்துக்கொள்வது நல்லது. அடிக்கடி சிறுசிறு பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிட்டாலும், சில மருத்துவச் செலவுகளுக்குப்பின் குணமாகும். குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் ஆரோக்கிய பாதிப்புகள் ஏற்பட்டு மருத்துவச் செலவுகளை எதிர்கொள்ள நேரிடும். உற்றார், உறவினர்களும் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்துவதால் மன நிம்மதி குறையும். பயணங்களாலும் அலைச்சல், உடல்சோர்வு உண்டாகும்.

### குடும்பம், பொருளாதார நிலை

பணவரவுகள் ஆண்டின் முற்பாதியில் வெகுசிறப்பாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், ஒற்றுமையும் நிலவும். சுப காரியங்கள் கைகூடும். புத்திரர்களால் சில கவலைகள் ஏற்பட்டாலும், பெரிய கெடுதியில்லை. உற்றார், உறவினர்களைச் சற்று அனுசரித்து நடந்து கொள்வது நல்லது. ஓகஸ்ட் மாதம் முதல், எல்லாவற்றிலும் கவனமாக நடந்துகொண்டால் மட்டுமே வாழ்வில் நற்பயனை அடையமுடியும்.

### உத்தியோகம்

ஆண்டின் தொடக்கத்தில் தடைப்பட்ட ஊதிய உயர்வு, உத்தியோக உயர்வுகள் கிடைக்கப்பெறும். சற்றே அலைச்சல், ஆரோக்கிய பாதிப்பு ஏற்படும். உயரதிகாரிகளிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. உடன் பணிபுரிபவர்களின் ஒத்துழைப்பால் வேலைப் பளுவைச் சற்றுக் குறைத்துக்கொள்ளலாம். ஓகஸ்ட் மாதம் முதல் பணியில் அதிக கவனத்துடன் நடந்து கொண்டால் வீண் பழிச் சொல்லைத் தவிர்க்கலாம்.

### தொழில், வியாபாரம்

இந்த ஆண்டின் தொடக்கமானது, உங்களுக்கு நல்ல இலாபத்தை ஏற்படுத்தும். எடுக்கும் புதிய முயற்சிகளிலும் வெற்றிகளைப் பெறமுடியும். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்புடையவைகளாலும் இலாபங்கள் உண்டாகும். ஓகஸ்ட் மாதம் முதல் நீங்கள் எதிலும் எச்சரிக்கையுடன் செயற்படுவதே நல்லது. நிறையப் போட்டி பொறாமைகளாலும் தொழிலாளர்களின் ஒற்றுமையற்ற செயற்பாடுகளாலும் இலாபங்கள் குறைந்து மந்த நிலை உண்டாகும். கடன் அதிகரிக்கும்.

### கொடுக்கல்- வாங்கல்

ஆண்டின் தொடக்கத்தில் நல்ல மேன்மைகள் உண்டாகும். தொட்டதெல்லாம் துலங்கும். கொடுக்கல்- வாங்கலும் சரளமான நிலையில் நடைபெறும். ஓகஸ்ட் மாதம் முதல் பிறரை நம்பிப் பண விடயத்தில் முன் பிணை கொடுப்பது, வாக்குறுதி கொடுப்பது போன்றவற்றைத் தவிர்க்கவும். பெரிய தொகைகளை ஈடுபடுத்துவதாலும் வீண் விரயங்கள் உண்டாகும். கொடுத்த கடனை வசூலிக்க முடியாதுபோகக்கூடும்.

### அரசியல்

மக்களின் ஆதரவுபெற அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது நல்லது. எடுக்கும் முயற்சிகளில் சில தடைகளைச் சந்தித்தாலும், இறுதியில் வெற்றிபெறுவீர்கள். ஓகஸ்ட் மாதம் முதல், எதிலும் கவனத்துடன் செயற்பட்டால், பதவியைக் காப்பாற்றிக்கொள்ளமுடியும். மேடைப் பேச்சுக்களில் கவனத்துடன் நடப்பதும், உடனிருப்பவர்களிடம் எச்சரிக்கையுடன் இருப்பதும் நல்லது. கட்சிக்காக நிறைய வீண் செலவுகளும் செய்ய வேண்டி இருக்கும்.

### கலைஞர்கள்

நல்ல வாய்ப்புகள் கிடைக்கப்பெற்று மனமகிழ்ச்சி உண்டாகும். பயணங்களாலும் சாதகமான பயன்களைப் பெறுவீர்கள். பொருளாதார நிலையும் மிகச் சிறப்பாக இருக்கும். ஓகஸ்ட் மாதம் முதல் நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் தடையும், பொருளாதார ரீதியாக நெருக்கடிகளையும் சந்திக்க நேரிடும். ஆரோக்கிய பாதிப்புகளால் தொழில்துறை நிகழ்வுகளில் கலந்துகொள்ள முடியாத சூழ்நிலைகளும் உண்டாகும். தேவையற்ற பயணங்களைத் தவிர்க்கவும்.

### விவசாயிகள்

பயிர் விளைச்சல் மிகவும் சிறப்பாக இருக்கும். போட்ட முதலீட்டுக்கு மேல் இலாபத்தைப் பெறமுடியும். நவீன முறைகளைப் பயன்படுத்தி விளைச்சலைப் பெருக்குவீர்கள். வேலையாள்களின் உதவியும் கிடைக்கும். குடும்பத்தில் சுப காரியங்களும் கைகூடும். சொந்த பூமி, மனை போன்றவற்றையும் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். பொருளாதார நிலை மிகவும் சிறப்பாக இருக்கும்.

### பெண்கள்

ஆண்டின் முற்பாதியில் திருமண சுபகாரியங்கள் கைகூடும். சிலருக்குச் சிறப்பான புத்திர பாக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை சிறப்பாக இருப்பதால், கடன்கள் படிப்படியாகக் குறையும். உடல் ஆரோக்கியத்தில் சற்றுக் கவனம் செலுத்துவது நல்லது. ஓகஸ்ட் மாதம் முதல் பண விடயங்களில் கவனத்துடன் இருப்பது நல்லது.

### மாணவ- மாணவியர்

மாணவர்களுக்குக் கல்வியில் சற்று ஈடுபாடு குறைந்தாலும், முழு முயற்சியுடன் பாடுபட்டால் வெற்றி பெற முடியும். தேவையற்ற நண்பர்களின் சகவாசங்கள் வீண் பிரச்சினைகளை ஏற்படுத்திவிடும். பயணங்களின்போது கவனமாக நடந்துகொள்வது நல்லது. பெற்றோர், ஆசிரியர்களின் ஆதரவைப் பெற கடின முயற்சிகளை மேற்கொள்வது நல்லது. அரசு வழியில் எதிர்பார்க்கும் உதவிகள் சற்று தாமதங்களுக்கு பின்னர் தான் கிடைக்கும்.

### மாதப்பலன் (ஜனவரி)

உங்கள் ராசியாதிபதி செவ்வாய் 7-ஆம் வீட்டில் சஞ்சரிப்பதாலும், குரு அதிசாரமாக 6இல் சஞ்சாரம் செய்வதாலும் குடும்பத்திலுள்ளவர்களிடம் சற்று விட்டுக்கொடுத்து நடப்பது நல்லது. பணவரவுகள் ஏற்ற இறக்கமாக இருந்தாலும் குடும்பத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். (தொடரும்)

# புத்தாண்டிலாவது எமது கல்லூரி புதிய ஒளியைப் பெறட்டும்

வி.ஜெகன்

அன்று அகில இலங்கை ரீதியில் புகழ்பெற்று விளங்கிய எமது உரும்பிராய் இந்துக் கல்லூரி இன்று வாழ்வா? சாவா? என்ற நிலையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றது.

ஏனைய கிராமப்புறப் பாடசாலைகள் பல, வாய்ப்பு வசதிகள் கூட்டப்பட்டு தரம் உயர்த்தப்படுகின்றன. ஆனால் எமது உரும்பிராய் இந்துக்கல்லூரி தரம் குறைக்கப்பட்டு வெறும் சம்பிரதாயமான முறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

மத்திய கல்வி அமைச்சினால் கிராமியப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக நடைமுறைப்படுத்தப்படும் விசேட திட்டங்களான, ஆயிரம் பாடசாலைகள் திட்டம், இசுறு பாடசாலை திட்டம் போன்ற திட்டங்கள் எவற்றிலும் எமது பாடசாலை தெரிவு செய்யப்படாததன் காரணம் என்ன? கல்வி அதிகாரிகள் பதில் கூறுவார்களா?

பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம், பேராசிரியர் துரை மனோகரன், வைத்திய நிபுணர் இந்திரராஜா உட்பட உலகமெங்கும் புகழ்பரப்பும் பல கல்விமான்களை ஈன்றெடுத்த எமது உரும்பிராய் இந்து அன்னையின் இன்றைய நிலை கண்டு மனம் வெதும்புகின்றது.

எமது பாடசாலை பெயரளவில் 1 ஏபி தரப் பாடசாலையாக இருந்தபோதிலும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை நிலையம் எமது பாடசாலையில் அமைக்கப்படுவதில்லை. எமது

> “உலகமெங்கும் புகழ்பரப்பும் பல கல்விமான்களை ஈன்றெடுத்த எமது உரும்பிராய் இந்து அன்னையின் இன்றைய நிலைகண்டு மனம் வெதும்புகின்றது.”

மாணவர்கள் வேறு பாடசாலைகளில் உள்ள பரீட்சை மண்டபங்களிலேயே மிகுந்த சிரமத்துடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதுகின்றனர்.

நல்ல வசதியான விஞ்ஞான ஆய்வுகூடம் இருந்தபோதிலும் க.பொ.த. உயர்தர விஞ்ஞானப்பிரிவு திடீரென மூடப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பங்களில் எல்லாம் பாடசாலை நிர்வாகம் எடுத்த மாற்று நடவடிக்கை என்ன?

எமது உரும்பிராய் இந்து அன்னையின் பிள்ளைகள் நாங்கள். கல்லூரி வளர்ச்சிக்காகக் கூடிய பங்களிப்பைச் செய்யத் தயாராக இருக்கிறோம்.

உதாரணமாக லண்டனில் வதியும் பழைய மாணவர் ஒருவர், தனது சொந்தப் பணத்தை மட்டும் செலவு செய்து நவீன கலை அரங்கைக் கொண்ட ஒரு பெரிய மாடிக்கட்டடத்தைக் கட்டி எமது உரும்பிராய் இந்து அன்னைக்கு வழங்கியமை பலரும் அறிந்ததே.

இதேபோன்று எமது கல்லூரியைப் பொறுத்தவரையில் வசதிவாய்ப்புக்கள் ஏராளம்.

இதனால்தான் வெகுதொலைவில் இருந்தும் பல ஆசிரியர்கள் மகிழ்ச்சியுடன் எமது கல்லூரிக்கு வந்து போகின்றனர்.

ஆகவே புத்தாண்டிலாவது ஆசிரியர்கள், பாடசாலை நிர்வாகம், கல்வி நிர்வாகம், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகிய எல்லோரும் ஒன்றிணைந்து எமது உரும்பிராய் இந்துக் கல்லூரியில் புதியதோர் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலம் எமது கிராமப்புற மாணவர்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளியை ஏற்படுத்துவோம்.

*(கட்டுரையாளர், கல்லூரியின் பழைய மாணவர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழறிஞர்களின் ஆலோசனைகளின் பிரகாரம் பாடநூல்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்




செ.மகேஷ்

புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாகக் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் வெளியிட்டுள்ள தமிழ் நூல்க்ள், தரம் ஒன்றிலே கற்கும் சிறுவர்களுக்குப் பொருத்தமானவையா?

2016ஆம் வருடப் புதிய பாடத்திட்ட அறிமுகத்துக்காகக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் தரம் ஒன்றுக்கான தமிழ் செயல் நூல், தமிழ்மொழி சார்ந்த கேட்டல், பேசுதல், எழுதுதல், வாசித்தல் ஆகிய திறன்களை வளர்க்கும் நோக்கத்துடன் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்ற நம்பிக்கையுடன் பார்க்கப்பட்டது.

ஆனால் அதன் ஆரம்பமே தொடர்பாடலுக்காக(க்) கதைப்போம், பேசுவோம் என்று தலைப்பிடப்பட்டு, ஹலோ! ஹலோ! நான் மாலா கதைக்கிறேன் என்ற வாக்கியத்துடன் தொடங்குகிறது. ஹலோ என்ற தொலைபேசித் தொடர் பாடற் தொடக்கச் சொல் வடமொழி எழுத்துடன் ஆரம்பிக்கிறது.

### நூலின் தொடக்கத்தில் வேற்றுமொழி

தமிழ்மொழி விருத்திக்காக ஆக்கப்பட்டுள்ள நூலின் தொடக்கமே இவ்வாறு வேற்றுமொழி வரிவடிவத்துடன் ஆரம்பமாவது மாத்திரமல்ல. இந்நூல் மாணவர்களுக்கான செயல்நூலா? அல்லது ஆசிரியர்களுக்கான வழிகாட்டிக் கைந்நூலா? ஏன்ற மயக்கத்தையும் ஏற்படுத்துகிறது. செயல் நூல் எனக்குறிப்பிடப்படுபவை தமிழ் மொழிவழி தோன்றும் திறன்களைச் சிறுவர்களிடமிருந்து வெளிக் கொணர்வதுடன், அவை சார்ந்த தொடர்ப்பயிற்சியைப் பேணவும் வளர்க்கவும் தூண்டுதல் வேண்டும், கதைப்போம் அல்லது பேசுவோம் என்ற வகையில் உரையாடல், பாட்டிசைத்தல் என்பவை முன்வைக்கப்படுதல் சிறப்பானதாகும். ஓசைகள் ஒத்திசையும் பாடல்களும் இனிமை செறிந்த உரையாடல்களும் சிறுவர்களைக் கவர்வனவாகும். அந்த வகையில், செயற்பட்டுத் தமிழ் மொழியின் இலக்கண இலக்கியப் பண்புகளை வளர்த்துக்கொள்ளச் சிறுவர்களுக்கு வாய்ப்பளிப்பதே தமிழ் மொழி கற்றல் கற்பித்தலின் நோக்கம் என நம்புகிறேன்.

### தொடர்பாடலுக்கான பக்கங்கள்

தொடர்பாடலுக்காக செவிமடுப்போம், பேசுவோம் எனவும் செவிமடுப்போம், எழுதுவோம் எனவும் சுயமாகப் பேசுவோம் எனவும் தலைப்பிடப்பட்டு, பல பக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை யாவுமே சொற்களஞ்சிய விருத்திக்காகவும், நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்யவும் உதவும் என்ற நோக்கத்துடனேயே தரப்பட்டுள்ளன. அவை ஆசிரியரின் வழிகாட்டலுடன் செயற்படுத்தப்பட வேண்டியவையென்றவகையில், வாசிப்பாகவும், உரையாடலாகவும் சிறுவர்கள் இவற்றைக் கற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை பிறப்பினும், அந்தப் பகுதிகளில் தரப்பட்டுள்ள சொற்கள், வாக்கியங்கள் பல இடங்களில் இனிமை தொலைந்த தன்மையில் சிறுவரின் கவனத்தை ஈர்க்கா நிலையை அவதானிக்கலாம்.

அம்மா இங்கு என்ன வாங்கப் போகிறீர்கள்
அதோ வாழைப்பழம் இருக்கு வாங்குவோம்.
தம்பி, அன்னாசிப்பழமும் வாங்குவோம்
பாட்டிக்கு தோடம்பழமும் அப்பாவுக்கு
விளாம்பழமும் வாங்குவோம்.
கொய்யாப்பழம் மிகவும் ருசியானது.
பலாப்பழம் வாங்குவோம் அம்மா.

என 6ஆம் பக்கத்தில் ஓர் உரையாடல் என்ற வகையில் வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. பேச்சு வழக்கிலுள்ள இங்கு, இருக்கு, ருசியானது ஆகிய சொற் பிரயோகங்கள் தமிழ்மொழியில் இருப்பினும், சரியான சொல் வடிவத்தை அல்லது மொழி வடிவத்தைத் தொடக்கத்திலேயே சிறுவர்களுக்கு அறிமுகம் செய்வதைத் தவிர்ப்பதால், பிழையற்ற தமிழ்மொழி கற்றல் ஆரம்பத்திலேயே தொலைந்து போக வாய்ப்புக்கள் ஏற்படலாம் என்றே எண்ணுகிறேன். இங்கே, இருக்கிறது, உருசியானது என்பனவான சரியான சொற்பிரயோகங்கள் சேர்க்கப்படுவதால் தமிழ்மொழி அறிவு மேம்படுதல் சாத்தியமாகலாம். இந்தப்பகுதியில் பாட்டிக்கு தோடம்பழமும் எனவரும் சொற்றொடர் பாட்டிக்குத் தோடம்பழமும் எனப் புணர்த்தி எழுதப்படுதல் வேண்டும். 'சூப்' செய்வதற்காகக் கோவா, போஞ்சி, கரட் வாங்குவோம் என்ற வாக்கியத்தில் ஆங்கிலச் சொல்லான 'சூப்' என்பதற்குப் பதிலாகக் காய்கறி இரசம் என்ற கருத்தமைந்த தமிழ் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

> மொழி ஒருவனுடைய உயிர்ப்பக்கும் வாழ்வுக்கும் ஆதாரமானது. மொழி உயிர்ப்புடையதாகக் கற்பிக்கப்படுவதும் கற்பதும் எமது கலாசாரத்தின் மேம்பாட்டுக்குத் துணை செய்யும் என்பதை உணர்தல் அவசியமாகும்.

படத்தின் கதையை ஆசிரியர் கூறக் கேட்போம் என்ற 14ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ள படங்கள் தெளிவற்றதாக இருப்பதுடன் சிறுவர்கள் அதனைப் பார்த்து இரசித்துக் கதை கேட்கும் வகையிலும் அவை ஆக்கப்படாமை கவலைக்குரியதே!

அவ்வாறே, தெளிவாகப் பேசுவோம், கதை கூறுவோம் எனத் தரப்பட்ட 21ஆம் பக்கத்தில் தொடங்கி 22ஆம் பக்கம் வரையான படங்கள். சிறுவர்கள் வரைந்தவை போன்று காட்டப்பட்டாலும், சிறுவரிடத்தில் விருப்பத்தை ஏற்படுத்தும் வகையில் அவை வர்ணப் படங்களாக அமையவில்லை.

புத்தகத்தில் அச்சிடப்படக்கூடிய தெளிவான அழகான படங்கள் நிறையவே காணப்படும். எமது சூழலில் படம் பார்த்து வாசிப்போம் என்ற தலைப்புடன் 23ஆம் பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ள படங்கள் சிறுவரைக் கவர்வனவாக இல்லை. இவ்வாறே சிறப்பற்ற படப்பதிவுகள் சிறுவர்களின் கற்றலை ஊக்குவிக்கப் போவதில்லை என்பதே நிச்சயமானதாகும்.

### இனங்காண்போம் வாசிப்போம்

நூலில் 25ஆம் பக்கத்திலிருந்து தொடங்கும் இனங்காண்போம், வாசிப்போம் என்பனவாகிய செயற்பாடுகளுக்காக அனேக பக்கங்கள் தரப்பட்டுள்ளன. அவை சொற்களாலும் வாக்கியங்களாலும் நிரப்பப்பட்டுள்ளன. சிறுவர் பார்க்க விரும்பும் படங்கள் எவையும் அப்பக்கங்களில் இல்லாமையால் அப்பக்கங்கள் சிறுவர்களின் பார்வையில் வெறுப்பையே ஏற்படுத்துவனவாகும். பாடுவோம் என்ற தலைப்பிட்டுத் தரப்பட்டுள்ள குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பாவின் பாடல் ஓசை நயம் தந்து மனதுக்குச் சிறிது குளிர்மை தருகிறது. அவ்வாறே முயல் என்ற தலைப்பிட்ட பாடல், பாடுவதற்கேற்ற வகையில் நன்றாக உள்ளது. நூலின் 51ஆம் பக்கத்தில் பாடுவோம் எனக் குறிப்பிட்டுச் சிறு தலைப்புகளில் நான்கு வரிகளில் அச்சிடப்பட்டுள்ள பாடல்களில் முதலாவது பாடல் எதுகை மோனை பொருந்தச் சிறுவர்கள் விரும்பி இசைக்கும் வகையில் தரப்பட்டுள்ளது. அடுத்துவரும் இரண்டும் பாடல்களும், பாடல் எனக் கூற இயலாத முறையில் வாக்கியக் கோப்புக்களாக உள்ளன. 52ஆம் பக்கத்தில் விலைப்பட்டியலை வாசிப்போம் எனத்தலைப்பிட்டுக் கடைச்சிட்டை ஒன்றின் மாதிரி தரப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ் மொழியின் வளம்தரும் வகை, எவ்வாறு சிறுவர்களுக்கு விளக்கப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

அத்துடன் ஒரு பக்கத்தில் ஒன்று ...இரண்டு... மூன்று... ரெடி... ஆரம்பியுங்கள் என ஒரு வாக்கியம் உள்ளது. இதன் மூலம் தமிழ் மொழிச் சொற்கள் தவிர்ந்த ரெடி போன்ற ஏனைய மொழிச் சொற்களையும் இத்தமிழ் நூலில் சேர்க்க முயலும் நியாயம் எதுவென உணர முடியாதுள்ளது.

இவை தவிர வெளிவந்துள்ள இரண்டு நூல்களிலும் சிறுகதைகளுக்கான கருக்கள் சிறுவர்களின் சிந்தனைக்குப் பொருத்தமானவையா? என்பதையும், வாக்கிய அமைப்பில் தமிழ் மொழியின் இலக்கண இலக்கிய இனிமை புலப்படுமாறு அவை ஆக்கப்படடுள்ளனவா? என்பதையும் கருத்திற் கொண்டு சிந்திக்குமாறு வேண்டுகிறேன் .

முன்னைய நாள்களில் சிறுவர்களுக்கான வாசிப்பு நூல்களாகவும், செயல் நூல்களாகவும் தயாரிக்கப்பட்ட நூல்களின் உள்ளடக்கம் எவ்வாறு சிறுவர்களின் உடல் உள வயதைக் கருத்திற் கொண்டு ஆக்கப்பட்டிருந்தன என்பதையும் அவதானித்தல் நலமெனக் கருதுகிறேன்.

### ஆறுமுகநாவலரின் பாலபாடம்

ஆறுமுக நாவலர் ஆக்கித் தந்த பாலபாடம் தொடக்கம் அண்மையில் வெளிவந்த தமிழ்மலர் வரையான பாட நூல்களையும், செயல் நூல்களையும், கவனத்தில் கொள்வதோடு, தமிழறிஞர்களின் ஆலோசனையைப் பெறுதலும் நலமானதெனக் கருதுகிறேன். இவற்றை உளம்கொண்டு பாலர்களுக்கெனப் பாட நூல்களைத் தயாரிப்பதற்குத் துணிதல் சிறப்பானதாகும்.

மொழி, ஒருவனுடைய உயிர்ப்புக்கும், வாழ்வுக்கும் ஆதாரமானது. மொழி உயிர்புடையதாகக் கற்பிக்கப்படுவதும் கற்பதும் எமது கலாசாரத்தின் மேம்பாட்டுக்குத் துணை செய்யும் என்பதை உணர்தல் அவசியமாகும். தமிழ் மொழி இனிமையானது. அதன் வாழ்வும் வளமும் எமது இருப்பை உறுதி செய்ய வேண்டும் .

கட்டுரையாளர்:
*ஆரம்பக்கல்வி ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காண்டாமிருக வேட்டையில் ஏற்பட்டுள்ளது சிறிய வீழ்ச்சி

ஜோஹான்ஸ்பேர்க், ஜன.6
தென்ஆபிரிக்காவில் கடந்த வருடம் வேட்டையாடப்பட்ட காண்டாமிருகங்களின் எண்ணிக்கை விவரம் பாது காப்பு குழுவினரால் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இந்த மிருகங்களின் அழிவு சற்றுக் கட்டுப் படுத்தப்பட்டுள்தாகக் கூறப்பட்டுள்ளது. காண்டா மிருகங்களின் இல்லம் என அழைக்கப்படும் தென்ஆபிரிக்காவில் 2015ஆம் ஆண்டு ஆயிரத்து 160 காண்டா மிருகங்கள் வேட்டையாடப் பட்டுள்ளன. 2014ஆம் ஆண்டில் இது ஆயிரத்து 215ஆக இருந்தது.
2008 ஆம் ஆண்டிலிருந்து பெறப்பட்ட புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடுகையில் காண்டாமிருகங்கள் வேட்டையாடப்படுவதில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அறிக்கை கூறுகின்றது. ஆனாலும் வேறு ஒரு பாது காப்புக் குழுவினர் இந்தப் புள்ளிவிவரங்களை ஏற்க மறுக்கின்றனர். இதில் குறிப்பிட்டதைவிட அதிகமான காண்டாமிருகங்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

> 2008 ஆம் ஆண்டிலிருந்து பெறப்பட்ட புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடுகையில் காண்டாமிருகங்கள் வேட்டையாடப் படுவதில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அறிக்கை கூறுகின்றது. ஆனாலும் வேறு ஒரு பாது காப்பு குழுவினர் இந்தப்புள்ளிவிவரங்களை ஏற்க மறுக்கின்றனர்.

"புள்ளிவிவரங்களில் குறிப்பிடப்பட்ட தகவல்களைவிட காண்டாமிருக வேட்டை அதிகமாக இடம்பெறுகிறது. இந்தப் புள்ளிவிவரங்கள் உண்மையான பாதிப்பை வெளிப்படுத்துவதில்லை. கொல்லப்பட்ட காண்டாமிருகங்களின் உடல்கள் முட்செடிகளுக்கிடையில் மறைக்கப்படுவது வழமை. அதனால் பலவற்றின் உடல்கள் கண்டறியப்படாமலேயே போய் கணக்கில் சேர்த்துக்கொள்ளப் படுவதில்லை. இதுபோல் வேட்டை தொடர்பில் வெளிவராத இன்னும் பல தகவல்கள் உண்டு" எனத் தெரிவித்தார் பாதுகாப்புக் குழுவினரில் ஒருவரான தொம்சன்.
"தென்ஆபிரிக்க அரசு காண்டாமிருக வேட்டை தொடர்பான உண்மையான புள்ளி விவரங்களை வழங்குவதில்லை. வேட்டையின் சரியான எண்ணிக்கையைக் காட்டாமல் குறைத்தே காட்டுகிறது" என்றும் அவர் குற்றஞ்சாட்டுகிறார். ஆனால், "அரசு துல்லியமான தரவுகளைக் கொடுப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது" என்று தெரிவித்தார் தென் ஆபிரிக்க சுற்றாடல் அமைச்சர் எட்னா மொலிவா.
வேட்டைகாரர்கள் காண்டாமிருகத்தின் கொம்புக்காக அவற்றை வேட்டையாடுகின்றனர். ஆசியாவில் குறிப்பாக வியட்நாமில் அதற்கான கேள்வி அதிகம். காண்டாமிருகத்தின் கொம்பு மருத்துவ பயன்பாடு உடையது என மக்கள் நம்புகின்றனர். ஆனால் இந்த நம்பிக்கைக்கு வலுச்சேர்க்கும் வகையில் விஞ்ஞான ஆய்வு முடிவுகள் எதுவும் கிடையாது. (உ-ரி4)

# 16ஆம் நூற்றாண்டு மண்டையோடு மீட்பு

எடின்பரோ, ஜன.6
எடின்பரோவில் 16ஆம் நூற்றாண்டுக்குரிய மனித மண்டை ஓடு பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் புதையுண்டு இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. வேலையாள்கள் மைதானத்தில் வேலை செய்யும் போது இதைக் கண்டுபிடித்தனர் என்றும் காபன் சோதனை மூலம் இந்த மண்டையோடு 16 அல்லது 17ஆம் நூற்றாண்டுக்கு உரியது என தொல்பொருளியலாளர் அறிவித்துள்ளனர்.
விக்ரோறியா ஆரம்ப பாடசாலை, நியூஹெவின் பிரதேசத்தில் துறைமுகத்துக்கு அண்மையில் அமைந்துள்ளது. இது பழைய காலத்தில் குற்றவாளிகளின் உடல் பொது மக்கள் பார்வைக்காக கட்டித்தூக்கப்பட்டிருக்கும் இடமாகும்.



மண்டையோடு கண்டெடுக்கப் பட்டவுடன் அது 5ஆம் நூற்றாண்டுக்குரியதாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டது. ஆனால் காபன் சோதனை மூலம் அதன் நூற்றாண்டு தீர்மானிக்கப் பட்டது. அந்த இடத்தில் மேலும் 3 பேரின் உடல்கள் புதைக்கப் பட்ட தடங்களும் கண்டுபிடிக் கப்பட்டன. ஆகவே இந்த நபர்கள் குற்றச்செயலுக்காக பொது மக்களின் முன்பு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டவர்கள் என்று கருதப்படுகிறது.
கண்டெடுக்கப்பட்ட மண்டையோட்டினை தொல்பொருளியலாளர்கள் தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றனர். சிதைந்த மண் டையோட்டை சீர்படுத்தும் பணியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். குறித்த மண்டையோட்டுக்கு உரியவருக்கு இறக்கும் போது 50 வயதிருக்கலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது. (உ-ரி4)

# கிளிங்ரன் வேட்பாளர்

வோஷிங்ரன், ஜன. 6
அமெரிக்காவின் முன்னாள் அதிபர் கிளிங்ரன் ஒரு பெண் பித்தர் என்று கடுமையாக விமர்சித்திருக்கிறார் நாட்டின் குடியரசுக் கட்சி அதிபர் வேட்பாளர் டொனால்ட் ட்ரம்.
தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். நேரடி விவாதங்களின் போதும் ஏனைய நேரங்களிலும்கூட அவர் (கிலாரி கிளிங்ரன்) 'ஆபாசம்' என்கிற சொல்லைப் பயன்படுத்துகிறார். நான் ஆபாசமானவனாம். படு ஆபத்தான சொற்களைக்கூட அவர் பயன்படுத்தியிருக்கிறார். பெரும் பெண் பித்தரான ஒரு மனிதர் (கிளிங்ரன்) அவருடைய (கிலாரி) வீட்டினுள் குந்திக் கொண்டிருந்த பொழுது, இரவுண வுக்காக இவரை எதிர் பார்த்துக் கொண்டிருந்தபொழுது என்ன நரகத்தைச் செய்து கொண்டிருந்தார்? என்றார் டரம்.

> நேரடி விவாதங்களின் போதும் ஏனைய நேரங்களிலும்கூட அவர் (கிலாரி கிளிங்ரன்) 'ஆபாசம்' என்கிற சொல்லைப் பயன்படுத்துகிறார்.

அமெரிக்க அதிபர் ஒபாமாவின் பதவிக் காலம் முடிவுறும் நிலையில் விரைவில் அங்கு புதிய அதிப
நடைபெற உள்ளது
சார்பல் ட்ரம்பும் ஜன
பில் கிலாரி கிளிங்ர
றார்கள்.
எடுத்த வீச்சுக்குக்
வெளியிட்டு சர்ச்சை
கொள்பவராக ட்ரம் இ
முன்னரும் ஒரு கூட்
பற்றி ஆபாசமான
அவர் தெரிவித்திருந்
தொலைக்காட்சி தெ
வரைப் பற்றியும் த
ர்சித்திருந்தார். இதன
ஆபாசமான மனித
கண்டனத்துக்கு உள்
இவரது பேச்சு அடங்
இஸ்லாமிய தேசம்
பினர் தமது ஆட்சே
படுத்தி வருகின்றன

# முழுத் தர்பூசணி சாப்பிடும் சிறுவன்

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 10 வயதுச்சிறுவன் ஒருவன், தோல் உட்பட முழு தர்பூசணியையும் சாப்பிடும் வீடியோ காட்சி தற்போது, இணையத் தளங்களில் வேகமாக பரவி வருகிறது.
ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் உள்ளூர் அணிகளுக்கு இடையே கடந்த சனிக்கிழமை கிரிக்கெட் போட்டி நடந்தது. இப்போட்டியை தனியார் தொலைக்காட்சி நிறுவனமொன்று பதிவு செய்து ஒளிபரப்பி கொண்டிருந்தது. போட்டியின் இடைவேளையில் மைதானத்தில் அமர்ந்திருந்த ரசிகர்களை பதிவு செய்த கமராமேன், ஒரு நிமிடம் ஆச்சரியத்தில் உறைந்து போனார். அங்கே மிட்சேல் என்ற 10 வயது சிறுவன், முழு தர் பூசணியையும், தோல் உட்பட அப்படியே சாப்பிட அதை கமராவில் அவர் பதிவு செய்தார். இதைக் கண்டவர்ணனையாளர்களும் ஆச்சரியத்தில் ஆழ்ந்து, அந்தச் சிறுவனை பாராட்டினர். ட்விட்டர் உட்பட சமூகவலைத்தளங்களிலும் இந்த செய்தி பரவிய தால் தர்பூசணி சிறுவன் என்ற பட்டப் பெயருடன் பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் இருக்கின்றன.
பிற இணையத்தளங்களிலும் இந்த வீடியோ வேகமாக பரவி வருவதால், புத்தாண்டின் முதல் இணையதள கதாநாயகனாக மிட்சேல் உருவாகி இருக்கிறான். எனினும் 2 வயது முதல் தான் தர்பூசணியை விரும்பி சாப் பிட்டு வருவதாகவும், தான் ஒரு சரா சரியான குழந்தைதான் என்றும் மிட்சேல் பணிவுடன் தெரிவித்துள்ளான். (உ)



பஸ் தீப்பிடித்து
## சீனாவில் தீயில் கரு

சீனாவின் வடமேற்
உள்ள நிங்ஸியா ஹ
சென்றுகொண்டிருந்
ரெனத் தீப் பிடித்து
பேர் பரிதாபமாக உ
நேற்றுக் காலை 7
நிங்ஸியா ஹியூய்
என்ற எண் கொண்ட
சுன் நகரத்திற்கு செ
ருந்தது. பேருந்து
கடை அருகே வந்த
தீப்பிடித்து எரிந்து.
அதிர்ச்சியடைந்த ம
விட்டு வெளியேற மு
கொண்டனர். இதில்
கருகி பரிதாபமாக
30 பேர் காயமடை
துக்கான காரணம்
ஸார் விசாரணை ந
னர்.

## கொலம்

ரர்பயகோ, ஜன.6
கொலம்பிய நகரா
நகரில் காளையை அ
யில் குறைந்தது 2
டைந்தனர். அதில் 4
கிடமாக இருக்கின்
வைத்தியசாலை வட்
வித்தன. புதுவருடக்
கலாசார நிகழ்வுகள
காளையை அடக்
கொராலிஜா என உ
ளால் அழைக்கப்படு
பல இளைஞர்கள் க
க்கி அங்கு குறிக்க
துக்குள் கொண்டவ
5 நாள் நடைபெறும்
காளை அடக்குவதி
மிக்க பலர் கலந்து

# ரோபோ உருவாக்கும் ஸுக்கர் பெர்க்

முகப்புத்தக நிறுவுநர் மார்க் ஸுக்கர்பெர்க் தனது தனிப்பட்ட மற்றும் அலுவலக உதவிக்காக எளிமையான ரோபோவை தயாரிக்க உள்ளதாகக் கூறியுள்ளார்.
இது குறித்து தனது முகப்பக்கத்தில் கூறியுள்ள மார்க் ஸுக்கர்பெர்க், "இந்த ஆண்டு என் முன்னால் இருக்கும் மிகப் பெரிய சவால், எனக்கான ஓர் எளிமையான ரோபோவை தயாரிப்பதுதான். அயன் மேன் படத்தில் வரும் ஜார்சிஸ் என்ற பட்லர் ரோபோவைப் போல அது அமைய வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.
"எனது தேவைக்காக நான் உருவாக்கப்போகும் இந்த ரோபோ மிகவும் வேடிக்கையாகவும் சவாலாகவும் இருக்கப்போகிறது. உதாரணமாக, எனது நண்பர்களின் முகங்களை அதற்குச் சொல்லிக் கொடுத்து, வீட்டில் அழைப்பு மணி அடித்தால் அவர்களை வரவேற்கும் வகையில் அது அமைய வேண்டும் என்றார். (உ)

# பிள்ளைகளுக்கு 'டாட்டூ' குத்திய தாய் மீது வழக்கு

தன்னுடைய 12 வயது மகனின் கையில் 'டாட்டூ' குத்தினார் என்ற குற்றச்சாட்டில் அமெரிக்காவில் பெண் ஒருவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
நியூயோர்க் மாகாணத்தில் உள்ள சவ்டாகுவா பகுதியைச் சேர்ந்த சண்டிலி தோமஸ் (வயது -34) மீது மற்றொரு குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது. அவரது மற்றொரு மகனான 13 வயதுச் சிறுவனின் கையில் 'டாட்டூ' குத்துவதற்கு 'டாட்டூ கண்'ணைப் (கருவி) பயன்படுத்தினார் என்பதே அந்தக் குற்றச்சாட்டு.
பொலிஸார் இரு சிறுவர்களையும் அழைத்து விசாரித்தபோது அவர்களின் கைகளில் இருந்த 'டாட்டூ'க்கள் கடந்த நவம்பர் மாதம் குத்தப்பட்டவை என்பதைக் கண்டறிந்தனர். தீவிர ஆலோசனைகளின் பின்னர் சிறுவர்களின் தாய்க்கு எதிராக டிசெம்பர் 31ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
நியூயோர்க் மாகாண சட்டப்படி 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்கு 'டாட்டூ' குத்துவது தவறு. அத்தோடு மாகாண அலுவலகத்தில் பதிவு செய்யாத எவரும் 'டாட்டூ' குத்தும் பணியை அல்லது தொழிலைச் செய்யக்கூடாது. தோமஸ் 'டாட்டூ' குத்துவதற்கான எந்த அனுமதியையும் பெற்றிருக்கவில்லை. முதிராப் பிள்ளைகளை சட்டத்திற்கு முரணாக டாட்டூவைக் கையாண்டார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதற்காக அவருக்கு தண்டமும் 90 நாள்கள் வரையான சிறைத் தண்டனையும் விதிக்கப்படலாம். எதிர்வரும் 20ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு வருகிறது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பெண் பித்தர்
# ர் ட்ரம் விமர்சனம்

அதிபருக்கான தேர்தல் ள்ளது. குடியரசுக் கட்சி யும் ஜனநாயகக் கட்சி சார் கிளிங்ரனும் போட்டியிடுகி

க்குக் கருத்துக்களைச் ர்ச்சைகளுக்குள் மாட்டிக் ட்ரம் இருக்கிறார். இதற்கு ரு கூட்டத்தில் கிலாரியைப் சமான கருத்துக்களை த்திருந்தார். அதேபோன்று ட்சி தொகுப்பாளினி ஒரு யும் தரக்குறைவாக விம . இதனாலேயே இவர் ஒரு மனிதர் என்று விமர் சிக் கப்படுகிறார்.

ரின் ரங் ளிங் சால் ”

முஸ்லிம்கள் எவ ரையும் அமெரிக் காவுக்குள் நுழைய விடக் கூடாது என்று இவர் தெரிவித்த கருத்தும் அண் மையில் பலத்த கு உள்ளானது. தற்போது அடங்கிய காணொலியை தேசம் (ஐ.எஸ்) அமைப் ஆட்சேர்ப்புக்குப் பயன் ன்றனர் என்று செய்திகள்



வெளியாகி உள்ளன. இதனை அமெரிக்காவில் தெரியப்படுத்தி அதற்குத் தனது கடும் கண்டனத்தையும் தெரிவித்திருந்தார் கிலாரி.

இந்த நிலையில் கிலாரியின் கணவரான கிளிங்ரனை பெண் பித்தர் என விமர்சித்திருக்கிறார் ட்ரம். இதற்கு முன்னரும் கிளிங்ரன் – மோனிக்கா பாலியல் உறவு குறித்தும் ஆபாசமாக விமர்சித்திருந்தார் ட்ரம். (உ)

## எண்ணெய்த் துறைமுகம் மீது லிபியாவில் ஐ.எஸ். தாக்கு

தமஸ்கு, ஜன.6

ஐ.எஸ். அமைப்பினர் லிபியாவின் சிட்றாவில் உள்ள எண்ணெய்த் துறைமுகத்தைத் தாக்கியுள்ளனர். அவர்கள் உள்ளே நுழைய முற்பட்ட போது காவலாளிகளுடன் மோதல் வெடித்தது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தத் தாக்குதலின்போது ஐ.எஸ். தற்கொலைதாரி குண்டை வெடிக்க வைத்ததில் இருவர் உயிரிழந்தனர்.

கடந்த டிசெம்பரிலும் இந்த எண்ணெய்த் துறைமுகத்தை ஐ.எஸ். அமைப்பினர் தாக்கித் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சி செய்தனர் என்று இது தொடர்பில் கருத்து தெரிவித்த லிபிய இராணுவ அதிகாரி, கோட்டை நுழைவாயில் தொடரணியாக வந்த 12 வாகனங்களால் தாக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

லிபியாவின் சில பகுதிகள் கடந்த ஒரு வருட காலமாக ஐ.எஸ். அமைப்பினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பொழுதும், சிட்றாவை அவர்களால் தம்வசப்படுத்த முடியவில்லை. கடந்த ஒக்ரோபரிலும் அதனைக் கைப்பற்றும் முயற்சி தோல்வியில் முடிந்தது.

லிபிய இணையத்தளம் ஒன்று தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்டனர் எனத் தெரிவித்தது. 2 காவலாளிகள், 4 ஐ.எஸ். அமைப்பினர் மற்றும் ஒரு நபரும் கொல்லப்பட்டனர் என அதில் கூறப்பட்டுள்ளது. (உ–ரி4)

## சுப்பர் ஹைவே ஜேர்மனியில்



எரிபொருள் சிக்கனத்துக்காகவும் காற்று மாசைக் குறைப்பதற்காகவும் ஜெர்மனி, சைக்கிள் போக்குவரத்தை ஏற்கெனவே ஊக்குவித்து வருகிறது. இப்போது சைக்கிள் போக்குவரத்துக்காகவே 'சுப்பர் ஹைவே' என்ற பெயரில் மிக நீண்ட நெடுஞ்சாலையை உருவாக்கி வருகிறது.

100 கி.மீ. தூரத்துக்கு, 10 நகரங்களை இணைக்கும் விதமாக இந்த நெடுஞ்சாலை திட்டமிடப்பட்டு உருவாகி வருகிறது. இந்த வழியில் 4 பல்கலைக்கழகங்கள், பல்வேறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. போவதற்கு ஒரு பாதையும் வருவதற்கு ஒரு பாதையுமாக மிக அகலமாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

சைக்கிள் நெடுஞ்சாலைக்கு அருகில் இருக்கும் சுமார் 20 லட்சம் மக்கள் இந்தச் சாலையைப் பயன்படுத்த இருக்கிறார்கள். வாகன நெருக்கடி, காற்று மாசு போன்றவற்றைப் பெருமளவில் குறைக்க இருக்கிறது இந்த நெடுஞ்சாலை. தினமும் சாலைகளில் செல்லக்கூடிய 50 ஆயிரம் கார்களுக்கு இனி வேலை இருக்காது என்கிறார்கள். 5 கி.மீ. தூரத்துக்கு இந்தச் சாலை தயாராகி, பொதுமக்களுக்குத் திறந்துவிடப்பட்டிருக்கிறது. விரைவில் முழுச் சாலை புனரமைப்பும் நிறைவடைந்து விடும் என்கிறார்கள். (உ)

## டித்து எரிந்ததில் வில் 14 பேர் கருகி சாவு

டமேற்குப் பகுதியில் யா ஹியூய் பகுதியில் டிருந்த பேருந்தில் திடீ டித்து எரிந்ததால் 14 ாக உயிரிழந்தனர்.

லை 7 மணியளவில் றியூய் பகுதியில் 301 காண்ட பேருந்து இன் ற்கு சென்று கொண்டி ருந்து மரச்சாமன்கள் வந்தபோது திடீரெனத் ரிந்து.

ந்த மக்கள் பேருந்தை யேற முடியாமல் சிக்கிக் இதில் 14 பேர் தீயில் ாக உயிரிழந்தனர். மடைந்தனர். தீவிபத் ரணம் குறித்து பொலி ணை நடத்தி வருகின்ற (உ)

## காந்திக்கு இஸ்ரேலில் திங்களன்று மதிப்பளிப்பு

இந்தியாவின் தந்தையான மகாத்மா காந்திக்கு மதிப்பளிக்கும் விதமாக இஸ்ரேலில் அமைக்கப்பட்ட வீதிச் சுற்றுவட்ட ஆரம்ப விழா திங்கட்கிழமை நடைபெற்றது.

கிர்யாத் கட் நகரம் உருவாக்கப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு நடைபெற்ற கொண்டாட்டத்தின் போது இந்த நிகழ்வும் நடத்தப்பட்டது.

இதுகுறித்து கிர்யாத் கட் நகர மேயர் அவிராம் தஹாரி தெரிவித்ததாவது:

இது இந்தியா இஸ்ரேல் ஆகிய இரு நாட்டு மக்களுக்கிடையே உள்ள நட்பின் அடையாளம். ஒரு தலைவர் கூறிய கருத்துகள் இன்றளவும் நிலைத்து நிற்கின்றன. எனவே அவரை மதிப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். அத்தகைய இந்தியத் தலைவரிடம் இருந்து மாணவர்கள் நிறையக் கற்றுக் கொள்ள வேண்டும்– என்றார்.

“இது இந்தியா இஸ்ரேல் ஆகிய இரு நாட்டு மக்களுக்கிடையே உள்ள நட்பின் அடையாளம். ”

சுற்றுவட்டத்தில் பதிக்கப்பட்டுள்ள உலோகத் தகட்டில் ஆங்கிலம் மற்றும் இஸ்ரேலியர்களின் தாய்மொழியான ஹிப்ரூ என்பவற்றில், “ஆங்கிலேயருக்கு எதிராக இந்திய சுதந்திரப் போராட்டத்தை தலைமையேற்று நடத்திய மாபெரும் தலைவர் காந்தியடிகள் சகிப்புத்தன்மையின் அடையாளமாகவும், சண்டை சச்சரவுகளுக்கு அகிம்சை வழியில் தீர்வு ஏற்படுத்துவதற்கு அடையாளமாகவும் திகழ்ந்தார்” என்று எழுதப்பட்டுள்ளது. (உ)

## ம்பியாவில் களைகட்டிய ஜல்லிக்கட்டு

ன.6

நகரான ர்பயகோ ளயை அடக்கும் போட்டி தது 25 பேர் காயம தில் 4 பேர் கவலைக் க்கின்றனர் என்று லை வட்டாரங்கள் தெரி வருடக் கொண்டாட்ட ழ்வுகளில் ஒன்றான அடக்கும் போட்டி என உள்ளூர் மக்க ங்கப்படுகிறது.

ர்கள் காளையை அட நிறிக்கப்பட்ட வட்டத் ண்டவர முற்பட்டனர். பெறும் இந்த நிகழ்வில் க்குவதில் அனுபவம் லந்துகொள்கின்றனர்.



இத்தகைய போட்டிகள் தமக்கு உற்சாக மூட்டுவதாக மக்கள் தெரிவித்தனர். ‘‘இது எமது மக்களின் கலாசார மகிழ்ச்சி, இதனை நாம் தொடர்ந்து ஊக்குவிப்போம். மிருகவதைச் சட்டங்கள் எல்லாம் இது விடயத்தில் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது” என உள்ளூர்வாசி ஒருவர் தெரிவித்தார். இந்த நிகழ்வு நடந்து கொண்டிருக்கும்போது வாத்தியக் குழுவினர் வாத்தியங்களை இசைத்து மகிழ்ந்தனர். இவர்களுடன் சுற்றுலாப் பயணிகளும் இந்த வீர விளையாட்டை கண்டுகளித்தனர். (உ–ரி4)

## வெடிகுண்டுப் புரளியால் சென்னையில் பரபரப்பு

தமிழகத்தின் தலைநகர் சென்னையில் உள்ள பாடசாலைகளில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக நேற்று புரளி கிளம்பியதால் பெற்றோர்கள் இடையே அச்சம் ஏற்பட்டது. இந்த நிலையில் வீண் வதந்திகளை நம்பவேண்டாம் என்று சென்னை காவல்துறை தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.


சென்னை மயிலாப்பூர், அடையாறு பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக திடீரென ஒரு புரளி கிளம்பியது. இதனால் பெற்றோர்கள் பலரும் பாடசாலைகளுக்கு அழைப்பெடுத்து விசாரித்தார்கள்.

தகவல் தீ போல சென்னை முழுக்க பரவியது. வாட்ஸ் அப்-பிலும் பரவியதால் சென்னையில் பரபரப்பு ஏற்பட்டது. இந்த நிலையில் வெடிகுண்டுப் புரளி குறித்து சென்னை பொலிஸ் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. “சென்னையில் எந்த ஒரு பாடசாலைக்கும் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்படவில்லை. வாட்ஸ் அப்-பில் வரும் வீண் வதந்திகளை நம்பவேண்டாம்” என்று சென்னை மாநகர காவல்துறை தகவல் தெரிவித்துள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகத்தின் சமூகப்பெறுமதியை சரியாக உணர்ந்தவர்கள் புலிகள்தான்

## –நாடகக் கலைஞர் பாலசிங்கத்துடன் ஒரு சந்திப்பு–



சி.ப. வேந்தன்

“நாடகத்தைப்போல உலகத்தில சிறந்த ஊடகம் இருக்க முடியாதென்பது தான் என்ர கருத்து. நான் 1974ஆம் ஆண்டிலை இருந்தே நாடகத் துறையில செயற் படத் தொடங்கீற்றன். கிட்டத்தட்ட இப்ப நாப்பது வருசத்துக்கு மேல ஆகிட்டுது. இப்ப முந்தநாளும் வன்னியில ஒரு நாடகம் போட்டுட்டுத்தான் வந்திருக்கிறன்” என மூச்சு விடாது பேசுகிறார் நாடக ஆற்றுகையாளர் பாலசிங்கம்.

ஒரு மாலை நேரம். கோப்பாய் எனும் அழகிய கிராமத்தில் அவரது வீட்டில் அவரைச் சந்தித்துப் பேசினேன். வெகு உற்சாகமாகவும், அதே நேரம் ஆக்ரோசத்தோடும் தனது நாடக அனுபவங்களை என்னோடு பகிர்ந்து கொண்டார்.

ஆரம்பத்திலை சமூக யதார்த்த கருத்துக்களை உள்ளடக்கி நாடகங்கள் தயாரிக்கப்படவில்லை. வெறும் சினிமாத்தனங்களை ஒட்டித்தான் நாடகங்கள் போட்டவை. அப்ப படிச்சாக்கள் மட்டும்தான் காற்சட்டை (முழுக்காற்சட்டை) போடுறவை. மற்றவை போடுறேல்ல (இப்ப எல்லாரும் போடினம் என்று கூறிச் சிரித்தவர்) இந்தக் காற்சட்டை போடுறத்துக்கெண்டே சிலபேர் நாடகம் நடிக்க வெளிக்கிட்டவை. இண்டைக்கு இரவு நாடகம் என்டா விடியவே போட்டுக்கொண்டு திரிய வெளிக்கிட்டிருவினம். அப்ப அவைக்கெண்டு சமூகத்தில ஒரு மரியாதையும் இருந்தது. அப்ப தனிமனித சுதந்திரத்துக்காகவும் சுய விருப்பு வெறுப்புக்களுக்காகவுமே நாடகங்கள் போட்டவை. சமூகக் கருத்துக்கள் அதில பேசப்படேல்லை.

பிறகு கொஞ்சம் கொஞ்சமா நாடகத்தின்ர தன்மைகள் மாற வெளிக்கிட்டுது. இதில சமூகக் கருத்துக்களையும் சேர்க்க வெளிக்கிடினம். அப்பத்தான் நான் முதன்முதலா ‘சிந்திக்கத்தொடங்கி விட்டார்கள்’ எண்ட நாடகம் போட வெளிக்கிட்டன். அப்ப அதில ஒரு நடிகரை ஒரு பாத்திரத்துக்கு தெரிவு செய்து நடிக்க வைக்க அவரின்ர தகப்பன் என்னைக் கூப்பிட்டுச் சொன்னார். தம்பி இவன் முதலும் நாடகம் நடிச்சுத்தான் நாட்டிலை உள்ள கெட்ட பழக்கம் எல்லாம் பழகினவன். அவனைத் திரும்பவும் கெட்டுப் போக வழி செய்யாதை என்டார். இப்பிடித்தான் அந்த நாளைய நாடகக்காரர் பற்றி ஒரு எண்ணம் மக்களிட்ட இருந்தது ஆனா, இப்ப அப்பிடி இல்லை பல்கலைக் கழகத்தில அதைப்பாடமாகக் கொண்டு வந்து நிறையப்பேர் அதைப் படிக்கினம் அதை நினைக்கச் சந்தோசம்–என்றார்.

ஆனா, இப்போதும் நாடகத்தின்ர பங்கு சமூகத்தில மிகமிகக் குறைவாத்தானே இருக்கு என்றதற்கு இடைமறித்தவாறே

அதுக்கு நாங்கதான் காரணம். ஒரு செயலைத் தொடர்ந்து செய்தாத்தான் அது இயக்கத்தோட இருக்கும். எப்பவாவது இருந்திட்டுச் செய்தா, அது குறைவாத்தான் இருக்கும். மற்றது இப்ப நாடகம் போடுறதென்டா பெரிய செலவுகளும் இருக்கும். அதனால தயாரிப்பாளர்மாரும் பயப்படுகினம். இப்ப திருமறைக்கலாமன்றம், செயற்றிறன் அரங்க இயக்கம் என்டு நாடக நிறுவனங்களும் தொடர்ந்து செயற்பட்டு வந்தாலும், அவையளும் பெரிய பெரிய செலவுகளோடதான் போடுகினம். அதால சாதாரண நாடகக்காரர் நிறையப்பேர் ஒதுங்க வெளிக்கிட்டிட்டினம்.

நாப்பது வருடத்துக்குக்கூடிய காலம் இந்தத் துறையில இயங்கி வருகிறீர்கள்! உங்க ளுக்கான அடையாளம், அங்கீகாரம் எப் பிடி இருக்குது என்ற கேள்விக்கு கோப மாக இவ்வாறு கூறினார்.

எனக்கான அங்கீகாரம் மக்கள் மத்தியில நிறையக் கிடைச்சிருக்கு. ஆனா உந்த நாடக ஆய்வாளர்மாரிட்ட இருந்தும், நாடக வித்துவான்களிடம் இருந்தும்தான் கிடைக்கேல்ல. அவை நாடகத்துக்கெண்டு வெளிநாட்டு முறைகளைக் கொண்டு வந்து இதுதான் நாடகம். இப்பிடித்தான் போட வேணும் எண்டு சொல்லிக்கொண்டு திரிஞ்சினம். அது சரி, பாடத்துறைகளுக்கு இப்பிடி இருக்கிறதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனா ஒண்டும் விளங்காத அடிமட்ட கிராமத்துச் சனங்களுக்கு இந்தப் படிமுறைகள் விளங்காது. அப்பிடியான நாடகங்களை நாங்கள் போட்டா, உவருக்கு நாடகம் தெரியாது எண்ணீனம். அதோட இந்தத்துறைக்குள் சாதி வர்க்க வேறுபாடுகள் பார்க்க வெளிக்கிட்டிட்டினம். அதாலையும் நிறையக் கலைஞர்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கினம். இதெல்லாம் திட்டமிட்டுச் செய்யப்பட்டதுதான். உண்மையில, நாடகம் எண்டா பார்க்கிற மக்களை சிந்திக்க வைக்க வேணும், மகிழ்ச்சிப்படுத்த வேணும். அதை விட்டுட்டு நவீனம், தொழில் நுட்பம் எண்டு புரியாத மக்களை ஏன் குழப்புவான்? என்ரை நாடகங்கள் எல்லாம் கிராமத்து அடிமட்ட மக்களுக்கானது. அது சாதாரணமாகத்தான் இருக்கும் அதாலை இவருக்கு நாடகம் தெரியாதென்றால் எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை.

விடுதலைப்புலிகள் காலத்தில நீங்கள் நிறைய போர்முழக்க நாடகங்கள் செய்திருக்கிறீர்கள். அது பற்றிச் சொல்லுங்கள் எனக்கேட்டதற்கு...

போர்முழக்க நாடகம் எண்டு மட்டும் அதைக் குறிப்பிட முடியாது. ஏனெண்டா, அங்க தயாரிச்ச நாடகங்களில சமூக விழிப்புணர்வு, பெண் விடுதலை, நோய்ப் பாதுகாப்பு, கல்விச் சீர்திருத்தம், இப்பிடி ஏராளமான பிரிவுகளிலையும் நாடகங்கள் போடப்பட்டன. போர் பரப்புரை போட்டதுதான். அதுக்காக அதுமட்டுமே போட்டதென்று சொல்ல முடியாது. அதோட நாடகத்தை ஒரு உச்ச நிலைக்குக் கொண்டுவந்தது புலிகள் எண்டுதான் சொல்லலாம். அவைதான் நாடகத்தைத் தொழில்முறைக் கலையாக்கினவை. நாடகங்களின் சமூகப் பெறுமதியை சரியாக உணர்ந்தவர்கள் புலிகள்தான். போராட்டத்தோடு சேர்த்துக் கலைகளையும், வேற வேற துறைகளையும் மிக உச்ச நிலைக்குக்கொண்டு வந்தவர்கள் புலிகள்தான். ஆனா இப்ப இதை எவராலும் செய்ய முடியேல்ல எண்டதுதான் கவலை. இங்கை கலாசாரம் எண்டா கோயிலும் தேரும் என்று தான் நிறையப் பேர் நினைக்கினம். முதலிலை இதுகளைத் தெரிஞ்சு கொள்ளவேணும்.

> “நாடகங்களின் சமூகப் பெறுமதியை சரியாக உணர்ந்தவர்கள் புலிகள்தான். புலிகள் போரோட சேர்த்து கலைகளையும் வேற வேற துறைகளையும் மிக உச்ச நிலைக்கு கொண்டு வந்தவை. ஆனா இப்ப இதை எவராலும் செய்ய முடியேல்லஎண்டது தான் கவலை.”

புராண இதிகாச நாடகங்கள் இப்ப குறைஞ்சுகொண்டு வருகிறதே! நாளடைவில் அழியும் வாய்புள்ளதென்று பரவலாக நம்பப்படுகிறதே அது பற்றி...

அதை ஒரு வகையில உண்மைதான். ஆனா இப்ப எவா இந்த நாடகங்களைப் பார்க்கினம். எல்லாற்ற ரசனையும், வாழ்வியலும் மாறிப்போட்டுது. இந்தத் தலைமுறைக்கு அரிச்சந்திரா மயானகாண்டம் நாடகம் போட்டா சந்திரமதியை விற்பதற்கு அரிச்சந்திரனுக்கு என்ன உரிமை இருக்கிறது என்று சட்டம் பேசுவார்கள். கட்டிய மனைவிக்காகவும், பெற்ற குழந்தைக்காகவும் ஒரு பொய் சொல்ல முடியாதவர், பிறகேன் கணவரெண்டு இருப்பான் எனக் கேள்வி கேட்பார்கள். காலத்துக்கேற்றமாதிரி நாங்களும் மாறத்தான் வேணும், இது நியதி. இதை மாற்ற ஏலாது. ஏற்கத்தான் வேணும்.

இன்றைய உங்களுடைய நாடக முயற்சிகள் எப்படி இருக்கிறது என்றவுடன்...

இப்பவும் ஒரு நாடக ஒத்திகை இருக்கு. முந்தநாளும் ‘கடவுள் ஒருநாள்’ நாடகம் போட்டனான். இதுவரைக்கும் 105 நாடகங்களுக்கு மேலே எழுதி இயக்கிப் போட்டிருக்கிறன். ஆனா இவைகளெல்லாம் ஒரு இடத்திலையும் பதியப்படவில்லை எண்டதுதான் வேதனை. ஆனாலும் இதுகளுக்காக நான் ஓயப்போவதில்லை. என்ர துறையிலை நான் எப்பவுமே இயங்கிக்கொண்டுதான் இருப்பன். இப்ப புத்தொளி கலாமன்றம் –முரசுமோட்டை எண்டு ஒரு மன்றம் தொடங்கி, எங்கட நாடகச்செயற்பாடுகள் நடந்து கொண்டு வருகுது. நாடகம் போட ஆக்கள் இருக்கு. அதைப் பார்க்க ஆக்களும் இருக்கு. தயாரிக்கத்தான் ஆக்களில்லை. இதுபற்றிச் சம்பந்தப்பட்ட துறைகளில இருக்கிறவை கவனிச்சு அக்கறை செலுத்த வேணும். நீங்களும் நானும் கதைச்சு வேலையில்லை என ஆதங்கப்படுகிறார் இந்த மூத்த கலைஞர்.

கலைகளின் வளர்ச்சி என்பது ஆற்றுகைப்படுத்துபவர்களின் கைகளில் மட்டுமல்ல, அதை அனுபவிப்பவர்களின் (ரசிகர்கள்) கைகளிலுமே தங்கியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியில்... ஜெயாவின் "அறிவுக்களஞ்சியம்" நூல் வெளியீட்டு நிகழ்வு....



ஜேர்மனியிலிருந்து தவராசா

> பொது அறிவுக்களஞ்சியமாக 'ஜெயாவின் அறிவுக் களஞ்சியம்' என்னும் நூலை வெளியீடு செய்து புலம்பெயர் நாட்டில் சாதனை செய்தி ருப்பது பாராட்டத்தக்க விடய மாகும்

கடந்த டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதியன்று லண்டன் வானொலியின் 'பாமுகம்' இணையத் தொலைக் காட்சி நடத்திய தனது 155 ஆவது பொன் மாலைப் பொழுது விழாவில், திருமதி ஜெயா நடேசனின் "ஜெயாவின் அறிவுக் களஞ்சியம்" நூல்வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது. பிரதம விருந்தினராக பாமுகம், தொலைக்காட்சி, லண்டன் தமிழ் வானொலியின் அதிபர் நடா மோகன் கலந்து கொண்டார். அத்துடன் இந்த வானொலியின் அறிவுக்களஞ்சிய நிகழ்ச்சித் தொகுப் பாளர் திருமதி வாணி மோகனும் நிகழ்வில் கலந்து கொண் டார்.

திருமதி ஜெயா நடேசன், தாயகத்தில் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக்கொண்டவர். நான்கு பிள்ளைகளின் தாயான இவர், மானிப்பாயை புகுந்த இடமாகவும், ஜேர்மனியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டு கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக வசித்து வருகிறார்.



இவரது கலை, இலக்கிய, எழுத்து, சமூகப்பணிகளைநோக்கினால், 1995ஆம் ஆண்டு 'தாயக சமாதானம்' என்னும் கவிதை நூலை எழுதி ஜேர்மனியில் வெளியீடுசெய்தார். 2014ஆம் ஆண்டில் தனது கணவரின் நினைவாக 'அர்ச்சனை மலர்கள்' என்னும் பெயரில் கவிதைத் தொகுப்பு ஒன்றை வெளியீடு செய்தார். பிற்பாடு தற்போது பொது அறிவுக்களஞ்சியமாக 'ஜெயாவின் அறிவுக் களஞ் சியம்' என்னும் நூலை வெளியீடு செய்து புலம்பெயர் நாட்டில் சாதனை செய்திருப்பது பாராட்டத்தக்க விடயமாகும். இவர் ஜேர்மனியில் கடந்த 26 ஆண்டுகள்தொடர்ந்து வெளிவரும் 'மண்'; கலை இலக்கிய சமூக சஞ்சிகையின் எழுத்தாளராகப் பலதரப்பட்ட ஆக்கங்களைப் படைத்து வருவதுடன், மண் சஞ்சிகை நடத்திய பல ஆண்டுவிழாப் போட்டிகளில் பல தடவைகள் பல பரிசில்களையும் பெற்றுக் கொண்டவர் என்பதும் குறிப்பிடத் தக்கவிடயமாகும். இவை மட்டுமல்லாமல், ஐரோப்பாவில் வெளிவரும், வெளிவந்த பல பத்திரிகைகள் சஞ்சிகைகளில் தனது ஆக்கங்களைப் படைத்து வருவதும் குறிப்பிடத் தக்க விடயமாகும். குறிப்பாக மண் சஞ்சிகை, 'வெற்றி மணி' பத்திரிகை, தொடுவானம் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதிவரும் இவர் லண்டன் தமிழ் வானொலி மற்றும் பிரான்ஸ் தமிழ் வானொலி வாராவாரம் நடத்தும் கவிக்களத்தில் பங்குகொண்டு ஆயிரத் துக்கும் அதிகமான வானொலிக் கவிதைகளைப் படைத்துச் சாதனை புரிந்து வருவதுடன், லண்டன் தமிழ் வானொலியின் தொகுப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றார். இப்படியாகப் பன்முக ஆளுமைமிக்க இவரது திறமைகள் பாராட்டுதலுக்குரிய விடயமாகும்.

இவரது தந்தையார் ஒரு பாடசாலை அதிபர் என்ற வகையில், இவரும் கல்வித் துறையில் ஆர்வம் கொண்டு ஜேர்மனியிலுள்ள தமிழ்ப்பாடசாலை ஒன்றில் ஆசிரியையாகப் பல ஆண்டுகளாகக் கடமையாற்றி வருகிறார். ஜேர்மனிய தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகத்தின் தொடர்பாளராகப் பல ஆண்டுகள் கடமையாற்றி வரும் இவர், மண் சஞ்சிகையின் தாயக ஆதரவற்றோர் நிதி உதவித்திட்டத்துக்கு பல ஆண்டுகளாக உதவிசெய்து, மானிட நேயம்மிக்கவராக, எழுத்தாளர்களுக்கு ஒரு முன்னோடியாக விளங்கி வருகின்றார்.

ஜெயாவின் அறிவுக்களஞ்சிய நூல் வெளியீட்டு நிகழ்ச்சி, கடந்த டிசெம்பர் மாதம் 3ஆம் திகதியன்று மூன்று மணியளவில் மங்கள விளக் கேற்றலுடன் ஆரம்பித்தது. தாயகத்துக்காக தம் உயிர் ஈந்த மாவீரர்கள் மற்றும் உறவுகளுக்காக ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்திவிட்டு விழா ஆரம்பமானது. முதலில் வரவேற்புரையை எழுத்தாளர் திருமதி கெங்கா ஸ்ரான்லி நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து கவிக்கோ விசுவலிங்கத்தால் நூல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. தொடர்ந்துஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் பொன். புத்திசிகா மணியின் உரை இடம் பெற்றது. அவர் தமது உரையில் நூலின் பயன் பற்றியும், எழுத்தாளர் சங்கத்தின் மூத்த உறுப்பினர், திருமதி ஜெயா நடேசனின் எழுத்து வன்மை பற்றியும் மிகவும் அழகாக எடுத்துரைத்தார். அடுத்து நடா மோகன் தமது உரையில், ஜெயா ஒரு துணிகரமான பெண் என்றும், அவர் கணவர் இல்லாத போதும் தனித்து நின்று மனம் தளராது, இப்படியான காரியங்களில் ஈடுபட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்றும் – அவருடைய ஆற்றலைப் பற்றி எடுத்துரைத்தார். நூலைப் பற்றிய விமர்சனத்தை புலவர் மணி குகதாசன் வழங்கினார். அதில் தாயகத்து நிலை, மற்றும் ஜேர்மனியில் தமிழ்மொழியின் நிலை பற்றியும் எடுத்தியம்பினார். கவிஞர் அம்பலவன் புவனேந்திரன், எழுத்தாளர் பசுபதிராஜா ஆகியோரின் வாழ்த்துக் கவிதைகளைத் தொடர்ந்து புத்தகம் வெளியிடப்பட்டது. முதல் பிரதியை திருமதி வாணி மோகன் பெற்றுக் கொண்டார். அதைத் தொடர்ந்து எழுத்தாளர்களும் சபையோர்களும் பெற்றுக்கொண்டனர். விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த எழுத்தாளர்கள், கலை, இலக்கிய நண்பர்கள் மற்றும் உறவுகளுக்கு நூலாசிரியர் திருமதி ஜெயா நடேசன் நன்றிகளை தெரிவித்துக்கொண்டார். நல்ல ஒரு மகிழ்ச்சிகரமான விழாவாக இனிதே நிறைவு கண்டது.

---

# நுண்ணியோர் வகுத்ததை எண்ணுவது கண்ணியமே

கே.எஸ். சிவஞானராஜா

பண்ணோடிசைந்த வாழ்வும், பெண்ணோடிசைந்த வாழ்வும், மண்ணோடிசைந்த வாழ்வும், விண்ணோடிசைந்த வாழ்வும், பாவலர்களால் நுண்மையாக ஆராயப்பட்டு இலக்கியச் சுவைஞர்களுக்கு விருந்தாக்கப்படுகிறது. சிறப்பாகப் பண்ணோடிசைந்த ஏழுஸ்வரங்களுக்குள் எத்தனை எத்தனையோ பாடல்கள் வாழ்வாவதுபோல, பெண்ணேடிசைந்த பருவத்திலும் 7 நிலைகள் சிறப்பாகச் சொல்லப்படுகின்றன. இந்த ஏழு நிலைகளும் புராதன காலத்திலே நுண்மையாகப் பருவநிலைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை நாமும் பகிர்ந்து மகிழ் வுறுவோம்.

"ஏழுநிலையும் இயம்புங்காலை,
பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை,
அரிவை, தெரிவை, பேரிளம் பெண் எனப்
பாற்படு மகளிர் பருவத் தாதல்
நோக்கி உரைப்பது நுண்ணியோர் கடனே"

இது பன்னிரு பாட்டியலில் வரும் 135 ஆவது சூத்திரமா கும்.

1. பேதை - 5 முதல் 8 வரையில் 4 ஆண்டுகள்.
2. பெதும்பை - 9 முதல் 10 வரையில் 2 ஆண்டுகள்.
3. மங்கை - 11 முதல் 14 வரையில் 4 ஆண்டுகள்.
4. மடந்தை - 15 முதல் 18 வரையில் 4 ஆண்டுகள்.
5. அரிவை - 19 முதல் 24 வரையில் 6 ஆண்டுகள்.
6. தெரிவை - 25 முதல் 29 வரையில் 5 ஆண்டுகள்.
7. பேரிளம்பெண் - 30 முதல் 36 வரையில் 7 ஆண்டுகள்.

மேலும் வச்சணந்தி மாலையிலும், இலக்கண விளக்கத்திலும் இந்தப் பருவங்கள் வேறுபடுவதை அவதானிக்கலாம்.

1. பேதை - 5 முதல் 7 வரையில் 3 ஆண்டுகள்.
2. பெதும்பை - 8 முதல் 11 வரையில் 4 ஆண்டுகள்.
3. மங்கை - 12 முதல் 13 வரையில் 2 ஆண்டுகள்.
4. மடந்தை - 14 முதல் 19 வரையில் 6 ஆண்டுகள்.
5. அரிவை - 20 முதல் 25 வரையில் 6 ஆண்டுகள்.
6. தெரிவை - 26 முதல் 31 வரையில் 6 ஆண்டுகள்.
7. பேரிளம் பெண் - 32 முதல் 40 வரையில் 9 ஆண்டுகள்.

ஆண்பாலாருக்கும் ஏழு பருவங்கள் உளதென்று வகுத்துக் கூறப்பட்டுள்ளன. அவிநயனார் என்பவரால் இது உரைக்கப்பட்டுள்ளது.

காட்டிய முறையே நாட்டிய ஆண்பாற்கு
எல்லையும் பெயரும் இயல்புற ஆய்ந்து
சொல்லிய தொன்னெறிப் புலவரும் உளரே

உலா - வரும்போது, தலைவனை மாதர்கள் கண்டு, ஆன்மார்த்த ரீதியாகக் காதலித்தமையால் உலாப் புறச் செய்யுளிலும் ஆடவர்களது பருவம் பதினாறு ஆண்டு முதல் நாற் பத்தெட்டாண்டு ஆண்டு வரையெனக் குறிப்பிடப்படுகிறது.

பாலன் யாண்டே யேழென மொழிப
மீளி யாண்டே பத்தியை காறும்,
மறவோன் யாண்டே பதினான் காகும்,
திறலோன் யாண்டே பதினைந் தாகும்,
பதினாறல்லை காளைக் கியாண்டே
அத்திறம் இறந்த முப்பதின் காறும்
விடலைக் காகும் மிகினே முதுமகன்

> சிறப்பாகப் பண்ணோடிசைந்த ஏழுஸ்வரங்களுக்குள் எத்தனையோ எத்தனை பாடல்கள் வாழ்வாவதுபோல, பெண்ணேடிசைந்த பருவத்திலும் 7 நிலைகள் சிறப்பாகச் சொல்லப்படுகிறது.

பாலன் - 1 முதல் 7 வரை 7 ஆண்டுகள்.
மீளி - 8 முதல் 10 வரை 3 ஆண்டுகள்.
மறவோன் - 11 முதல் 14 வரை 4 ஆண்டுகள்.
திறலோன் - 15 முதல் 15 வரை 1 ஆண்டு
காளை - 16 முதல் 16 வரை 1 ஆண்டு
விடலை 17 முதல் 30 வரை 14 ஆண்டுகள்.
முதுமகன் - முப்பதிலும் மிக்கவன்.

சிற்றிலும், பாவையும், களங்கும், புன்முறுவலும், பைங்கிளியும், யாழும், குளிர்ந்த நீராட்டும், பொழில் விளையாட்டும், நன்மது நுகர்தலும், இவை போன்ற இன்னும் பலவும் அந்தந்த பருவ மங்கையருக் கேற்றபடி உலாவின் கண் அமைத்துப் பாடுதற்கு உரித்துடையதாகும். உலாவை வெண்கலியாகிய பாவின் முன்னர் முதல் நிலையும், பின்னர் எழுநிலையும் அமைத்துப்பாடுதல் வேண்டும். இதன் மூலம் உலாவை இலக்கணத்தில் பாடும் போது கலிவெண்பாவினாலே பாடுதலே சம்பிரதாயம்.

ஆதலால், நுண்ணியோர் வகுத்த மேற்சொல்லப்பட்ட ஆண், பெண் பருவ நிலைகளைத் தமிழின்பம் கருதி நுகர்வது கண்ணியமான தமிழ்த் தொண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி பரமலிங்கம்

# தமிழில் நாடக வளர்ச்சி அன்றும் இன்றும்!

குறித்த தலையங்கத்தில் கடந்த வார புதன் பொய்கையில் வெளி வந்த கட்டுரையின் தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது.

தமிழில் நாடகமும் கலைஞர்களும் வளரமுடியாமைக்கான காரணத்தைப் பார்த்தோம். நாடக ஈடுபாட்டைக் கொண்டவர்களின் தொடர்ந்த பணியாலும் அந்த இலக்கை எட்ட முடியும் என்பது திண்ணம்.

இதனைச் சீர்தூக்கிப் பார்த்தால் அனேக தமிழ் நாடகங்கள் அதனை அகற்றக்கூடியவாறு உருவாக்கப்பட்டதாகவும் அறிய முடியவில்லை. நாடகங்களை உருவாக்குவதும் நடிப்பதும், எழுதுவதும் தமதுபெயரை நிலை நாட்டுவதற்காக மட்டுமே என்பதும் இன்னொரு விடயம்.

**கூத்தாடிகள் என்பதை வென்றோர்!**

கூத்தாடிகள் எனக் கேவலமாகப் பேசப்பட்டவர்களை காலமாறுதலால் வானத்தில் இருந்து குதித்தவர்களாக ரசிகர்களிடையே கருதிக் கலைஞர்களென மதிப்பேற்பட்டதன் பயன், அரை வேக்காட்டு நடிகர்களுக்கும், நாடகக் காரர்களுக்கும் கிறுக்குப் பிடித்து, தமிழில் நாடகம் பின்னடைவு காணக் காரணமாய் அமைந்தது.

கூத்தாடிகள் எனப்பட்ட கூட்டத்தினருக்கு கலைஞர்கள் என்ற பெயரை ஏற்படுத்தி வைக்கப் பாடுபட்டு மறைந்து விட்ட நாடகத்துறைப்பெரியார்களை நினைவு கூர்வது மில்லை. அவர்கள் அந்தக் காலங்களில் இந்த மதிப்பைப் கொண்டு வாழ்ந்தது மில்லை. தமிழர் சமுதாயத்தில் நாடகக் காரர்களுக்கு மதிப்பை வளர்த்துக் கொண்டாலே நாடகத்தமிழ் உலகம் வளரும் சாத்தியம் கைகூடுமெனக் கருதிச் செயலாற்றிய பெரியோர், கலைஞர்களுக்கு சமூகத்தில் அந்தஸ்தை வாங்கிக் கொடுத்ததுடன் காலமும் முடிந்து விட்டது.

அந்தப் பெரியார்களின் அடியொற்றி வந்தோர் அவர்களால் இடப்பட்ட அத்திபாரத்தில் கட்டடத்தைப் போடாமல் மாற்றான் போட்டஅத்திபாரத்தில் வீடுகளைக் கட்டத் தொடங்கியதன் நிலையே ஸ்திரமற்ற கட்டடங்கள் நொறுங்கி வீழலாயின. திரும்பவும் கலைக் கட்டடத்தை நிர்மாணிக்கப் புதிய பரம்பரை தோன்ற வேண்டிய அவசியம் எழுந்தது. இந்தவிதமே பல தடவைகள் கட்டப்பட்டும், உடைந்து வீழ்வதுமான நிலையே தமிழ் நாடக வளர்ச்சிக்கு முடக்கத்தை ஏற்படுத்தின.

**இருவேறு தன்மைகள்!**

பிற்காலங்களில் மேடை ஏற்றப்பட்டு வந்த நாடகங்களில் அனேகமானவை இருவேறு தன்மைகளைக் கொண்டனவாக அமைந்தன. அவையாவன: 1. நாடக இலக்கண விதிகளுக்கு அமைய மக்களிடையே கதையைப் புரிய வைக்கும் காட்சிகளை அமைத்து, எழுதப்பட்ட நாடகத்தை கைதேர்ந்த நடிகர்களைக் கொண்டு அல்லது புதிய நடிகர்களை பயிற்றுவித்து பின்னர் ஒலி, ஒளி, சினிமாப் பாணியைத் தழுவாமல் மேடையேற்றி வருதல்.

அதாவது சினிமா ஒலித்தட்டுகளைப் பாவிக்காமல், மேடையைஇருள் படர விட்டுநடிகரது அரைக்குமேல்தலைவரை தெரிய ஸ்பொட்லைட்டில் நடிக்க வேண்டிய கஷ்டங்களைக் குறைத்து பார்வையாளர்களை ஏமாற்றும் தரம் குறைந்த நிலைக்கு இட்டுச் செல்லல்.

2. மேடைக்குக் கொண்டு வரமுடியாத கடல், வாகனங்கள் போன்றவற்றைக் குறியீடாகக் காட்டுதலைத் தாண்டிக் கொண்டு வரக்கூடிய மேசை, கதிரை, இன்னும் சில சாதனங்களைக் குறியீடாகக் காட்டி பத்திரிகை அல்லது கடிதம் வாசித்தல் மேலும் கற்பித்தல் காட்சிகளில் கரும்பலகை, எழுது பொருள் எனபவற்றையும் குறியீடாகக் காட்டுதல்.



இவை ஏறத்தாழ ஊமைகள் உரையாடுதல் அல்லது மற்றவர்களுக்கு கேலிக்கூத்து விடும் குரங்குச் சேட்டை போலவும் அமைந்து நாடக நோக்கங்கள் சிதறடிக்கப்படும் பாங்கு.

மேற்படி நாடகங்களைப் பார்த்தவர்களை மறுநாள் நாடகம் எப்படி எனக் கேட்டால் சினிமாவைப் பார்த்தது போலிருந்தது அல்லது அவர்கள் நாடகமா போட்டவர்கள்? குரங்குச் சேட்டையெல்லோ விட்டவங்கள் என்பன போன்ற கூற்றுக்களையே கேட்கலாம்.

**தமிழில் நாடகங்கள் வளரும்**

இரண்டாவது வகைக்குள் சொல்லப்பட்ட நாடகங்களை ஒட்டி ரசிகர்களை பெருக்கிக் கொள்ளும் உபாயத்தில், ஓரிரண்டு இலக்கண வரைகளோடு நாடகங்களை மேடையேற்றி வந்த நாடகக்காரர்களும் சினிமாப் பாணியில் மேடை நாடகங்களை தயாரிக்க முற்பட்டால், எவ்விதம் தமிழில் நாடகம் வளரும்?

தமிழ் நாடக உலகுக்கு ஏற்பட்டுள்ள இந்த இக்கட்டான களத்தில் இருந்து தப்பிக் கொள்ளாதுவிட்டால் நாடகங்களின் தரம் மேலும் குன்றியே போகும் என்பதை எச்சரிக்கையாக எடுக்க வேண்டும். இந்தச் சாபக்கேட்டைப் போக்கி நிலையை உடன் திசை திருப்ப வேண்டியதும் அவசியமாகும்.

நாடகங்களில் கையாளப்பட வேண்டிய உரைநடை எது என்பதில் மண்டையை உடைத்துக்கொண்டிருக்கும் விற்பன்னர்கள், நாடகத்தின் ஜீவன் இறுதி மூச்சில் ஊசலாடிக் கொண்டிருப்பதை ஏன் உணராதவர்களாக வாளாவிருக்கின்றனர்.

உரையாடல் பண்டிதத் தமிழாகவோ பாமரத்தன்மையானதாகவோ இருக்கட்டும். அது நாடகாசிரியர்களின் பணி ஆயினும் நாடகத் தமிழ்ப் பண்டிதத் தமிழ் அல்ல. பாத்திரப் படைப்புக்களின் நிலைமையை வைத்தே அந்தப் பாத்திரங்களின் உரையாடல் எழுதப்பட வேண்டும். உதாரணமாக தமிழ் மொழியைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர் கூட, அவர் வீட்டில் பண்டிதத் தமிழைத் தேடியெடுத்துப் பேசமாட்டார்.

அந்த நிலையில் ஒருகூலியாள் நல்ல தமிழெடுத்துப் பேசுவதானது பாத்திரத்தின் உண்மைத் தன்மையையே மாற்றி விடும். தமிழ் மொழியில் நாடகங்களைப் படைக்கையில் இதுபோன்ற சகல இலக்கண விதிகளிலும் கவனமெடுத்துக் கொண்டால் எதிர்காலங்களில் தமிழ் நாடகங்களில் வளர்ச்சி நிலையைக் காணலாம்.

**புதுமை சேர்ப்பது தவறல்ல!**

இரண்டாவது வகை நாடகங்களை புதுமை விரும்பிகளே தயாரித்தும், மேடை ஏற்றியும் வருவது கண்கூடு. தமிழ் நாடகங்களில் நவீன சிந்தனைகளைக் கையாள்வதைத் தவறெனக் கூறிவிட முடியாது. காலமாற்றங்களால் வாழ்வில் மாறிக் கொண்டிருக்கும் புதுமைகள் புதிய நாடகங்களில் தோன்றுவதை வரவேற்க வேண்டும்.

ஏனெனின் அந்தப் புதிய கண்ணோட்டம் தமிழ் அல்லது உலக வாழ்வியல் முறைகளைக் கேவலப்படுத்துவதாக அமைவதை இலக்கண மரபு மீறல் எனவும் குறிப்பிடப்படுகிறது. அதனால் ஒரு சிறந்த படைப்பு சிதைக்கப்பட்டதாக மாறுவதைத் தவிர்க்க இயலாது. இன்னும் ஒவ்வொருவர் தமக்குப் பிடித்த வேறு மொழிகளில் நுகர்வுக்கு உள்ளான விடயங்களைத் தமிழில் கொண்டுவர முயற்சிப்பதன் பயனாகவும் எமது நாடகங்களின்தனித்துவம்செத்துப்போவதையும் காணலாம்.

> “ தமிழ் நாடக உலகுக்கு ஏற்பட்டுள்ள இந்த இக்கட்டான களத்தில் இருந்து தப்பிக் கொள்ளாது விட்டால், நாடகங்களின் தரம் மேலும் குன்றியே போகும் என்பதை எச்சரிக்கையாக எடுக்க வேண்டும். இந்தச் சாபக்கேட்டைப் போக்கி நிலையை உடன் திசை திருப்ப வேண்டியதும் அவசியமாகும். ”

இதுவரை தமிழில் எழுதப்பட்டு தயாரித்து மேடையேறிய நாடகங்களில் மேற்கூறிய குறைபாடுகள் களையப்பட்டாலே நாடக நுகர்வாளரின் ரசனையைக் குறைக்காமல், நாடகத் தரத்தையும் உயர்த்த முடியும். அதனால் ரசிகத் தன்மைக்காக நாடகங்கள் மேடையேற்றப்படாமல் நாடகத்துக்காக நுகர்வோர் ரசனையைத் திருப்பும் நிலைமை தோன்றும்.

தமிழ் நாடகங்களை உருவாக்குவோரின் மத்தியில் இந்த இருவேறு பார்வைகளும் இன்னமும் அதிகரித்துச் செல்லும் போக்கே அபரிமிதமாகக் காணப்படுகிறது. வெவ்வேறு மொழிகளில் தனித் தன்மைகளுடன் வளர்ந்துள்ள நாடகம், தமிழில் தனக்கே உரிய பாணியில் வளர்க்கப்பட வேண்டிய கட்டாயம், தமிழ் நாடக உலகில் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரின் சிந்தனைகளிலும் ஊடுருவித் தைக்க வேண்டும்.

**பாத்திர உணர்ச்சிகளின் வார்ப்பே நாடகம்!**

நாடகத்துக்கு உரிய இலக்கணங்கள் பல இருப்பினும், நாடகத்தின் உயிர்நாடி பாத்திரப் படைப்புக்களின் உணர்வுகளைச் செவ்வனே சித்திரிப்பதிலேயே தங்கி உள்ளது. நாடகாசிரியன் ஒரு படைப்பை உருவாக்கும் சமயம் தராசு நிலையில் இருந்தே உருவாக்க வேண்டியது அவசியமாகின்றது.

நாடகத்தின் நேரத்தைக் கூட்டுவதற்காகவும், குறைப்பதற்காகவும், இழுத்தடித்தோ, வெட்டிக் குறைத்தோ ஆக்கும் போது அதன் சத்துக் குறைந்து போவதைத் தவிர்க்க முடியாது. நாடகாசிரியர் செவ்வனே செய்திருந்தாலும் நாடகத்தை மேடையேற்றும் தயாரிப்பாளர் விருப்பத்துக்கோ, இயக்குநரின் எண்ணத்துக்கோ, நடிகரின் போக்குக்கோ மாற்றம் பெறும்போது தரத்தால் நாடகம் தாழ்ந்து விடுவதும் உண்டு.

மேற்சொன்ன நிலை தமிழ் நாடக உலகில் இருந்து அற்றுப்போகும் வரை, அது வளர்வதும் சிரமம்தான். நாடகாசிரியனின் எண்ணமே நாடகத்தில் உயர்ந்து நிற்க வேண்டும். நாடகாசிரியனுக்குக் கீழ்ப் படிந்தே தயாரிப்பாளரோ, இயக்குநரோ, நடிகரோ செயற்பட வேண்டியது அவசியம் ஆகின்றது.

**நாடகாசிரியனின் பொறுப்பு!**

இன்றைக்கு அநேக இடங்களில் அது நடப்பது அரிதாகவே உள்ளது. நாடகத்தைப் படைத்த ஆசிரியன் எங்கோ, அவன் படைத்த நிலையிலிருந்து அம்சங்கள் அகற்றப்பட்ட உருவில் நாடகம் எங்கோ!

நாடகாசிரியனின் எண்ணமும், தயாரிப்பாளரின் ஒத்துழைப்பும், இயக்குநரின் முயற்சியும்,நடிகரின் திறமையும் கூட்டுச் சேர்ந்து நாடகம் உருவாகும் போதே, அந்த நாடகம் வெற்றி பெறுவது நிச்சயம் ஆகின்றது. இத்தனை அமைந்தும் உருவாக்கம் தோல்வி காணின் அதற்குப் பொறுப்பானவன் நாடகாசிரியனே!

நாடகம் எழுத எடுத்துக் கொள்ளப்படும் கதைக்களம் நுகர்வோர் உள்ளங்களைத் தொடக்கூடியதான திருப்புமுனைகளை அமைத்துப் படைக்கும் பொறுப்பு நாடகாசி ரியனுக்கே உரியது. அது மட்டுமல்லாமல் நாடக முடிவில் சமூகத்துக்கு நல்ல படிப்பினையை வழங்குவதும் அவசியம்.

நாடகக் களத்தில் ஆட்டிப் படைக்கும் பாத்திரங்களை வார்த்தெடுப்பதில் நாடகாசிரியன் நிதானத்தைக் கையாள வேண் டும். கதைப் போக்கில் ஒன்று புத்தி குறைந்ததாக அமைத்து, அந்தப் பாத்திரம் பேசும் வசனங்கள் புத்திசாலிகளின் கூற்றாக அமையும். இத்தகைய கவனக் குறைவுகள் ஏற்படுகையில் பாத்திரப் படைப்பல்ல அங்கே விளங்குவது, நாடகாசிரியனின் எண்ணமே! நாடகத்தைப் படைக்கும் பொழுது ஆசிரியன் நாடகத்துக்குள் நுழைவதைத் தவிர்ப்பதும் இலக்கண வரையறைக்குள் அடங்கிய விசயம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருகிவரும் கலைகள் நிமிர வேண்டும்

■ லக்ஸ்மன்

விருந்தோம்பல் போன்று, தமிழ் மக்களின் பாரம்பரிய கலைகளையும் கட்டிக்காத்த பெருமை எமது முன்னோர்களுக் குரியதாக இருந்தது. இடைக்காலத் தில் நாடகத்துறைக்குப் புத்துயிரளித்து அதனை வளர்த்தெடுத்த நெடுந்தீவின் இளம்கலைஞர்கள், தமது முன்னோர்கள் வளர்த்தெடுத்த நாட்டுக்கூத்துக் கலை யிலும் ஆர்வம் கொண்டிருந்தனர். கடந்த அறுபது வருடங்களுக்கு முன் னர், நாட்டுக்கூத்து எம்மத்தியில் பெரும் வளர்ச்சி கண்டிருந்தது. தமிழர்களது கலைகள் ஆலயங்களினூடாகவும் வளர்த்தெடுக்கப்பட்டு வந்துள்ளமை வரலாறுகள் கூறும் உண்மை. நெடுந் தீவில் காணப்படும்இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் இடம்பெறும் விசேட தி னங்களின் போதும், உற்சவ காலங் களின் போதும் அப்போதெல்லாம் நாட் டுக் கூத்துக்கள் தவறாது நடைபெறும். ஆலய உற்சவங்கள் ஆரம்பமாகப் போகின்றன என்றதும் ஒரு மாதம் முன்னதாகவே நாட்டுக்கூத்துக் கலை ஞர்கள் தமக்கான பயிற்சிகளைத் தொடங்கி விடுவார்கள். அண்ணாவிமார் இரவு பகலாக நீண்ட நேரம் செல விட்டு கூத்துக்களை மிகவும் திறமையாகப் பழக்கியெடுத்து விடுவார்கள். ஒவ்வொரு பாத்திரமும் தந்ரூபமாக அமைவதில் கவனம் எடுத்து ரசிகர்களின் கவனத்தை ஈர்க்கக்கூடியதாக பழக்கியெடுத்துக் கொள்வதில் அண்ணாவியார் கண்ணும் கருத்துமாக இருப்பார். கூத்து முடிந் ததும் மக்களின் பாராட்டைப் பெற்றுக் கொள்ளும் ஆர்வம் அவருக்கு.

ஆலய உற்சவ காலங்களில் அயலில் உள்ள வெளியில் வட்டவடிவில் அமைக் கப்பட்டிருக்கும் அரங்கில் கூத்து இடம் பெறும். மக்கள் அரங்கைச் சுற்றி அமர்ந்தி ருக்க நடிகர்கள் மிகவும் உற்சாகமாகப் பிற்பாட்டுக்காரரின் உதவியுடன் பாடி ஆடி நடித்துத் தமது திறமைகளைக் காட்டி மகிழ்வர். கட்டியக்காரரின் நகைச்சுவை களும், பிரமாதமாக இருக்கும். வெடியர சன், மங்கம்மா சபதம், நல்லதங்காள், ஞானசௌந்தரி, யுவானியார் திருஞான தீபன், சபீனகன்னி, அரிச்சந்திரன், அன்னை மரியாள் போன்ற வரலாற்றுக் கதைகளே நாட்டுக்கூத்துக்களாக இடம்பெறு வதுண்டு. இவை தீவின் மூன்று பிரிவு களிலும் அவ்வப்போது இடம்பெறும். நாட் டுக்கூத்தில் அவர்கள் ஏற்கும் பாத்திரங் களின் பெயர்களும் பின்னாளில் அவர் களுக்கு நிரந்தரமாகிவிடும். இது அருமை யான நடிப்பின் அடையாளம் என்பது ரசி கர் களின் கருத்தாகும். கூத்து முடிவடைந் ததும் உடனேயே வேடத்தைக் கலைத்து விடமாட்டார்கள். ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று கூத்துப் பாடல்களைப் பாடி வீட்டுக்காரர் கொடுக்கும் சன்மானங் களையும் பெற்ற பின்னரே கூத்துக் கலைஞர்கள் திருப்தியடைவதுண்டு.

நாட்டுக்கூத்துத் தவிர, இந்துக் கோயில் களில் நடன நிகழ்வுகளும் முன்னரெல் லாம் இடம்பெறுவதுண்டு. மக்கள் அதைச் சின்ன மேளம் என்று சொல் வர். வெளியிடங்களில் இருந்து கொண்டுவரப்படும் இளசு களின் நடனம் இதில் இடம் பெறும். சுமார் இரண்டு மணி நேரம் வரை இடம்பெறும். இதில் உள்ள சினிமாப் பாடல்களையெல்லாம் பாடி, முக்கியமாக ஆட்டத்தைப்பார்த்திடாமல் ஆளை ஆளைப் பார்க்கி றார் என்ற பாடலைப் பாடி ஆடும் போது கிளுகிளுப்பில் இளசுகள் விசில் அடித்து ஆரவாரம் செய்வதுமுண்டு. நாட் டுக் கூத்து, சின்ன மேளம் என்று அந்த நாள்கள் ஒரே கலகலப்புடன் காணப் படும். உற்சவகாரர்கள் போட்டி போட்டு சின்ன மேளம் கொண்டு வருவதுண்டு. தமது திருவிழாவில் சின்ன மேளம் என்றால் திருவிழாக்காரருக்கு அது ஒரு பெருமைபோல. இடையில் இவையெல் லாம் அருகிப்போய் விட்டன. ஆலயங் களில் சின்ன மேளம் என்ற ஆட்டம் இடம்பெறுவது தற்போது முழுமையாக நிறுத்தப்பட்டு விட்டது. பழம்பெரும் கலைஞர்களின் மறைவுகளால் நாட்டுக்கூத்துகளும் நலிவடைந்து விட் டன. தற்சமயம் எப்போதாவது இன்றைய இளம் கலைஞர்களால் இரண்டொரு கூத் துகள் மட்டும் மேடை ஏற்றப்படுகின்றன.

போரின் முன்னர், நாடகத்துறையும் நெடுந்தீவில் மிகப் பெரிய வளர்ச்சியைக் கொண்டிருந்தது. வே.பேரம்பலம், கு.திசை ராஜா, வே.இராசலிங்கம், மு.அமரலிங் கன், வே.சபாரத்தினம், நா.சங் கரப்பிள்ளை, அ.திருநாவுக் கரசு, ம.இராயப்பு, ம.சவிரிமுத்து, க.மருதையினார், செ.மகேசு போன்ற சிறந்த நடிகர்கள் நாடகத்துறையை வளர்த்தெடுப்பதில் முக்கியத்துவம் கொண்டிருந்தனர். பாட சாலைகள் இதற்கான ஒத்துழைப்பை வழங்கியபோதிலும்– குறிப்பாக இந்தக் கலை வளர நெடுந்தீவு மகாவித்தி யாலயம் அளப்பரிய பங்களிப்பை வழங் கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதி பராக இருந்த எ.நவரட்ணசிங்கத்தின் அனுசரணையுடன் சங்கீத ஆசிரியர் களாகப் பணியாற்றிய பாலசுந்தரம், கதிரவேல் போன்றவர்கள் சங்கீதம், நாடகம் போன்றவற்றில் மாணவர் களை ஈடுபாடுகொள்ள வைக்கக் கார ணமாகினர். நடனக் கலைஞரான வேல் ஆனந்தன் போன்றவர்கள் உருவாக நடன ஆசிரியர் ஏரம்பு சுப்பையா கைகொடுத்தார். பாடசாலைகளில் இடம்பெறும் முக்கிய விழாக்கள் எல் லாமுமே இந்தக் கலைகள் வளர ஊன்றுகோலாகின.

நாட்டுக்கூத்துகள், நாடகங்கள், நடனம் என்று கலை வளர்ந்த பகுதியாக ஒரு காலத்தில் மிளிர்ந்த நெடுந்தீவு, இன்று பின்னடைவுகளைச் சந்தித்திருந்தாலும் கூட, போரின் பின்னர் இப்போது மீண்டும் முளைவிடத் தொடங்கியுள்ளது போல் தெரிகின்றது. நெடுந்தீவு பிரதேச செயலக கலாசாரப் பேரவை இதற்கான அடித்தளத்தை இட்டுள்ளது. ஒரு சம யம் நிமிர்ந்து நின்ற கலைகள் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைகளால் தேக்கமடைந்து இருந்தன. எனினும் தற்போதுள்ள இளம் கலைஞர்களும் சிறந்த நாட்டுக்கூத்துக் கலைஞர்களும் நெடுந்தீவில் முன்னர் போல் தொடர்ந் தும் அவைகள் வளர்ச்சியடைவதற் கான கடமைகள் தமக்குரியவை என் பதை உணர்ந்து அதற்காக முன்வந்து செயற்பட வேண்டும்.





**ஆலய உற்சவங்கள் ஆரம்பமாகப் போகின்றன என்றதும், ஒரு மாதம் முன்னதாகவே நாட்டுக்கூத்துக் கலைஞர்கள் தமக்கான பயிற்சி களைத் தொடங்கி விடுவார்கள். அண்ணாவிமார், இரவு பகலாக நீண்ட நேரம் செலவிட்டு கூத்துக்களை மிகவும் திறமையாக பழக்கியெடுத்து விடுவார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேகம் என்றும் தீமையே பயக்கும்



மனிதனது மோசமான குணங்களில் பொறாமைக்கு அடுத்த இடம் வகிப்பது சந்தேகம். இந்தச் சந்தேக குணம்படைத்தவர்கள் அவ்வளவு எளிதில் எவரையும், எதையும் நம்பி விட மாட்டார்கள். ஒவ்வொன்றையும் சந்தேகக்கண் கொண்டே பார்ப்பார்கள்.

ஒருமனிதனுக்கு நம்பிக்கை குணவியல்பு எவ்வளவு அவசியமானது, நன்மை பயக்கக் கூடியது என்பதை உணர்த்துவதே இந்தக் கதை.

முல்லைவாயில் என்ற நாட்டை விமலாதித்தன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் மிகவும் சந்தேகக் குணம் கொண்டவன். தனது ஆட்சியின் கீழ் பணிபுரியும் ஒவ்வொரு அதிகாரியும் தனது மேற்பார்வையில்லாமல் சரியாகத் தங்கள் வேலைகளைச் செய்யமாட்டார்கள் என்று அவன் எண்ணினான். இதனால் ஆட்சியின் ஒவ்வொரு துறையை யும் தானே முன்னின்று கண்காணிக்கத் தொடங்கினான். ஒவ்வொரு துறையிலும் விமலாதித்தன் தலையிட்டு, தன் எண்ணப்படியும், உத்தரவுப்படியும் தான் எதுவும் நடக்க வேண்டும் என்ற சட்டத்தை வகுத்துவிட்டதால் ஆட்சி நிர்வாகத்தில் பெரிய குழப்பம் ஏற்பட்டது.

ஆட்சிப் பொறுப்பில் உள்ள எல்லாத்துறைகளும் அவற்றின் அதிகாரிகளும் மன்னன் விமலாதித்தனின் உத்தரவு இல்லாமல் ஒரு துரும்பைக் கூட அசைத்துப் போட முடியவில்லை.

விமலாதித்தனோ தானே ஒவ்வொரு துறையையும் கவனித்து அவற்றை நடைமுறைச் செயற்பாட்டுக்குக் கொண்டுவர வெகுகாலமாகியது.

எல்லாத் துறைகளையும், எல்லா அதிகாரிகளையும் ஒரே நேரத்தில் விமலாதித்தனால் கண்காணிக்க முடியாததால், பல துறைகளின் செயல்கள் முடங்கிவிட்டன. பல அதிகாரிகள் வேலை எதுவும் செய்யாமல் மன்னன் எமது துறையை கண்காணிக்க வருவதற்கு இன்னும் பல மாதங்கள் ஆகும். அதுவரை நாம் உல்லாசமாக இருப்போம் என்று நினைத்து முழுச் சோம்பேறிகளாக நாள்களைக் கடத்தினர். வேறுசில அதிகாரிகளோ இதற்கும் ஒருபடி மேலே போய் அலுவலகத்துக்கு வராமலேயே மாதாமாதம் சம்பளம் வாங்கி கொண்டிருந்தனர்.

குடிமக்களும் வரிகட்டுவதில் அக்கறை காட்டவில்லை. நாடெங்கிலும் வன்முறைகளும் கொள்ளைகளும் மலிந்துவிட்டன.

இந்த நிலையில் - விமலாதித்தனின் பகை அரசனான அங்கதன் முல்லைவாயில் நாட்டின் மீது படையெடுத்தான்.

அப்பொழுதுதான் தனது இராணுவத்தைப் பற்றிய நினைவே வந்தது விமலாதித்தனுக்கு. உடனே அவன் தனது படைத்தளபதிகளை அழைத்து "தளபதியரே! அங்கதன் எமது நாட்டின் மீது படையெடுத்து வந்து விட்டான். எம்முடைய படைகள் அனைத்தும் தயார் நிலையில் இருக்கின்றவா?" என்று கேட்டான்.

"இல்லை மன்னவா!" என்று பதிலளித்தார் ஒரு தளபதி.

"இல்லையா! ஏன்?" என்று வியப்போடும் திகைப்போடும் கேட்டான் விமலாதித்தன்.

"எனது உத்தரவு இல்லாமல் எதுவும் நடக்கக் கூடாது என்று தாங்கள்தான் உத்தரவு போட்டிருக்கிறீர்கள். இன்றுவரை எமது இராணுவத் துறையின் செயற்பாடுகளுக்குத் தாங்கள் உத்தரவு எதுவும் இடவில்லை. அதனால் தங்களது உத்தரவு வரும்வரை நாங்கள் அனைவரும் இராணுவத்தை மேற்பார்வையிடுவதை நிறுத்தி வைத்துள்ளோம்!" என்று பதிலளித்தார் தளபதி.

இதைக் கேட்டுச் சற்று யோசித்த விமலாதித்தன். "சரி! இப்போது எமது முப்படைகளிலும் சேர்த்து மொத்தம் எத்தனை இராணுவ வீரர்கள் உள்ளனர்?" என்று கேட்டான்.

"தெரியாது மன்னவா! அவர்களைக் கணக்கெடுக்கும்படி தங்களிடமிருந்து இதுவரை உத்தரவு எதுவும் வராததால் அவர்கள் மொத்தம் எத்தனைபேர் என்பதைப் பற்றிய கணக்கு எதுவும் வைத்திருக்கவில்லை!" என்றார் தளபதி. "சரி! எமது வீரர்கள் அனைவரும் நல்ல போர்ப் பயிற்சி பெற்றவர்கள்தானே?" என்று கேட்டான் விமலாதித்தன்.

"எமது பழைய வீரர்கள்தான் போர்ப் பயிற்சி பெற்றவர்கள். அவர்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளனர். புதிதாகச் சேர்க்கப்பட்டவர்களுக்கு போர்ப் பயிற்சி அளிப்பதற்குள் இராணுவத்துறை முழுவதும் எங்கள் கட்டுப்பாட்டிலிருந்து தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டீர்கள் அவர்களுக்குப் போர்ப் பயிற்சி அளிக்குமாறு இன்றுவரை தங்களிடமிருந்து உத்தரவு வராததால் நாங்கள் அந்த முயற்சியில் இன்னமும் ஈடுபடவில்லை!" என்றார் தளபதி.

மன்னன் விமலாதித்தனின் மனம் இப்பொழுதுதான் தெளிவடையத் தொடங்கியது. "ஒரு ஆட்சியின் பல்வேறு விதமான பொறுப்புகளை ஒரே மனிதன் ஏற்றுக்கொண்டு நிர்வகிக்கத் தொடங்கினால் அங்கே குழப்பத்தைத் தவிர வேறு எதுவுமே சரியாகாது. அதனால் இன்று நாட்டின் செயற்பாடுகள் எல்லாம் ஸ்தம்பித்துப்போய் எதிரி படையெடுத்து எல்லைக்குள் நுழையும் வரை விடயம் விபரீதமாகப் போய் விட்டது. தனது சந்தேகம் என்னும் மோசமான குணம்தான் இத்தனை குழப்பங்களுக்கும், கஷ்டங்களுக்கும் காரணம். முதலில் இந்தக் குணத்தை ஒழித்தால்தான் எல்லாம் சரி வர இயங்கும்" என்ற திருந்திய மனநிலைக்கு வந்தான். உடனே படையெடுத்து வரும் எதிரி அங்கதனிடம் தனது தூதுவர் சிலரை அனுப்பி ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டான்.

பிறகு தன் ஆட்சியின் துறைகளை அதனதன் அதிகாரிகளிடம் ஒப்படைத்து தனது அதிகார எல்லையைக் குறைத்துக் கொண்டான். அதன்பிறகுதான் நாடு மறுபடியும் ஒரு சீரான இயக்கத்துக்கு வந்தது. விமலாதித்தனும் மனநிம்மதியடைந்தான்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1066 - இங்கிலாந்து அரசராக ஹெறால்ட் முடிசூடிக்கொண்டார்.
1099 - 5ஆம் ஹென்றி ஜேர்மனிய அரசராக முடிசூடிக்கொண்டார்.
1898 - முதலாவது தொலைபேசிச் செய்தி நீர்மூழ்கிக் கப்பலிருந்து சைமன் லேக்னால் அனுப்பப்பட்டது.
1925 - முழுவதும் பாசிஸ்ட்டுகள் அடங்கிய அமைச்சரவையை முசோலினி இத்தாலியில் அமைத்தார்.
1929 - அன்னை திரேசா இந்தியாவை வந்தடைந்தார்.
1930 - முதலாவது தன்னியக்க மூடு மோட்டார் வண்டி தனது பயணத்தைப் பூர்த்தியாக்கியது.
- பிறட்மன் 452 ஓட்டங்களை 377 நிமிடங்களில் (49பவுண்டரிகள் உட்பட)பெற்றுக் கிரிக்கெட்டில் சாதனை.
1939 - 'சுப்பர் மான்' காமிக் சித்திரம் முதன்முதலில் நாளேடொன்றில் பிரசுரம்.
1950 - சீனாவின் கொம்யூனிஸ்ட் அரசை பிரித்தானியா அங்கீகரித்தது.
1967 - பிலிப்பைன்ஸ் மலைப் பாதையில் இரண்டு பஸ் வண்டிகள் மோதி பள்ளத்தில் வீழ்ந்து- 84பேர் சாவு 140 பேருக்குகாயம்.
1972 - விளாடிமிர் புக்கோவ்ஸ்கி சோவியத் ரஷ்யாவிலிருந்து வெளியேற்றப்பட்டார்.
1980 - இந்திரா காந்தியின் காங்கிரஸ் கட்சி இந்தியத் தேர்தலில் வெற்றி.
1980 - ஜிபிஎஸ் சகாப்தத்தின் தொடக்கம்.
1994 - சாவகச்சேரி விமானக் குண்டுவீச்சில் காயமடைந்த வர்த்தகர் ஒருவர் மரணம்; உயிரிழந்தோர் எண்ணிக்கை 11ஆக அதிகரிப்பு.
1993 - சுப்பசோனிக் விமானங்கள் இடர். சித்தன்கேணி குண்டு வீச்சில் 9பேர் உடல் சிதறிச் சாவு, 15பேர் காயம். முற்பகல் 10.15 மணியளவில் சம்பவம்.
- இலங்கை நிலைமை; அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கவலை தெரிவிப்பு.
2000 - களுத்துறைச் சிறையில் திடீர் மோதல். தமிழ்க் கைதி ஒருவர் உயிரிழப்பு. 34பேர் காயம்; 4பேரின் நிலைமை கவலைக்கிடம்.
- நள்ளிரவு முதல் போர் நிறுத்தம்; பிரபா- சந்திரிகா ஒப்பமிட்டுப் பிரகடனம்.
2008 - பெனாசிர் படுகொலைச் சம்பவம் உடனடியாகத் துப்புரவுச்செய்யப்பட்டமையால் துப்புத்துலக்க தடயம் கிடைக்காது ஸ்கொட்லான்ட்யாட் அதிகாரிகள் திண்டாட்டம்.
2008 - தீர்வுத் திட்டம்குறித்து ஆலோசனைகள் எதையாவது சமர்ப்பித்தால் இந்த அரசைக் கவிழ்த்து வீட்டுக்கு அனுப்புவோம் என ஜே.வி.பியின் விமல் வீரவன்ச எச்சரிக்கை.
2009 - எம்.ரி.வி. நிறுவனத்துள் புகுந்து ஆயுதக் குழு அராஜகம். பன்னிப்பிட்டி சிரச, சக்தி நிலையங்களின் தலைமைக் காரியாலயத்துள் நேற்று அதிகாலை சம்பவம்.

## வர்ணம் தீட்டலாம் வாங்க!



## விடுகதைகளும் விடைகளும்

1. ஆசாரி கொத்தனார் செய்யாத தேர், தானே கிளம்பும் சித்திர தேர் - அது என்ன?
   - புற்று
2. சிவப்பு மொசைக்கொட்டை. பகட்டும் பட்டுச் சட்டை அது. அது என்ன?
   - பட்டுப்பூச்சி
3. உணவை எடுப்பான், எல்லோருக்கும் கொடுப்பான், ஆனால் தான் மட்டும் உண்ண மாட்டான் - அவன் யார்?
   - அகப்பை
4. உதைக்கத் தெரிந்தவனுக்கு நன்கு உழைக்கவும் தெரியும் - அவன் யார்?
   - கழுதை
5. உமிபோல் பூ பூக்கும். சிமிழ்போல் காய் காய்க்கும் - அது என்ன?
   - நெல்லிக்காய்
6. உணவு கொடுத்தால் வளருவான், நீர் கொடுத்தால் மாண்டு போவான் - அவன் யார்?
   - நெருப்பு

## மூக்கு



மூக்கே முகத்துக்கு அழகு
முகர்ந்து பார்த்தா இருக்கு
மூச்சே மூக்கின் வழியே வருது
முடிவே மூச்சில் இருக்கு.

வாசனை மூக்கு
அசுத்தமாய் இருந்தால் போச்சு
வேதனை தருமே மூச்சு
சுத்தமாய் இருக்கப் பழகு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.ப.வேந்தன்

# வெட்டுத் துணியில் வாழ்வை நகர்த்தும் வெற்றிப்பெண்



சுற்றிலும் வெட்டுத் துணிகள் (ஆடை தைக்கும் துணிகளின் கழிவு) உடைந்த கதிரையொன்று கயிறுபோட்டுக் கட்டி, பாவிக்கும் நிலையில் ஒரு பக்கம் கிடக்கிறது. இத்துப்போன கூரையில் ஒழுகாதவாறு ஆங்காங்கே பொலித்தீன்கள் செருகப் பட்டுக்கிடக்கின்றன. குனிந்துபோகுமளவுக்குப் பதிவான கொட்டில். ஒற்றைக் கொடியில் தொங்கும் உடைகள், ஒன்றிரண்டு பாத் திரங்கள், இவைகளோடு தலையணை உறைகளுக்குள் வெட்டுத் துணிகளை நிரப்பிக் கொண்டிருக்கிறார் மரிய புஸ்பம்.

இருபாலை பழைய தபால் நிலையத்துக்கு அருகில் வீதியோரமாக இருந்து கொண்டு தனது ஜீவனோபாயத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கும் இந்த வயோதிபப் பெண்ணின் வாழ்க்கையில் விதி தாறுமாறாக விளையாடியபோதிலும், தன்னம்பிக்கை குறையாமல் வாழ்வை நகர்த்திக்கொண்டிருக்கிறார் அந்தப் பெண்.

நான் தலையணை வாங்கப்போனதாக

> நான் உழைச் சாத்தான் எனக்குச் சோறு எனும்போது இயலாமையும் விரக்தியும் அவர் குரலில் தெரிகிறது.

நினைத்துக் கொண்டு என்னிடம் வியாபாரம்பேசியவர், நான் என்னை அறிமுகம் செய்ததும் 'ஆ..இரு தம்பி' என வாஞ்சையோடு கதிரையைக் காட்டினார்.



'என்ரை சொந்த இடம் பலாலி. நான் கலியாணம் கட்டினதுதான் இங்க. எனக்கிப்ப 60 வயசாகுது. ஆமிக்காரங்கள் அடிச்சதால ஏலாம வந்து இவர், 92 ஆம் ஆண்டே இறந்திட்டார். எனக்கு ரெண்டு பிள்ளைகள். அவையளும் சின்ன வயசிலையே காச்சலாலை இறந்துபோட்டினம் (சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு) அப்ப இருந்தே தனிமைதான். எனக்கு நாலு பொம்பிளைச் சகோதரம் மட்டும்தான். அவை சொந்தக் காரரோட இருக்கினம். நான் தனிய இங்க இருக்கிறன். இப்பிடியே தலகணியோட காலம் போகுது' என்றார்.

'வீடு இப்பிடி இருக்கே? மழையெண்டா எப்பிடிச் சமாளிப்பீங்கள்? எனக்கேட்க, "அதை ஏன் மோனை கேக்கிறாய். ஒரே ஒழுக்குத்தான். நானும் இத கட்டித்தாங்கோ என்டு சுவாமிமாரிட்டையும், (கிறிஸ்தவ பாதர்) விதானைமாரிட்டையும், வேற பெரிய பெரிய ஆக்களிட்டையும் கேட்டன். ஒரு பிரியோசனமும் இல்லை. நீ தனியாள் தானே. உனக்கெதுக்கு வீடெண்டு கேக்கினம். அப்பிடி இல்லாட்டி சொந்த ஊரில கட்டித்தருவம், பொறுங்கோ என்கினம். நிவாரணம் இல்லை, சமுர்த்தி இல்லை, நான் என்ன செய்ய. இப்பிடியே இருக்க வேண்டியது தான். நான் உழைச் சாத்தான் எனக்கு சோறு" எனும் போது இயலாமையும்விரக்தியும் அவர் குரல்களில் தொனிக்கிறது.

இந்தத் தலையணை வியாபாரம் பற்றி சொல்லுங்களேன் எனக்கேட்டதற்கு..

இது பக்கத்தில ஶ்ரீராம் பக்டரியில போய் வெட்டுத்துணிகளை வாங்கிக்கொண்டு வந்து தலகணி உறை தைச்சு விப்பன். ஒரு கிலோ துணி 15 ரூபாக்கு வேண்டுவன். 10 கிலோ துணியில 8,9 தலகணி தைக்கலாம். எல்லாம் செய்து வித்தா ஒரு தலகணிக்கு 10,15 ரூபா கிடைக்கும். தளபாடக்கடைக்காரர் வந்தா ஒரேடியா எடுப்பினம். நானும் இதில வைச்சு விப்பன். இப்பிடியே போகுது என்ரை வாழ்க்கை. வேலை கஷ்டமில்லை. அவளவு கழிவையும் தெரிஞ்செடுக்கிறதுதான் கொஞ்சம் கஷ்டம். முந்தியெண்டா நிறைய தலகணிகள் எடுப்பினம். இப்ப நல்லாய்க் குறைஞ் சிட்டுது. என்றவரிடம் சராசரி வருமானம் எப்பிடி இருக்கு எனக்கேட்டதற்கு. அது 200, 300 இப்பிடித்தான் வரும். தனியாள் என்டதாலை ஏதோ சமாளிக்கிறன் என்றார்.

"கரண்டும் இல்லை. இருட்டிவிட்டுது. விளக்குக் கொளுத்திட்டு வாறன் இருங்க," என்றவரிடம், 'சரியம்மா, போட்டுவாறன்' என்று வெளிக்கிடும் போது, சம்பிரதாயத்துக்குகூட நான் தலையணை வாங்கவில்லை.

# கனதியான வைத்தீசுவரக் குருக்களின் நூற்றாண்டு மலர்

கருடன்



உலக வரை படத்திலே, சைவ சமயத்தின் அடையாளமாக, இந்த நூற்றாண்டிலே காரைநகர் என்ற புனிதமான இடம் தெளிவாகக் குறிக்கப் படுகிறது. இத்தகு மகிமைக்கு மூல காரணமாக விளங்குபவர், கலாநிதி க.வைத்தீசுவரக் குருக்களாவார். இவர் பற்றிய தும், இறை பற்றியது மான நூற்றாண்டு மலரை பெறுமதியாகவும், கனதியாகவும் வெளியிட்டு வரலாறு படைத்த வர்கள் காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானப் பெருந்தகையோர் ஆவர். அற்புதமான படைப்பு. இந்த அரிய பொக்கிசத்தை ஓர் ஆவணமாக நூலாக்கிய பெருமை குருக்களின் சீடனாகிய பா.துவாரகனையே சாரும். தேவி அச்சகத்தாருக்கு வரம் கொடுத்த நூலிது.

### வெளியீடு

கடந்த மாதம் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தில் இந்த நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. வடமாகாணக் கல்வி அமைச்சின் இளைப்பாறிய பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில், இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த வடமாகாண சபைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், மலர் ஆசிரியர் பா.துவாரகன் இருவருமாக மலரை வெளியிட் டுப் பேறாக்கினர். கல்விக் காருண்யன், இ.எஸ்.பி.நாகரத்தினம் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

### கனதி

சுமார் 500 பக்கங்கள் கொண்ட 88 கட்டுரைகள், 43 படங்கள், ஆசியுரை, வாழ்த்துச் செய்திகளுமாக, வைத்தீசுவரக் குருக்களின் ஆன்மிகம் சொட்டும் முகப்பு அட்டையுடன், தேவி அச்சகத்தாரின் நேர்த்தியான தமிழ் வார்ப்புடன், நூற்றாண்டு மலர் புண்ணியமாய்ப் பூத்து மணம் வீசியது. சைவ சமயத்தில் இவரைப் போன்ற சாதனையாளரை தேடுவதாயின் இன்னும் நூறு வருடங்கள் தேட வேண்டியதாக இருக்கும்.

### தனித்துவம்

மிகமிக எளிமையான உடை, நடை, பாவனை, தாழ்ந்து வணங்கும் பணிவு, சிவசின்னங்களின் பொலிவு, வாய் திறந்தால் திருவாசகம், நோய்க்கு இடம் கொடாத திருமுறை தோய்ந்த உடல், யோகர் சுவாமிகள் அருளிய நற்சிந்தனைகளின் வெளிப்பாடு, எவரையும் வரவேற்கும் பண்பும், வழியனுப்பும் பண்பாடும், நூல் வேண்டிவந்தோரை ஆல்போல் அறிவூட்டி, நெறியூட்டி மகிழும் பாங்கும் குருக்களின் தனித்துவத்தைப் பறைசாற்றி நிற்கும். ஏறக்குறைய 10,000 புத்தகங்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகமாக அவர் இறக்கும் வரை மிளிர்ந்தமை காலம் படிக்க வேண்டிய தொன்றாகும். நூலின் பெறுமதிக்கு மலரின் முகப்பு அட்டை ஒன்றேபோதும். குருக்கள் விரும்பியவாறு பட்டங் களோ, பதவிகளோ இல்லாது வைத்தீசுவரக் குருக்கள் என்று மட்டும் பொறிக்கப்பட்டிருப்பது, மகாராணி சோம சேகரத்தாரையும், மலராசிரியர் துவாரகனையும் ஒரு தடவை சிந்திக்க வைத்துவிட்டது.

> யோகர் சுவாமிகள் அருளிய நற்சிந்தனைகளின் வெளிப்பாடு, எவரையும் வரவேற்கும் பண்பும், வழியனுப்பும் பண்பாடும், நூல் வேண்டி வந்தோரை ஆல்போல் அறிவூட்டி, நெறியூட்டி மகிழும் பாங்கும் குருக்களின் தனித்துவத்தைப் பறைசாற்றி நிற்கும்.

### உள்ளடக்கம்

வேண்டும் பரிசுகள் நிறைந்துள்ளன. வியாவில் ஐயனாரினுடைய திருவருள், ஈழத்துச் சிதம்பரத்தின் அருட்பொலிவு, பேராசிரியர் கா.சிவத்தம்பியின் கருதுகோள், பேராயர் எஸ்.ஜெபநேசனின் யதார்த்த உரை, தமிழ் நாடு பேராசிரியர் இரா.செல்வகணபதியின் கட்டுரை, குருக்களின் வம்ச வரலாறு, இளைப்பாறிய நூலகர் க.சௌந்தரராஜ் சர்மாவின் கணபதீஸ்வரக் குருக்கள் நூலகம் என்ற கட்டுரையும், அவரது முழுமையான வாழ்க்கை வரலாறும், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் வரைந்த குருதத்துவம் என்ற முக்கித்துவமான கட்டுரை, பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸின் சம்பந்தர் பாடல்களில் காலக்கணிப்பு என்ற கட்டுரை, சைவப்புலவர் சு.செல்லத்துரையின் கட்டுரை, முனைவர் ஜெ.அரங்கராஜின் கந்தரோடை என்ற பயனுள்ள கட்டுரை, குறிப்பாக குருக்களின் மகளான இராணி வைத்தீசுவரக் குருக்களின் தந்தை பற்றிய சிறப்பான கட்டுரை, துர்க்காதேவி தேவஸ்தான அறப்பணியாளர் கா.சிவபாலனின் கட்டுரை, சிற்பி ஐயாவின் பணியுமாம் என்றும் பெருமை என்ற கட்டுரை, சிவத்தமிழ்ச் செல்வியின் அர்த்த புஷ்டியான கருத்துக் கலசமும், கலாபூசணம் திருமதி வசந்தா வைத்தியநாதனின் இனிதான கட்டுரை, பா.துவா ரகனின் விளக்காயமைந்த கட்டுரை, கனடா சைவ சித்தாந்த மன்றத் தலைவரான தி.விஸ்வலிங்கத்தின் அறிவார்ந்த கட்டுரை, பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரனின் ஞானக்கட்டுரை, அதிபர் வே.முருக மூர்த்தியின் திருவாசகக் கட்டுரை, பண்டிதர் தி.பொன் னம்பலவாணருடைய பாற்கடல் பாலிப்பும், நாரந்தனை யூர் நடமாடும் பல்கலைக்கழகமாய் மிளிரும் ஆ.சபாரத்தினத்தின் அன்பான பணிந்துரை, மகாராணி சோமசேகரனின் வெளியீட்டுரை, எஸ்.ஜெபநேசப் பேராயரின் தார்மீக உரை, குருக்களின் இலக்கினத்தில் குரு அமர்ந்த சாதகமும், 1991 ஆம் ஆண்டு சுட்டெரிக்கும் வெயிலில், புத்தகங்களைத் தலைமேற் சுமந்து வந்து, புத்தகங்களைப் பாடுபட்டுப் போர்ச் சூழலிலிருந்து பாதுகாத்த கண்ணீரை வரவழைக்கும் குருக்களின் ஓவி யக் காட்சி, அடேயப்பா, அத்தனையும், ஏனைய படைப்புக்களும் அற்புதமானவையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தென்னவன்

### எழுச்சியுடன் இடம்பெற்ற தென்மராட்சிப் பிரதேச

# பண்பாட்டு விழா

இலைமறைகாய்களாக மறைந்திருக்கும் கலைஞர்களை வெளியுலகுக்குக் கொண்டு வரும் முயற்சியாக, வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சி பிரதேச செயலகத்தின் பண்பாட்டு விழா, அண்மையில் சாவகச்சேரி ஐங்கரன் மணிமண்டபத்தில், பிரதேசத்தின் மூத்த இசைக் கலைஞர் முருகப்பா பஞ்சாபிகேசன் அரங்கில் இடம்பெற்றது.

கலைஞர்களை வெளியுலகுக்குக் கொண்டு வரும் வகையில் பிரதேசத்தில் கலை உலகுக்கு அரும்பணியாற்றிவந்த கலைஞர்களைக் கௌரவித்து "கலை சாகரம்" விருது வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. கலைகள் அழியாத நினைவுகள் போன்றவற்றை உள்ளடக்கிய "தென். பொழில்" நூல் வெளியீடும் நிகழ்வுக்கு மேன் மேலும் மெருகூட்டும் வகையில் அமைந்திருந்தமை பாராட்டத்தக்கது.

பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு தென்மராட்சிப் பிரதேச செயலராக கடமையாற்றிய வேளையில் பிரதேசத்தில் கலை உலகை மேம்படுத்த பெருமுயற்சிகள் எடுத்த, கிளிநொச்சி மாவட்ட ஓய்வுநிலை மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசனும், மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரத்தினமும், யாழ்.மாவட்ட கலாசார அலுவலர் திருமதி மாலினி கிருஷ்ணானந்தனும் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பிரதேச கலைஞர்கள் மாணவர்களின் நிகழ்வுகள் இடம்பெறவிருந்ததால் விழா ஆரம்பிப்பதற்கு முன்னரே மண்டபம் மக்களால் நிறைந்த நிலையில் காணப்பட்டது.

நிகழ்வின் ஆரம்பத்தில் விழாவைக் காண வந்தவர்களை மயக்கும் விதத்தில் நாதஸ்வர இசை அமைந்திருந்தது. மகுடிக்கு அடங்கிய நாகம் போல, இசை நிகழ்வு முடியும்வரை மண்டபத்தில் நிசப்த நிலை காணப்பட்டது. இசைப் பேரரசு சங்கத்தானையூர் முருகப்பா பஞ்சாபிகேசனின் பேரப்பிள்ளைகளான சித்தார்த்தன், பிரதித்தன் ஆகியோரின் நாதஸ்வர இசை நிகழ்வு, விழாவுக்கு மகுடம் வைத்தது போல் அமைந்திருந்தது.

அதனையடுத்து சாவகச்சேரி பூர்ணா நர்த்தனாலய மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. அடுத்து சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கண்ணன் பாடலும், நடனமும் ஒருங்கமைத்து வழங்கப்பட்டன. சிறார்களின் நடனம் என்றால் அதன் கவரும் தன்மை அதிகம் என்பதை அங்கிருந்தவர்களின் கால் அசைப்பு சத்தத்தின் மூலம் காண முடிந்தது.

அதனையடுத்து கவிஞர் த.நாகேஸ்வரன் தலைமையிலான "இனியேனும் திருந்துவமோ?" என்னும் கவியரங்கு இடம் பெற்றது. இதில் கலந்து கொண்ட கலைஞர்கள் தமிழர் பண்பாட்டின் தற்போதைய நிலை குறித்து பார்வையாளர்களுக்கு புரியும் விதத்தில் களம் அமைத்துக் கொடுத்திருந்தனர். ஆத்மிக வழியிலும், தேடுதல் நிலையிலும், தமிழர் விழுமியங்கள் பாதுகாக்கப்படுதலிலும் இளைஞர் யுவதிகள் மட்டுமல்ல, பெற்றோர் மத்தியிலும் காணப்படும் வெளிநாட்டு மோகங்களால் ஏற்படும் விளைவுகள் பற்றியும், அதனால் நாம் படுகின்ற அவலங்களையும் சித்திரித்து ஆற்றிய கவி வரிகள் அனைவரையும் கவரக்கூடியதாக அமைந்திருந்தன. கவிவரிகளை அச்சொட்டாகப் புரிய வைக்கும் விதத்தில், சிவ. முகுந்தன், க.ரஜனிகாந்தன், திருமதி க.குணதர்சனா, அ.வாசுதேவா ஆகியோர் கவி மழை பொழிந்தனர்.

அடுத்து, பிரதேசத்தில் கலை உலகுக்கு அரும் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஐந்து கலைஞர்களுக்கு பொன்னாடை போர்த்தி பிரதேசத்தின் உயரிய விருதான "கலைசாகரம்" விருதுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இலக்கியப் பணியில் பணியாற்றிக் கொண்டிருக்கும் எழுத்தாளர் மறவன்புலவு க.சச்சிதானந்தன், நடனத்துறையில் 40 வருடங்களுக்கு மேலாக பல நூறு மாணவர்களை கலைத் துறைக்கு உட்புகுத்திக் கொண்டிருக்கும் நடனக் கலைஞர் "நாட்டியக் கலைமணி" திருமதி யசோதராதேவி விவேகானந்தன், கடந்த 50 வருடங்களுக்கு மேலாக பிரதேசத்தில் இசைத் துறையில் தனக்கென ஒரு பாணியை அமைத்து, அதன் மூலம் ஆயிரக்கணக்கான இசை வல்லுநர்களை உருவாக்கிக் கொண்டிருக்கும் "கலாபூசணம்" செல்வி மாதுசிரோன்மணி வேலாயுதர், கடந்த 50 வருடங்களுக்கு மேலாக நாடகத்துறையின் மேம்பாட்டுக்காக ஆர்மோனியக் கலையை வளர்த்துக் கொண்டிருக்கும் கந்தன் ஐயங்கன் செல்லத்துரை, கடந்த 50 வருடங்களாக நாதஸ்வரக் கலையை வளர்த்துக் கொண்டிருக்கும் கைதடியூர் கலைஞர் சி.தங்கவேலு ஆகியோர் பிரதேசத்தின் உயர் விருதான "கலை சாகரம்" விருதும் சான்றிதழும் வழங்கப்பட்டு பொன்னாடை போர்த்தி விருந்தினர்களால் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் கடந்த வருடம் பிரதேசத்தின் கலைசாகரம் விருது பெற்ற கலைஞர்களும் கலந்து கொண்டமை நிகழ்வுக்குப் பெருமை சேர்த்தது.

> பிரதேசத்தில் கலை உலகுக்கு அரும் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஐந்து கலைஞர்களுக்கு பொன்னாடை போர்த்தி, பிரதேசத்தின் உயரிய விருதான "கலைசாகரம்" விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இயல் நிகழ்வாக, செல்வி கம்சிகா கிருபானந்தக் குருக்கள், செல்வி ஜானுகா விக்னேஸ்வரன் ஆகியோரின் தனி நடன நிகழ்வுகள் ஏற்பாடாகியிருந்தன. நடன நிகழ்வில் பிறள்வு ஏற்படாத நிலையில் சிறுமிகள் தமது திறமைகளைக் காண்பித்தனர்.



அடுத்து, பிரதேசத்தின் கலைகள், பண்பாடுகள் புராதன சின்னங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய கட்டுரைகள் கவிதைகள் அடங்கிய "தென். பொழில்" நூல் வெளியிடப்பட்டது. நூலின் வெளியீட்டுரையை உதவிப் பிரதேசசெயலர் செல்விரஞ்சனா நவரத்தினமும், நயப்புரையை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆசிரியர் ச.மார்க்கண்டுவும் நிகழ்த்தினர்.

தென். பொழில்-1 நூலை முதன்மை விருந்தினர் செ.ஸ்ரீநிவாசன் வெளியிட, சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் பெற்றுக் கொண்டார்.

பிரதேச கலாசாரப் பிரிவினரால் பண்பாட்டு விழாவையொட்டி மாணவர்கள் மற்றும் எழுத்தாளர்களிடையே திறந்த போட்டிகளாக நடத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்ட ஆக்கங்களுக்கான பரிசில்களும் விருந்தினர்களால் வழங்கப்பட்டன.

இறுதி நிகழ்வாக கைதடி வாழ் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட "காத்தவராயர்" சிந்து நடைக் கூத்து இடம்பெற்றது. அதில் பங்கேற்ற ஒவ்வொரு கலைஞரும், தாம் ஏற்ற பாத்திரமாகவே மாறி நடித்தமை பாராட்டத்தக்கது. இன்னமும் நீண்டகாலம் பாரம்பரியமிக்க கலைகள் பிரதேச மத்தியில் நிலைத்து வாழும் என்பதை சித்திரிக்கும் வகையில் விழா அமைக் கப்பட்டிருந்த போதிலும், சில குறைபாடுகளையும் காண முடிந்தது.

முதலில் நேர ஒழுங்கமைப்பு அவசியம் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் நிகழ்வின் ஆரம்பத்தில் பார்வையாளர்களால் நிறைந்த நிலையில் காணப்பட்ட மண்டபம், இறுதி நிகழ்வில் விருந்தினர்களும் இருபதுக்குக் குறைந்த பிரதேச செயலக உத்தியோகத்தர்களும், பொதுமக்களும் காணப்பட்ட நிலை, மனதுக்கு வேதனையளிக்கிறது. கலையை வளர்க்கப்பாடுபடும் வேளையில் தொலைக்காட்சியில் காண்பிக் கப்படும் தொடர் நாடகத்தைக் காணவும், தூர இடங்களிலிருந்து வந்த பிரதேச செயலக பணியாளர்கள் தமது நிகழ்வாக கருதாமல் தமது கடமை நேரம் முடிந்து விட்டது போல மாலை 4 மணிக்கு புறப்பட்டு, பார்வையாளர்களை வெளியேற்றும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். ஒவ்வொரு நிகழ்வும் முடியும் வேளையில் அவற்றுடன் தொடர்புடையவர்களும் வெளியேறினர். இவ்வாறான செயற்பாடு உண்மையில் பிரதேச செயலகம் எடுத்த ஆக்கபூர்வமான நிகழ்வுகளை பிரதேச செயலக அலுவலர்களே புறக்கணிப்பது போல் காணப்பட்டது. ஒரு விழாவைக் குறித்த நேரத்தில் நடத்தி முடிக்கத் திட்டமிடப்பட்டிருந்தால் பார்வையாளர்களின் எண்ணிக்கை குறைவடையக்கூடிய நிலை ஏற்பட்டிருக்காது.

அடுத்து பிரதேசத்தில் பல்வேறு கலைகளும் கலைஞர்களும் உள்ளபோதிலும் நடனமும் நாடகமும் மட்டும் காட்சிப்படுத்தப்பட்டன. இசையுடன் தொடர்புடைய கலைஞர்களை மேடையேற்றாதது வேதனையளிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாளை**
மார்கழி -22
வியாழக்கிழமை 07.01.2016
திதி: துவாதசி கா.07.36
நட்சத்திரம்: அனுசம் மு.ப.08.53
ராகுகாலம்: 02.02-03.32 வரை
சுபநேரம்: 08.02- 09.32 வரை
பிரதோஷ விரதம்

## மரப்பொருள்கள் பளிச்சென மின்னிட

- குளிர் காலங்களில் ஏற்படும் ஒரு பெரிய தொல்லைதான், மரப்பொருள்களில் பூஞ்சை படிவது. ஆம், இந்தக் காலங்களில் வீட்டில் அதிகப்படியான ஈரப்பசை இருப்பதால், மரச் பொருள்களில் ஈரம் தங்கி, பூஞ்சைகளைப் படிய வைக்கின்றன. எனவே வீட்டில் மேசை மற்றும் நாற்காலிகள் மரத்தால் செய்யப்பட்டவையாக இருந்தால், சரியாகப் பராமரிப்பது அவசியமாகும்.
- வீட்டில் மரப் பொருள்கள் ஈரமாக இருந்தால், அவற்றை வெயிலில் நீண்ட நேரம் உலர வைக்க வேண்டும்.
- மேசை மற்றும் நாற்காலி ஈரமாக இருந்தால், வெளியில் எவ்வளவு நேரம் வைக்க முடியுமோ, அவ்வளவு நேரம் வைக்க வேண்டும். இதனால் அதில் பூஞ்சனம் இருந்தால் காய்ந்து விடும். பின்னர் அதனை எளிதில் நீக்கி விடலாம்.
- வெள்ளை வினிகரில் நனைத்த ஈரமான துணியைக் கொண்டு ஒரு முறை துடைத்து எடுக்க வேண்டும். வினிகர் கொண்டு துடைத்து எடுத்தப் பின்னர், அதனைவெளியேவெயிலில்குறைந்தது 2 மணி நேரமாவது உலர வைத்து, பின் சுத்தமான துணியால் துடைக்க வேண்டும்.
- அதன்பின்னர், எலுமிச்சைச் சாற்றை நீரில் கலந்து, அந்தக் கலவையை பஞ்சில் நனைத்து, அதனை அவற்றின் மேல் ஒரு கோட்டிங் போல் தேய்த்தால், எலுமிச்சை மீண்டும் பூஞ்சை வராமல் தடுக்கும். இறுதியில் மீண்டும் மரப் பொருள்களை வெயிலில் அரை மணி நேரம் உலர வைத்து எடுத்தால், உங்கள் மேசை மற்றும்நாற்காலிஎன்பவை புதியவை போன்று பளிச்சென்று மின்னும். இவ்வாறெல்லாம் செய்து வந்தால், நிச்சயம் குளிர்காலங்களில் வீட்டில் இருக்கும் மேசை மற்றும் நாற்காலியை சுத்தமாக வைத்துக் கொள்ளலாம்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கண்ணாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 120 | 100 | 80 | 140 | 100 | 120 | 90 |
| கத்தரி | 180 | 180 | 180 | 170 | 200 | 140 | 120 |
| கரட் | 250 | 240 | 200 | 180 | 300 | 400 | 280 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40 | 60 | 30 |
| பயிற்றை | 160 | 120 | 180 | 80 | 240 | 150 | 150 |
| பாகல் | 250 | 160 | 200 | 160 | 220 | 300 | 250 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 90 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 90 | 100 | 80 | 90 | 100 | 90 |
| சி.வெங்காயம் | 120 | 180 | 120 | 140 | 140 | 200 | 120 |
| பூசணி | 50 | 50 | 60 | 50 | 40 | 60 | 40 |
| தக்காளி | 100 | 120 | 100 | 80 | 100 | 80 | 50 |
| வாழைக்காய் | 70 | 60 | 50 | 60 | 60 | 40 | 40 |
| கீரை | 30 | 60 | 40 | 20 | 40 | 50 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 30 | 50 | 30 | 40 | 15 |
| பச்சை மிளகாய் | 600 | 500 | 600 | 500 | 600 | 600 | 500 |
| புடோல் | 100 | 120 | 100 | 100 | 80 | 80 | 100 |
| கோவா | 180 | 160 | 180 | 160 | 120 | 140 | 150 |
| வெண்டி | 160 | 140 | 200 | 120 | 100 | 100 | 120 |
| போஞ்சி | 200 | 240 | 240 | 280 | 240 | 150 | 180 |
| லீக்ஸ் | 150 | 160 | 160 | 180 | 190 | 100 | 160 |
| தேங்காய் | 50 | 38 | 50 | 50–60 | 50–60 | 40 | 38 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 70–80 | 90 | 70 | 120 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 | 120 | 130 | 40 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 12 |
| கறிமிளகாய் | 300 | 280 | 400 | 300 | 400 | – | – |
| இராசவள்ளி | 150 | 160 | 140 | 160 | 160 | 120 | 100 |

சமைப்போம் வாங்க



## சிவப்பு அரிசி நட்ஸ் பிட்டு

**தேவையானவை**

சிவப்புப் பிட்டு அரிசி - 100 கிராம்
பருப்பு வகைகள் தலா - 6
(பாதாம், பிஸ்தா, முந்திரி),
சாரை பருப்பு - கால் கரண்டி
ஏலப்பொடி - கால் கரண்டி
ஜாதிக்காய் பொடி –கால் கரண்டி
நெய் - தேவைக்கு.
தேங்காய் துருவல் - கால் கப்,
சர்க்கரை கால் முதல் அரைக் கப்,
உப்பு - ஒரு சிட்டிகை,

**செய்முறை:**

சிவப்பு அரிசியை ஊற வைத்து உலர்த்தி மா வாக்கவும். பின்னர் அந்த மாவை வறுத்து வைக்கவும். சட்டியில் சிறிது நெய் விட்டு பருப்புகளைத் தனித்தனியாக வறுத்துக் கொள்ளவும். சிறிது உப்பைத் தண்ணீரில் கலந்து மாவில் தெளித்துக் கலக்கவும். ரவை மாதிரி கட்டி இல்லாமல் இட்லிக் கொப்பரையில் ஆவியில் மாவை வேகவைக்கவும். வெந்தபின் மாவை ஒரு பாத்திரத்தில் போட்டு சிறிது நெய், சர்க்கரை, ஏலப்பொடி, ஜாதிக்காய் பொடி, வறுத்த பருப்புகள், தேங்காய் துருவல் சேர்த்துச் சூடாகப் பரிமாறவும்.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 700 | 650 | 550 |
| நண்டு | 250 | 500 | 400 | 350 | 300 | - |
| கணவாய் | 600 | 600 | 600 | 600 | 700 | - |
| பாரை | 450 | 500 | 600 | 500 | 500 | - |
| சுறா | 300 | 400 | 600 | 650 | 600 | - |
| சீலா | 250 | 450 | 500 | 400 | 400 | 350 |
| விளை | 500 | 500 | 300 | 450 | 600 | 400 |
| முரல் | 250 | 350 | 400 | 300 | 400 | - |
| கும்பிளா | 300 | 300 | 400 | 400 | 600 | 250 |
| கிழாக்கன் | 400 | 700 | - | 400 | 600 | - |
| ஓரா | 300 | 400 | 300 | 450 | - | 300 |
| திரளி | 200 | 250 | 200 | 300 | 300 | 300 |
| நகரை | 150 | 300 | - | 300 | - | 300 |
| சூடை | 130 | 200 | 100 | 200 | 200 | - |
| ஒட்டி | 200 | 250 | 250 | 300 | 400 | 200 |
| திருக்கை | 150 | 350 | 250 | 280 | 300 | - |
| மதனம் | 250 | 250 | 220 | 280 | - | 250 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 100 | - |
| பாலை | 100 | 250 | 300 | 450 | 300 | - |
| வாளை | 150 | 100 | - | 300 | - | 250 |



## இது புதுசு



### சிறுமிகளுக்கான கவுன்

பதின்ம வயதுச் சிறுமிகளுக்கான, அழகாக வடிவமைக்கப்பட்ட ஆடைகள் விற்பனை செய்யப்படுகின்றன. அவற்றில் பெல்ட்டுடன் கவுண்கள் வருவது புதுவரவாகும். கவுணின் வண்ண நிறத்தில் அகலமான தோல் பெல்ட் இணைக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும். இந்த ஆடை 1100 ரூபா முதல் 1300 ரூபாவரை விற்பனை செய்யப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சிகள்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## தமிழக

அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்று வடபகுதி மீனவர்கள் தொடர்ச்சியாகக் குற்றம் சுமத்தி வரும் நிலையில், மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
நேற்று முன்தினம் திங்கட்கிழமையும், முல்லைத்தீவுக் கடலில் அத்துமீறிய தமிழக மீனவர்களை முல்லைத்தீவு மீனவர்கள் பிடித்துள்ள நிலையில் அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.
இந்தியாவுடன் நிலவும் சிறந்த நட்பின் அடிப்படையில் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் அனைவரும் எதிர்வரும் 15 ஆம் திகதி தைப் பொங்கலுக்கு முன்னர் விடுவிக்கப்படுவர். தமிழக மீனவர்களைத் தடுத்து வைப்பது இலங்கை அரசின் நோக்கமில்லை. எனினும் அவர் கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்து மீறுவதைத் தடுக்க வேண்டியுள்ளது.
தமிழக அரசியல்வாதிகளின் படகுகளிலேயே பெரும்பாலான தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடிக்கின்றனர் - என்றார் அவர். (த-5)

## எந்தப்

வடக்கு மாகாணப் போக்குவரத்துத் திணைக்களமும் , வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சும் இணைந்து வாகன வரி அனுமதிப்பத்திரங்களை மாகாணத்தின் எந்தப்பிரதேசசெயலகத்திலும் பெறக்கூடிய வகையில் இலத்திரனியல் வரி அனுமதிப் பத்திர முறையை நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளோம்.
இதன் மூலம் வடக்கு மாகாணத்தில் உள்ள 34 பிரதேச செயலகங்களில் எந்தப் பிரதேச செயலகத்திலும் பதிவில் உள்ளவாகனஉரிமையாளர்கள்தாம்வதியும் அல்லது தொழில் புரியும் பிரதேசத்துக்கு அண்மையில் உள்ள பிரதேச செயலகத்தில் வாகன வரி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.
இந்த நடைமுறையை எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நடைமுறைக்கு கொண்டுவருவதற்கு முன் ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. இவ்வாறு அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் முறை செயற்படுத்தப்பட்டதும் இந்த ஆண்டின் இறுதியில்இருந்துமற்றுமொருநடைமுறையைச் செயற்படுத்த முயற்சிக்கின்றோம்.
அதாவது தற்போது பிரதேச செயலகங்களில் பணத்தை மட்டுமே செலுத்த முடியும். இந்த ஆண்டின் இறுதிக்குள் இதற்குப் பதிலாக காசோலை மற்றும் முற்கொடுப்பனவு அட்டை மூலமான பணப் பரிமாற்றம் என்பனவற்றையும் நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளோம்.
இவ்வாறான சந்தர்ப்பங்களினால் பல வாகன உரிமையாளர்களின் நேர விரயம் மட்டுமன்றிப் பணச் செலவுகள் கூட மீதப்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கும் - என்றார். (த-101)

## இரண்டு

நடைபெற்றது.
இந்தக் கூட்டத்தில் சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் ஆராயப்பட்டதோடு முக்கிய தீர்மானங்கள் மூன்றும் நிறைவேற்றப்பட்டிருந்தன.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கத்துக்கு ஈ.பி.ஆர்.எல்.எப். வழங்கிய தியாகம் மகத்தானது. அதனை மத்திய குழு வெகுவாகப் பாராட்டுகின்றது.
2014 ஆம் ஆண்டு ஜூலை மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கட்சியின் மாநாட்டின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து பணியாற்றுவதற்காகத் தமிழ்த் தேசியச் சபை அமைக்கப்பட வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட ஏனைய பங்காளிக் கட்சிகளின் தலைவர்களிடத்திலும் கையளிக்கப்பட்டபோதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.
இவ்வாறான நிலையிலேயே தனிப்பட்ட கட்சி அரசியலுக்கு அப்பால் மக்களை அணி திரட்டுவதற்காகச் சகல தரப்பினருடனும் இணைந்து செயற்படும் நோக்கில் தமிழ் மக்கள் பேரவைக்கு ஆதரவு வழங்கியதோடு செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எப். தீர்மானித்தமை வரவேற்கப்படவேண்டியதோடு இந்தத் தீர்மானம் கூட்டமைப்பிலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எப். பிரிந்து சென்றதாக அர்த்தப்படுத்த முடியாது.
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் தமிழ் மக்கள் பேரவையுடனும் இணைந்து செயற்படுவதற்கு மத்தியகுழு அங்கீகாரமளிக்கின்றது.
தமிழ் மக்கள் பேரவை தொடர்பாகக் கிராமங்கள் தோறும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் பங்கேற்பதுடன் அரசியல் தீர்வு தொடர்பான வரைவை மக்களிடம் கொடுத்துச் சகல மக்களின் கருத்துக்களையும்பெற்றுக்கொள்ளுவதற்குப் பூரண ஒத்துழைப்புக்களை வழங்குதல் ஆகிய மூன்று தீர்மானங்களே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. (த-5)

## இந்திய

செய்துள்ளதாகக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம் தெரிவித்தது.
இதன்படி, யாழ். காரைநகர் கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 4 பேர் அவர்களது படகு ஒன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டக் கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் ரமேஸ் கண்ணா தெரிவித்தார்.
அவ்வாறே தலைமன்னார் கடற்பரப்பில் 8 இந்திய மீனவர்கள் இரண்டுபடகுகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கைது செய்யப்பட்ட மீனவர்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றங்கள் உத்தரவிட்டன. அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை கடற்படையினரின் பாதுகாப்பில் தடுத்து வைக்குமாறும் நீதிமன்றங்கள் உத்தரவிட்டுள்ளன.
நேற்றுமுன்தினம் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 6 பேர் படகு ஒன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் முல்லைத்தீவு மீனவர்களின் வலைகளையும் நாசம் செய்திருந்த நிலையில் முல்லைத்தீவு மீனவர்கள் அவர்களை மடக்கிப் பிடித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (த-4-106)

## பொங்கலை

யல் கைதிகள், வழக்கு முடிவில் வெளியேறும் சந்தர்ப்பத்திலேயே ஊடகங்களிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.
21 தமிழ் அரசியல் கைதிகள் கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முன்னிலைப் படுத்தப்பட்டனர். இதில் புதிதாக மூன்று கைதிகள் வழக்கு விசாரணைக்காக முன்னிலைப்படுத்தப்பட்டதுடன் அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்படுவதாகப் பங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.
சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை சமர்ப்பிக்கப்படாத நிலையில் அரசியல் கைதிகளை இந்த மாதம் 13 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.
இதன் பின்னர் கைதிகள் சிறைச்சாலை வாகனத்தில் ஏற்றப்படுவதற்காக அழைத்து வரப்பட்டபோது, நீதிமன்றம் முன்பாக வைத்து கருத்துத் தெரிவித்த அரசியல் கைதிகள், தமது விடுதலைக்கான அழுத்தத்தை வழங்குமாறு மக்களிடம் கோரிக்கை விடுத்தனர். இதற்காக எதிர்வரும் தைப் பொங்கல் பண்டிகையைப் புறக்கணிக்குமாறும் அவர்கள் கோரினர். (த-5)

## கஞ்சா

வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
கடந்த ஓகஸ்ட் மாதம் அராலி வீதி, பொம்மைவெளியைச் சேர்ந்த சப்ராஸ் என்ற நபர் 2 கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் கைது செய்யப் பட்டார். அவர் யாழ்.நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கஞ்சா போதைப் பொருள் பகுப்பாய்வுக்காக அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதுவரையான சுமார் 3 மாதங்களாக அவர் விளக்கமறியலில் இருந்து பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.
அது தொடர்பான அறிக்கை கிடைத்ததையடுத்துப் பொலிஸார் நீதிமன்றில் அவருக்கு எதிரான குற்றச் சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்தனர். அதன்போது தன் மீதான குற்றத்தை அவர் ஏற்றுக் கொண்டார். அவருக்கு 6 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (த-4-103)

## யாழ்.பொங்கல்

அரசினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேசிய பொங்கல் விழாக் கொண்டாட்டங்களுக்குப் பல்வேறு மட்டங்களிலும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.
உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பலாலி இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டோர் கலந்து கொள்ளும் வழிபாடுகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தி விட்டு இத்தகைய பொங்கல் கொண்டாட்டங்களை அரசு நடத்த வேண்டும் என்று அகில இலங்கை இந்துமாமன்றம்உள்ளிட்டபல்வேறுஅமைப்புகளும் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ)



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், முதலீடு தேவைப்படும். இலாபம் சுமார். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை.

**இடபம்:** புதியவர்கள் அறிமுகமாகி நட்புப் பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டாகும். மாணவர்கள் படிப்பில் தரத் தேர்ச்சி காண்பர்.

**மிதுனம்:** குடும்பத்தினருடன் வாக்குவாதம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமார். பெண்களுக்கு வீட்டுச் செலவில் சிக்கனம் தேவை. கண்ணின் பாதுகாப்பில் கவனம் தேவை.

**கடகம்:** தகுதிக்கு மீறி வாக்குறுதி கொடுப்பது கூடாது. தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். ஒவ்வாத உணவைத் தவிர்ப்பது நல்லது.

**சிங்கம்:** சமயோசிதத் தன்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் அதிகரிக்கும். நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**கன்னி:** குடும்பத்தினர் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். கௌரவத்துக்காகப் பணச் செலவு உண்டாகும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

**துலாம்:** எதிரிகள் உங்களை விட்டு விலகிச் செல்வர். தொழில், வியாபாரத்தில், வருமானம் படிப்படியாக உயரும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். மாணவர்கள் நண்பர்களுடன் சேர்ந்து படிப்பர்.

**விருச்சிகம்:** சிலரது பேச்சு உங்களைச் சங்கடப்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில், இடையூறு குறுக்கிடும். இலாபம் சுமார். பெண்கள் செலவுக்காகக் கடன் வாங்க நேரிடும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**தனுசு:** எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். பெண்கள் ஆடம்பரப் பொருள்கள் வாங்கி மகிழ்வர். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.

**மகரம்:** பொறுப்புடன் செயற்பட்டு பிறரால் பாராட்டப்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், நல்ல வளர்ச்சி உண்டு. பணப் பரிவர்த்தனை திருப்திகரமாகும். குடும்பத்தின் முக்கிய தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** பேச்சில், விரக்தி வெளிப்படலாம். தொழில், வியாபாரத்தில், போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமார். பெண்கள், எவரிடமும் பணம் இரவலாக வாங்கக் கூடாது. வாகனப் பயணத்தில் மித வேகம் தேவை.

**மீனம்:** அவசரப்பணி காரணமாக, வெளியூர் செல்ல நேரிடலாம். தொழில், வியாபாரத்தில், இலாபம் சீராக இருக்கும். சேமிப்புப் பணம், முக்கிய செலவுக்குப் பயன்படும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | 9 | | | | 1 | | 2 |
| | 8 | 2 | | | 3 | 7 | | |
| | 4 | | | 2 | | | | |
| 8 | | | | | 4 | | | 5 |
| 9 | 6 | | | | | | 7 | 8 |
| 2 | | | 3 | | | | | 1 |
| | | 8 | | 5 | | | 1 | |
| | | 6 | 9 | | | 5 | 2 | |
| | | 5 | | | | 8 | | 4 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | 1 | 6 | 2 | 4 | 7 | 3 | 9 |
| 4 | 7 | 2 | 9 | 3 | 5 | 6 | 1 | 8 |
| 6 | 9 | 3 | 1 | 7 | 8 | 5 | 2 | 4 |
| 3 | 6 | 5 | 8 | 1 | 7 | 4 | 9 | 2 |
| 9 | 1 | 4 | 5 | 6 | 2 | 8 | 7 | 3 |
| 7 | 2 | 8 | 3 | 4 | 9 | 1 | 6 | 5 |
| 5 | 3 | 7 | 2 | 8 | 6 | 9 | 4 | 1 |
| 1 | 8 | 6 | 4 | 9 | 3 | 2 | 5 | 7 |
| 2 | 4 | 9 | 7 | 5 | 1 | 3 | 8 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடற்படையின்

செய்யப்பட்டது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அரச தரப்புச் சாட்சியான மனம்பெரிகே, முன்னர் பொலிஸாருக்கு அளித்திருந்த மூன்று வாக்குமூலங்கள் நீதிமன்றத்தில் வாசிக்கப்பட்டன. அப்போது தாம் முன்னர் வழங்கிய இந்த வாக்குமூலங்கள் உண்மையானவை என்றும் அவர் உறுதிப்படுத்தினார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபரான காமினி செனிவிரத்ன, நாரஹேன்பிட்டி மன்னிங் டவுனில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜை துப்பாக்கியால் சுட்டதைத் தாம் பார்த்ததாகவும், அவர் சாட்சியமளித்தார்.

இந்தப் படுகொலைக்கான திட்டம் லோன்றிவத்த கடற்படைப் புலனாய்வு முகாமில் தான் தீட்டப்பட்டது. மட்டக்களப்பில் விசேட நடவடிக்கைகளுக்கான உந்துருளிப் படைப்பிரிவில் இருந்தபோது, பழனிச்சாமி சுரேசுடன் எனக்குத் தொடர்புகள் இருந்தன. 2006 ஆம் ஆண்டு கொழும்பு வந்த பின்னரும் அந்தத் தொடர்பு நீடித்தது.

அவர் மூலமாகவே, பிரசாத் குமார, சரண், வஜிர, காமினி செனிவிரத்ன, பபியன் ரோய்ஸ்ரன் மற்றும் ஏனைய புலனாய்வு அதிகாரிகள் அறிமுகமாகினர். கங்காராம வீதியில் உள்ள புலனாய்வு முகாமுக்கு என்னை அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வைத்தவர் பழனிச்சாமி சுரேஸ் தான்.

2006 ஆம் ஆண்டு நவம்பர் 8 ஆம் நாள் ரவிராஜைக் கொல்லத் தாம் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்து விட்டதாக அவர் என்னிடம் கூறினார். அதற்குப் பின்னர் 10 ஆம் திகதி சந்தேக நபர்களை ஏற்றிச் செல்வதற்கு உந்துருளியில் பொரளை சேமக்காலை சந்திக்கு வருமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

அப்போது, பிரசாத், செனிவிரத்ன, வஜிர மற்றும் மூவர் அடங்கிய குழுவினர், இரண்டு முச்சக்கரவண்டிகளில் வந்து இறங்கினர். மேலும் ஒரு முச்சக்கர வண்டியில், பழனிச்சாமி சுரேஸ், சரண், பபியன் ரோய்ஸ்ரன் ஆகியோர் வந்திறங்கினர்.

மார்த்தா வீதியில் தயாராக நிற்குமாறும், சுட்டுவிட்டுத் தப்பி வருபவரை அந்த இடத்தில் இருந்து ஏற்றிச் செல்லுமாறும் நான் கேட்கப்பட்டிருந்தேன். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் வாகனம் வரும் வரை செனிவிரத்ன ஒரு கறுப்புப் பையுடன் காத்திருந்தார்.

அப்போது, ரவிராஜின் வாகனத்துக்கு எதிர்ப் பக்கத்தில் இருந்து சென்ற செனிவிரத்ன, அவரையும், சாரதி லக்ஸ்மனையும் சுட்டுவிட்டுத் தப்பினார். அவரை நான் கங்காராம வீதியில் உள்ள கடற்படைப் புலனாய்வு முகாமுக்கு ஏற்றிச் சென்றேன்.

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரைக் கொல்வதற்காகவே செல்வதாகவும், துப்பாக்கி ஏந்தியவரை உந்துருளியில் ஏற்றிச் செல்லுமாறும் எனக்கு உத்தரவிடப்பட்டது.

நாரஹேன்பிட்டியில், துப்பாக்கிச் சூடு நடத்தப்படும் வரையில், யாரைக் கொல்வதற்காகச் செல்கிறோம் என்று எனக்குத் தெரியாது என்று அவர் தெரிவித்தார்.

இந்த வழக்கு விசாரணையை நீதிவான் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை ஒத்தி வைத்தார்.

இந்தப் படுகொலை தொடர்பாக 4 கடற்படைப் புலனாய்வு அதிகாரிகள், கருணா குழுவைச் சேர்ந்த இருவர் உள்ளிட்ட 7 பேருக்கு எதிராகச் சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளார். (த-5)

## நல்லிணக்கச்

கொலன்னே குறிப்பிட் டுள்ளார்.

கொழும்பில் நடக்கும் பொருளாதார மன்ற மாநாட்டில் பங்கேற்க பிரிட்டனின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர் வந்துள்ளார். இவர் இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளில் ஏற்பாட்டாளராக பங்கேற்கவுள்ளதாகப் பரவலான ஊகங்கள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும், ரொனி பிளேயருக்கும் இடையிலான பேச்சுக்கள் இடம்பெற்றிருந்தன.

எனினும், ரொனி பிளேயர் இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாடுகளில் ஈடுபடமாட்டார் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேசிய நல்லிணக்கச் செயற்பாடுகள் அனைத்தும் அரசினாலேயே முன்னெடுக்கப்படுகின்றன. அதன் அனைத்து அரசியல் செயற்பாடுகளுக்கும் அரசே பொறுப்பு. நல்லிணக்கச் செயற்பாடுகளில் ரொனி பிளேயர் ஆலோசகராகப் பங்கேற்கவுள்ளதாகக் கூறப்படுவதில் உண்மையில்லை.

நாட்டில் தற்போது போர் நடக்கவில்லை. எனவே, வெளிநாட்டு அமைதி ஏற்பாட்டாளர்களின் தலையீடு எமக்குத் தேவையில்லை. எனக்குத் தெரிந்தவரை இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாடுகளில் ரொனி பிளேயரின் தலையீடு இருக்காது.

பிரிட்டனின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயரை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பல்வேறு சந்தர்ப்பங்களில் சந்தித்துள்ளார். கடந்த ஓகஸ்ட் மாதம் அவர் கதிர்காமர் நினைவுரை ஆற்றுவதற்கு கொழும்பு வந்திருந்த போதும், மங்கள சமரவீர சந்தித்தார்.

எனினும் இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாடுகளில் அதிகாரபூர்வ பங்கை ஆற்றுவது குறித்து மங்கள சமரவீரவோ, ரொனி பிளேயரோ எத்தகைய கலந்துரையாடலையும் மேற்கொள்ளவில்லை–என்றார். (த-வ-5)

## வடக்கு

மைத்திரிபால – ரணில் அரசு எந்தச் சூழ்நிலையிலும், ஒற்றையாட்சி நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தாது. அத்துடன் வடக்கு–கிழக்கு மாகாணங்களை இணைக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படமாட்டாது என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சமஷ்டி முறைமையிலான அரசியல் தீர்வையும் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## மக்கள்

காண்பதற்குக் கிடைத்துள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தை சிதைக்கக்கூடாது. அடாவடித்தனமான – இறுக்கமான நிலைப்பாடுகள் உதவப்போவதில்லை. கடுமையான நிலைப்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் நாட்டுக்குக் கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தைப் பாழடிப்பது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நியமிக்கப்பட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட விக்னேஸ்வரன் கட்சியின் கொள்கைகளுக்குக் கட்டுப்படவேண்டியவர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகள் அதன்தேர்தல்விஞ்ஞாபனத்தில் காணப்படுகின்றன. அந்தக் கொள்கைகளே கட்சியினால் அனைத்துத் தேர்தல்களிலும் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்தக் கொள்கைகளின் அடிப்படையிலேயே விக்னேஸ்வரன் தேர்தலில் போட்டியிட்டார்; முதலமைச்சரானார்.

தமிழ் மக்கள் பேரவையில் உள்ள தனிநபர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கொள்கைகள் கடந்த காலத்தில் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன. எனினும், துரதிர்ஷ்டவசமாக விக்னேஸ்வரன் மக்களால் நிராகரிக்கப்பட்ட அந்தக் கொள்கைகளுடன் தன்னை அடையாளம் கண்டுள்ளார். இது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். இதனைக் கண்காணித்து வருகின்றோம்–என்றார். (த-சி)

## பாகிஸ்தானுடன்

செங்கம்பள வரவேற்பளிக்கப்பட் டது. அத்துடன், 21 வேட்டுகள் முழங்க இராணுவ மரியாதையும், இராணுவ அணிவகுப்பு மரியாதையும் வழங்கப்பட்டன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

மோட்டார் வாகனப் படையணி, குதிரைப் படையணியின் வரவேற்புடனும், பொலிஸ் படையணியின் பாதுகாப்புடனும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் நேற்று முற்பகல் 9.35 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தை வந்தடைந்தார்.

ஜனாதிபதி செயலகத்துக்கு வருகைதந்த அவருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வரவேற்பளிக்கப்பட்டது. செயலக முன்றலில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான மங்கள சமரவீர, ரவி கருணாநாயக்க, லக்ஸ்மன் கிரியெல்ல, ராஜித சேனாரத்ன, சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட அரச முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

மேலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாரியாரான ஜயந்த புஸ்பாகுமாரி மற்றும் ஜனாதிபதியின் புதல்வர் தஹம் சிறிசேன ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

தனது குடும்பத்தையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரச முக்கியஸ்தர்களையும் பாகிஸ்தான் பிரதமருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது அறிமுகம் செய்துவைத்தார்.

பின்னர் இரு நாட்டுக் குழுவினருக்கும் இடையிலான இரு தரப்பு பேச்சுகள் ஜனாதிபதி செயலகத்தில் மூடிய அறைக்குள் இடம்பெற்றன. இதையடுத்து, இரு தரப்பினருக்குமிடையே 8 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

01. இலங்கையில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் தேடலுக்கான அமைச்சு, பாகிஸ்தானின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு ஆகியவைகளுக்கு இடையில் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புதிய உற்பத்திகள் புரிந்துணர்வு உடன்படிக்கை.

02. இலங்கையின் தேசிய விஞ்ஞான மன்றத்திற்கும் பாகிஸ்தானின் விஞ்ஞான மன்றத்திற்கும் இடையிலான உடன்படிக்கை.

03. இலங்கை மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கிடையில் சுகாதாரத்துறையில் புரிந்துணர்வு உடன்படிக்கை.

04. நிதிமோசடிகள் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளிப்பு தொடர்பான இரகசிய தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை.

05. இலங்கை மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கிடையில் கலாசாரத்துறையில் புரிந்துணர்வு உடன்படிக்கை.

06. பாகிஸ்தான் வியாபார அபிவிருத்தி அதிகார சபைக்கும் இலங்கை இறக்குமதி அபிவிருத்திச் சபைக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. இரு நாடுகளுக்குமிடையில் தரவுகளைப் பரிமாறிக்கொள்ளுவதற்கான உடன்படிக்கை.

08. இலங்கை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் பரிசீலனை மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கும் பாகிஸ்தானின் அலங்கார மற்றும் உற்பத்தி நிறுவனத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை என்பன கைச்சாத்திடப்பட்டன.

பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பும் உரை நிகழ்த்தியதையடுத்து, இரு தரப்பு சந்திப்பு முடிவுக்கு வந்தது. (த-சி)



## கண்ணீர் அஞ்சலி

திருமதி சொர்ணகாந்திமலர் சின்னத்துரை



வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சியில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றும் திரு.சி.இளங்குமார் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி சொர்ணகாந்திமலர் சின்னத்துரை

அவர்கள் 04.01.2016 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
வலயக்கல்வி அலுவலகம்,கிளிநொச்சி.

(63614)(11,15,18)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினம்மா சண்முகநாதன்

தோற்றம்: 08 . 06 . 1939



மறைவு: 04 . 01 . 2016

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் இணுவில், மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம்மா சண்முகநாதன் 04.01.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்கண்டு - தங்கம்மா தம்பதியரின் கடைசி மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா-சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் சண்முகநாதனின் அன்பு மனைவியும் அரியமலர், செல்வராணி, அமிர்தகலா ஆகியோரின் அன்புத் தாயாரும் சுகுமார், சந்திரமோகன், ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் கமல்வரன், வரண்யா, யர்மிளா, சுஜீபன், சுதேசியா, சாருஜன், பிருந்தா, ராகுலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில், மஞ்சத்தடி.

தகவல்: செ. சண்முகநாதன்

### சுந்தரம்பிள்ளை புவனேந்திரன் (சொக்கர்)

மலர்வு 17 . 12 . 1946



உதிர்வு 04 . 01 . 2016

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஊரெழு கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை புவனேந்திரன் (04.01.2016) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற தம்பிராசா, தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், பிரபாலினி (யா/ஏழாலை சைவ சன்மார்க்க வித்), தயாளினி (லண்டன்), தாரணி (நோர்வே), இராகுலன் (லண்டன்), யசோதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செந்தில்மணாளன் ( அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேசசபை வவுனியா), பாலசிறி (லண்டன்), குகநேசன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனும், இராசகோபால், காலஞ்சென்ற இராசேந்திரம், தெய்வேந்திரம், தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தர்மகுலசிங்கம், புஸ்பராணி, ரஞ்சினிதேவி, குமாரகுலசிங்கம், இந்திரநாதன், தவநாதன், சிவசோதி, சிவமணி, காலஞ்சென்ற சிவலிங்கம், அருட்சோதி, மல்லிகாதேவி, விக்னேஸ்வரி, தவமணி, பிறேமா ஆகியோரின் அன்பு மைத்துனரும், லக்ஷன் (லண்டன்), சயானா (லண்டன்), இலக்கியா (நோர்வே), சாகித்தியா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2016)புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரெழு பொக்கணை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| ஊரெழு கிழக்கு, சுன்னாகம் | 021 224 1139 | தகவல்: குடும்பத்தினர் |

## 22 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 22 . 08 . 1937



விண்ணில் 06 . 01 . 1994

### அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்

(அம்பிகா டிஸ்பென்சறி)

எங்கள் குடும்பத்தலைவரின்
ஆத்மா சாந்திபெற எங்கள் குலதெய்வம்
நுணுவில் சிதம்பர விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 10 . 09 . 1922



விண்ணில் 07 . 12 . 2015

### அமரர் நமசிவாயம் செல்லம்மா

பூ மலராக இத் தரணியில் பூத்து
நறுமணம் மிக்க குணவதியாய் வாழ்ந்து
நாம் அனைவரும் தவிக்க
நல் உலகம் அடைந்து விட்டீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இலுப்பையடி வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி

குடும்பத்தினர்.



## முதலாம் ஆண்டுநினைவஞ்சலி

அன்னை மடியில் 07 . 02 . 1989



இறைவன் அடியில் 19 . 12 . 2014

### செல்வி சாதனா தங்கவேல்

எங்கள் பாசச் செல்வமே!
ஆயிரம் ஆயிரம் ஆசை கனவுகள்
சுமந்து உனை ஆராதித்து வளர்த்துவந்தோம்
அத்தனையும் பொய்யாக்கி விட்டு போனாயே?
ஓராண்டு முடிந்தும் உன் நினைவுகள்
ஓராயிரமாய் இருக்குதம்மா!
மறுஜென்மம் ஒன்று உனக்கு இருக்கிறது
என நம்புகின்றோம் அம்மா!
மறுஜென்மத்திலும் எங்கள் குடும்பத்தில்
நீ மகளாய் மலர இறைவனை
ஆராதிக்கின்றோம்.
இன்று (06.01.2016) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் எங்கள் உற்றார், உறவினர், நண்பர்கள் [illegible]வரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible]ரம், கோம்பாவில்,
[illegible]டியிருப்பு.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.


# எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

2014 ஆம் ஆண்டைவிட 2015 ஆம் ஆண்டு எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் எயிட்ஸ் நோய் தடுப்புப் பிரிவின் இயக்குனர், மருத்துவர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

அதில் 27 கர்ப்பிணிப் பெண்கள் உள்ளடங்குகின்றனர். கடந்த வருடம் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட 27 இளைஞர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

15 வயது முதல் 23 வயதான இளைஞர்களிடம் எயிட்ஸ் நோய் பரவி வருவது அபாயகரமானது என்று அவர் தெரிவித்துள்ளார். பாதுகாப்பற்ற உடலுறவில் இருந்து விலகினால், இந்நோயைக் கட்டுப்படுத்த முடியும் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்திலும் எயிட்ஸ் நோயினால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிலிருந்து பாதுகாப்பாக இருக்கப் பாலியல் விழிப்புணர்வு அவசியம் என்றும் அனைவரும் அந்த விடயத்தில் மிக அவதானமாக இருக்குமாறும் கோரப்பட்டுள்ளது. எயிட்ஸ் நோய் இருக்கலாம் என்று சந்தேகிப்பவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள பாலியல் நோய்ப் பிரிவில் சென்று எந்தவித தயக்கமுமின்றிப் பரிசோதித்துக் கொள்ளலாம். இரகசியம் காக்கப்படும் என்று ஏற்கனவே கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# யாழ். நகரில் நேற்றிரவு விபத்து

யாழ்.ஸ்ரான்லி வீதிச் சந்தியில் நேற்றிரவு கன்ரர் ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் தலையில் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த விபத்தையடுத்து கன்ரர் ரக வாகனத்தை சம்பவ இடத்திலிருந்து கொண்டு செல்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எனினும் குறித்த சம்பவ இடத்தில் ஒன்றுகூடியவர்கள் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தினர்.

இதனால் விபத்து இடம்பெற்ற இடத்திற்கு சுமார் 12 பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். இதன் பின்னர் அந்த வாகனம் பொலிஸ் நிலையம் நோக்கிக் கொண்டு செல்லப்பட்டது. இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ளனர். (வ-4,101)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி தவமணி யோகேஸ்வரன்



ராசாவின்தோட்டம், காரைநகரைப் பிறப்பிடமாகவும் இல. 565, கஸ்தூரியார் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தவமணி யோகேஸ்வரன் கடந்த (04.01. 2016) திங்கட்கிழமை அகாலமரண மாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற யோகேஸ்வரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா -தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திருவாதிரை தம்பதியரின் மருமகளும்,நடராசா, சுப்பிரமணியம், பரமேஸ்வரி, மகாதேவன், சடாசிவம், பரஞ்சோதி, காலஞ்சென்ற பத்மாதேவி, இராஜேஸ்வரி, நமலாதேவி, நாகேஸ் வரி, மங்கையர்க்கரசி, ஈஸ்வரராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரஞ்சிதமலரின் (பவா) அன்புத் தாயாரும், பிறைச்சந்திரனின் (ராசன்-கசூரி உணவகம், கசூரிபீச், காரைநகர்) அன்பு மாமியும், யதுர்சன் (ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, மானிப்பாய்), ஹரனிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.01.2016)வியாழக்கிழமை மு.ப. 8.00 மணியளவில் அவரின் தற்போதைய இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம் பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 561, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.



பிறப்பு 1994 . 04 . 25



மறைவு 2016 . 01 . 03

### தவராசா கபிஷாந் (கவி)

(பழைய மாணவன் யாழ். சென். பற்றிக்ஸ் -கல்லூரி)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தவராசா கபிஷாந் கடந்த (03.01.2016) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தவராசா - சுகந்தினி தம்பதியரின் அன்பு மகனும், சுரேந்திக்காவின் அன்புக் கணவரும், யுரேக்கா (ஸ்ரான்லிக் கல்லூரி -கலைப் பிரிவு-2015), மிதுசாந் (கலைப்பிரிவு-2017, யாழ். மத்திய கல் லூரி), பிஜானுசி (தரம்8, வேம்படி உயர்தர பெண்கள் பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான வேலன் செல்லமுத்து, இரத்தினம் மற்றும் றஞ்சி தம்பதியரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 4.00 மணியளவில் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

694,கண்டி வீதி அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### இராசம்மா தாமோதரம்பிள்ளை

தோற்றம் 25 . 09 . 1918



மறைவு 05 . 01 . 2016

73, இந்துக்கல்லூரி லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், ஞானவைரவர் கோயிலடி உரும்பிராய் கிழக்கு உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட இராசம்மா தாமோதரம்பிள்ளை நேற்று (05.01.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சரவணையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்றவர்களான தம்பையா- சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், கார்த்திகேசு தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், மருதையனார் (மரூட் லண்டன்), ரகுநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தம்பையா செல்லத்துரை, கனகரட்ணம், ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பராணி (லண்டன்), ராகினி ஆகியோரின் அன்பு மாமியும்,மேகலா, மிதுலா, நிகிலா, ஜெயகாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், செல்லத்துரை சிவபாக்கியம் ஆகியோரின் பிள்ளைகளின் (ஆஸ்திரேலியா, லண்டன்) மாமியும், கனகரட்ணம் ஈஸ்வரி சகோதரியின் பிள்ளைகளின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் கோயிலடி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்: மருமகன்மார்
பாலசிங்கம்,
சிவசுப்பிரமணியம்.



## மரண அறிவித்தல்

### சின்னையா சற்குணராசா



42, செல்லர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

நல்லூர் மூத்த விநாயகர் வீதியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் செல்லர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா-சற்குணராசா (ஆசாரிகுணம்)கடந்த (04.01. 2016)திங்கட்கிழமை கால[illegible]னார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், தேவராஜா (மலேசியா), விஜயகுமாரி, தர்மராஜா (ஜேர்மனி), சிவ[illegible]ராஜா (மலேசியா) காலஞ்சென்ற ராஜகுமார் மற்றும் ஜெயக்குமார், அகிலன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ரஞ்சித் (ஜேர்மனி), ஜெயந்தன், முகுந்தன்,மயூரி (பிரான்ஸ்), சாளினி ஆகியோரின் அன்புத் தந்தை யும், சர்மிளா, தர்சிகா (நோர்வே), சுலக்[illegible]ரா, சுவேந்திரன் (பிரான்ஸ்) ஆகியேரின் அன்பு மாமனும், சாருண்யா, பிரதியுசா, க[illegible], துஷானுஜா, தஸ்விதா, தனோஜ், திபிசனா ஆகியோரின் பேரனும், கிறிஸ்ரினா, த[illegible] லானா (ஜேர்மனி), பரத், விஷாளினி, அர் வின், ராஜப்பிரியன், துஷாரா ஆகியோ[illegible]ன் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கி[illegible]யைகள் இன்று (06.01.2016) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுபூ[illegible]வுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்[illegible]ச்செல்லப்படும் . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏ[illegible]றுக் கொள்ளவும்.

076 520 9177, 07[illegible]56 7450
077 479 1[illegible]6

தகவல்: குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிற்சங்கப் போராட்டம்

வடக்கு மாகாண அரச குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் சங்கம் இன்று தொழிற்சங்கப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

2016 ஆம் ஆண்டுக்கான இடமாற்ற சபைக்கு எமது சங்கத்தின் பிரதிநிதிகளை அழைக்காமல், இடமாற்ற விண்ணப்பங்கள் வழங்கப்பட்ட குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கு, காரணம் எதுவும் இன்றி தன்னிச்சையாக வெளிமாவட்டங்களுக்கு வழங்கிய இடமாற்றங்களை நிறுத்தும்படி கோரி, இன்று காலை 8.00 மணிக்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சு முன்பாக போராட்டத்தினைமேற்கொள்ள உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

எனவே அனைத்து குடும்பசுகாதார சேவை உத்தியோகத்தர்களையும் தமது தொழிற்சங்கப் போராட்டத்தில் இணைந்து ஒத்துழைப்பு வழங்கும்படி சங்கத்தின் தலைவி சசிகலாபவளலிங்கம் கேட்டுள்ளார்.

(வ)

## வேலைவாய்ப்பு

சைவ உணவகம் ஒன்றிற்கு மூன்று நேர உணவு, தங்குமிடவசதி, மாதாந்த சம்பளம் இவை அனைத்துடன் கீழ்க் காணும் வேலைவாய்ப்பு

01) உணவு பரிமாறுபவர்கள்
02) காசாளர்
03) பில் கிளார்க்
04) சுத்திகரிப்பாளர் (ஆண்/பெண்)
05) மரக்கறி வெட்டுபவர்கள்
06) குசினி வேலையாள்கள்
07) ரீ மேக்கர்
08) பொதி செய்வோர் (ஆண்/பெண்)
09) கணக்காளர் (பெண்கள்)
10) றைவர் (வாகன சாரதி)

இடம்பெயர்ந்தவர்களுக்கு முன்னுரிமை

தொடர்பு:- அலுவலக நேரம்:- காலை 8.30 தொடக்கம் மாலை 6மணிவரை
தொடர்பு:- 0777 917 753, 021 222 2373
7/4, யாழ் வீதி, யாழ்ப்பாணம்.

## வேலைவாய்ப்பு

யாழில் இயங்கி வரும் GOLDEN GROUP COMPANY அதன் அடுத்த கிளையினை ஆரம்பிக்க இருப்பதால் வேலை இல்லாமல் காத்திருக்கும் ஆண், பெண் இருபாலாரும் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

* கள உத்தியோகத்தர் (Field Officers)
* மேற்பார்வையாளர் (Supervisor)
* அலுவலக பெண் (Administation)

ஆகிய பதவிகள் உள்ளன. உடன் தொடர்பு கொள்ளவும். உங்கள் திறமைக்கு ஏற்ற கவர்ச்சிகரமான சம்பளம்.

வயது எல்லை 18-40

NO 08TH 06TH CROSS STREET, JAFFNA.
077 621 9536, 021 300 4664

## சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம் குருகுல கல்விச் செயற்பாடுகள் மீளவும் ஆரம்பம்

மேற்படி அமைப்பின் கல்விச் செயற்பாடுகள் யாவும் தினமும் மாலை 6.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை ஆனைப்பந்தியில் அமைந்துள்ள குரு குலத்தில் ஆரம்பமாகி உள்ளன.

கல்வி கற்க விரும்பும் அந்தண குல மாணவர்கள் ஒன்றிய செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

பிரம்மஸ்ரீ
சோ. கேதீஸ்வரசர்மா
செயலாளர்
(077 6176752)

## மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச்செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளரால் மீள்குடியேற்ற பிரதேசங்களில் பற்றைக்காடுகள், இடிபாடுகள் மற்றும் மண் அணைகள் அகற்றுவதற்காக கனரகவாகனங்களை வாட கைக்கு அமர்த்துதல் - 2016 எனும் செயற்பாட்டிற்காக தகமையுடையோரிடமிருந்து விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

**விலைக்கேள்விஅறிவித்தல் – நிபந்தனைகள் மற்றும் மேலதிக தகவல்கள்**

1. விலைக் கேள்வியானது தேசியவிலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
2. தகமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகமையுடைய விலைக்கேள்வியாளர்கள் மேலதிக அரசாங்க அதிபர் - காணி, மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 07.01.2016 ந் திகதி தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரை விலைக்கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் மேலதிக அரசாங்க அதிபர் -காணி, (தொலைபேசி இலக்கம் 0212212631) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
4. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை மேலதிக அரசாங்க அதிபர் -காணி, மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 07.01.2016 ந் திகதி முதல் 19.01.2016 வரை காலை 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக் கப்படாத தொகையான 1000/= கட்டணமாகச்செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
5. பூர்த்திசெய்யப்பட்டு பொறியிடப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் "தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு 22.01.2016 திகதியன்று பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். நேரடியாக ஒப்படைக்கப்பட்டவர்கள் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இட்டு அங்கு வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் ஒப்பமிடல் வேண்டும்.
6. காலந்தாழ்த்தி கிடைக்கப்பெறும் விலைக்கேள்விகள் யாவும் நிராகரிக் கப்படும். கேள்விதாரர்கள் தபாலுறையின் இடதுமேல் மூலையில் "பற்றைக் காடுகள், இடிபாடுகள் மற்றும் மண்அணைகள் அகற்றுவதற்காக கனகர வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் -2016" என்ற வாசகத்தினை குறிப்பிடுதல் வேண்டும்.
7. விலைக்கேள்விகள் யாவும் மேல்குறிப்பிடப்பட்ட முகவரியில் 22.01. 2016 ந் திகதி பி.ப.3.00 மணிக்கு திறக்கப்படும். இதில் விலைக்கேள்வி மனுக்களை சமர்ப்பித்தவர்கள் அல்லது அவரினால் எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதி சமூகமளிக்கமுடியும்.
8. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித்தீர்மானத்திற்கமைவானதாகும்.

| கேள்வி இல | வேலைவிபரம் | மீளளிக்கப்படாத தொகை (ரூபா) |
|---|---|---|
| JF/MRS/RES/TENDER/Gen/2016 | மீள்குடியேற்ற பிரதேசங்களில் பற்றைக்காடுகள், இடிபாடுகள் மற்றும் மண் அணைகள் அகற்றுவதற் காக கனரக வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல்-2016 | 1000.00 |

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர்/மாவட்டச்செயலாளர்
மாவட்டச்செயலகம்
யாழ்ப்பாணம்.

## குறைந்த செலவில் பிரித்தானிய பட்டம்

PEARSON BTEC

# HND

HND பாடநெறியின் இறுதியில் பிரித்தானிய பட்டப்படிப்பின் இறுதி ஆண்டில் நுழையலாம்

2016 ஜனவரி

**தகவல் தொழில்நுட்பம்**
- HND in Computing & Systems Development

**வியாபார முகாமைத்துவம்**
- HND in Business Management

**பொறியியல் அறிவியல்**
- HND in Civil Engineering
- HND in Mechanical Engineering
- HND in Electrical & Electronic Engineering

முற்பணமாக ரூ. 50,000*

கல்விப் புலமைப் பரிசில்கள் மற்றும்
துறைசார்ந்த வேலை வாய்ப்புக்கள்
உறுதிசெய்யப்பட்டுள்ளது

துரித அழைப்பு
077309 9 308

ESOFT
Shaping Lives, Creating Futures.



**ESOFT METRO CAMPUS - JAFFNA**
No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka.
Hotline :077 309 9 308 Tel : 021 - 222 4142


Our Affiliations

இலங்கையின் மிகப்பாரிய உயர்கல்வி வலையமைப்பு

## மரண அறிவித்தல்

### ஆழ்வான் கந்தசாமி

தோற்றம்
19 . 11 . 1948



மறைவு
03 . 01 . 2016

கரவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வான் கந்தசாமி (03.01.2016) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வான் -தெய்வி தம்பதியரின் அன்பு மகனும், செல்வ மணியின் அன்புக் கணவரும், கமலா ஜினி (கிளிநொச்சி ஆதார வைத்தியசாலை), கமல தாசன் (கண்ணன்), மஞ்சுளா (லண்டன்), அனுஷா (லண்டன்), தர்சிகா (லக்கி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜூ (லண்டன்), சுமங்கலி ஆகியோரின் அன்புத் மாமனும், டினூசன், டினூராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.01.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக வேகுண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சயன்ஸ் சென்ரர் வீதி,கரவெட்டி மேற்கு,
கரவெட்டி. 076 8482870

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆமிர் விடயத்தில் பாகிஸ்தான் சபை அவசரப்பட்டுவிட்டது என்கிறார் ரமீஸ்

மொகமட் ஆமிர் விடயத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அவசரப்பட்டு விட்டதாக, பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும்நேர்முகவர்ணணையாளருமான ரமீஸ் ராஜா தெரிவித்துள்ளார்.

ஆமிர் மீண்டும் இணைத்துக் கொள்ளப்பட்டமை தொடர்பில் ரமீஸ் தெரிவிக்கையில்–இதுவோர் இக்கட்டான நிலையாகும், ஏனெனில் வெற்றிபெற அவர்கள் (பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை) விரும்புகிறார்கள். அத்தோடு அந்த வெற்றிகளைப் பெற்றுக் கொடுக்கக்கூடியவராக ஆமிர் பார்க்கப்படுகிறார். அவரிடம் ஏராளமான திறமையும்திறனும் உள்ளன. அது எப்போதுமே சந்தேகமாக இருந்ததில்லை. ஆனால், அவரை அணிக்குள் கொண் டுவருவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள், அவசரப்பட்ட நடவடிக்கைகள்தான். ஆமிர் அணிக்குத் திரும்பியதில் சில தரப்பினரிடம் எதிர்ப்புக்கள் உள்ளன. முழுக் குழாமுமே அதைஏற்றுக்கொள்வதற்குக் காலத்தை அவர்கள் வழங்கியிருக்க வேண்டுமென நான் நினைக்கிறேன்–என்றார்.

தங்களுக்கெதிராக விளையாடுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மொகமட்ஆமிர்தொடர்பாக, நியூசிலாந்து அணியின் தலைவர் பிரெண்டன் மக்கலம், தனது ஆதரவு நிலைப்பாட்டைவெளியிட்டுள்ளார். அச்சம்பவம் (சூதாட்டம்) இடம்பெற்ற போது ஆமிர் மிகவும் இளையவர் (17வயது) எனத் தெரிவித்த அவர், மிகவும் சிறப்பான புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தில் அவர் ஈடுபடுத்தப்பட்டுள்ளார் எனவும் குறிப்பிட்டார். (ம)

# மீண்டும் வீழ்ந்தது இலங்கை; கிண்ணம் நியூசிடம் சென்றது

இலங்கை – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்தாவதும் இறுதியானதுமான ஒருநாள் ஆட்டத்தில் 36 ஓட்டங்களால் வெற்றிபெற்ற நியூசிலாந்து தொடரை 3:1 என்ற அடிப்டையில் கைப்பற்றியுள்ளது.

நாணயச்சுழற்சியில்வெற்றிபெற்ற இலங்கை முதலில் களத்தடுப்பைத் தீர்மானிக்க, நியூசிலாந்தின் ஆரம்ப வீரர்களில் ஒருவரானலாதம்ஓட்டம்எதனையும் பெறாமல் ஏமாற்றினார். குப்தில் – வில்லியம்சன் இணையை இலங்கையால் ஆட்டம் காணச்செய்ய முடியவில்லை. இருவரும் அரைச்சதத்தை நிறைவுசெய்ய மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் 100 ஓட்டங்களை எட்டியது நியூசிலாந்து. 61ஓட்டங்களுடன் வில்லியம்சன் ஆட்டமிழந்தார். சில பந்துப்பரிமாற்றங்கள் உருண்டோட சதத்தை நிறைவுசெய்தார் குப்தில். நிக்கொல்ஸ் ஏமாற்ற, ரெய்லரும் றோஞ்சியும் அணியைக் கொண்டு சென்றனர். 61 ஓட்டங்களுடன் ரெய்லர் ஆட்டமிழக்க, வந்தவேகத்தில்சிக்சருடன் இன்னிங்ஸை ஆரம்பித்தார் சான்நெர். 50 பந்துப் பரிமாற்றங்களின் முடிவில் நியூசிலாந்து 294-5. றோஞ்சி 37 ஓட்டங்களுடனும்,சான்நெர் 21 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.



300 பந்துகளில் 295 ஓட்டங்கள். களமிறங்கியது இலங்கை அணி. குணதிலக, டில்சான், திரிமன்னே மூவரும் முறையே 15 ஓட்டங்களுடனும் 5 ஓட்டங்களுடனும் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க இலங்கையின் அடித்தளம் ஆட்டம் கண்டது. அத்துடன் ஓட்டங்கள் பெறப்பட வேண்டிய சராசரியும் 7 இற்கு மேல் சென்றது. மத்தியூஸ் – சந்திமல் இணை தோல்வியில் இருந்து அணியை மீட்டெடுக்கும் முயற்சியில் தீவிரம் காட்டினர். பயனும் கிடைத்தது. இருவரும் அரைச்சதத்தை நிறைவு செய்தனர். 50 ஓட்டங்களில் வைத்து ஆட்டமிழந்தார் சந்திமல். தொடர்ந்தும் மிரட்டிக் கொண்டிருந்தார் மத்தியூஸ். பெரேராவின் ஆட்டத்தில் திருப்தியில்லை. சிறிவர்தனே இரண்டு சிக்சர்களுடன் 39 ஓட்டங்களைப் பெற்றுவெளியேறினார். 5 ஓட்டங்களால் சதத்தைத் தவறவிட்டார் மத்தியூஸ். பின்வரிசை வீரர்களால் பெரிதாகசாதிக்கமுடியவில்லை.258 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது இலங்கை அணி. 3:1 என்ற அடிப்படையில் கிண்ணத்தைக் கைப்பற்றியது நியூசிலாந்து. ஆட்டநாயகனாக 5 இலக்குகளை வீழ்த்திய கென்றி தெரிவானார். (ம)




## லக்ஸ்மனுக்கு முதலிடம்

கடந்த ஐம்பது வருடங்களில் பெறப்பட்ட சிறப்பான சதமாக 2001ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிராக கொல்கத்தாவில் வைத்து லக்ஸ்மன் பெற்ற சதத்தை குறிப்பிட்டுள்ளது சர்வதேச கிரிக்கெட் இணையத்தளம் ஒன்று.

வெறுமனே ஓட்டங்களை மட்டும் கருத்தில்கொள்ளாமல்ஓட்டங்கள் பெறப்பட்ட எதிரணி, சந்தர்ப்பம், சூழ்நிலை என்பன பற்றியும் பரிசீலிக்கப்பட்ட இந்தத் தரப்படுத்தலில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக லக்ஸ்மன் பெற்ற 281 ஓட்டங்கள் சிறந்த சதமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆட்டத்தில் இந்தியா பொலோ ஒன் செய்தது.

ஆஸ்திரேலியா வெற்றிபெறும் என்று எதிர்பார்க்கையில் லக்ஸ்மன் பெற்ற இரட்டைச் சதத்தால் இந்தியா இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்த்து ஆஸ்திரேலியாவை வெற்றிகொள்ளவும் செய்தது. இதனாலேயே லக்ஸ்மனின் இந்த சதத்துக்கு இத்தகைய கௌரவம் கொடுக்கப்பட்டுள்ளது. (ம)

# ஏ.பி.வில்லியர்ஸ்,அம்லா விஸ்வரூபம்; இங்கிலாந்துக்கு தெ.ஆபிரிக்கா பதிலடி



இங்கிலாந்து– தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றுமுன்தின மூன்றாம் நாளில் முழுவதுமாகத் தாக்குப்பிடித்த தென்னாபிரிக்கா மேலதிகமாக 212 ஓட்டங்களை மட்டுமே பெற்றதுடன் நாள் முடிவில் 353-3 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 629-6 என்ற நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்தியது. ஸ்ரோக்ஸ் 258 ஓட்டங்களையும் பரிஸ்ரௌவ் 150 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக ரபாடா 3 இலக்குகளையும் மோர்கல், மொறிஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். இங்கிலாந்தை வீழ்த்துவது கடினம். இதனால் தற்காப்பு ஆட்டத்தை கையிலெடுத்த தென்னாபிரிக்கா இரண்டாம் நாளின் முடிவில் 141-2 என்றிருந்தது. அம்லா 64 ஓட்டங்களுடன் வில்லியர்ஸ் 25 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக களமிறங்கினர். டெஸ்ட் ஆட்டங்களுக்கு உரிய சராசரியில் இருவரும் மிகையாக நிதானித்தனர். சதம் கடந்தார் அம்லா, அரைச்சதம் கண்டார் வில்லியர்ஸ். 250 ஓட்டங்களை எட்டியது தென்னாபிரிக்கா. 138 ஓட்டங்களில் வைத்து அம்லாவின் பிடியெடுப்பைத் தவறவிட்டார் அண்டர்சன்.

88 ஓட்டங்களுடன் வில்லியர்ஸின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. வில்லியர்ஸின் இடத்தை பக்காவாக நிரப்பி அரைச்சதம் கடந்தார் பிளாஸிஸ்.

நாள் முடிவில் தென்னாபிரிக்கா 353-3 என்ற நிலையில் உள்ளது. அம்லா 157 ஓட்டங்களுடனும் பிளாஸிஸ் 51 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். பின், ஸ்ரோக்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். (ம)

## மழையின் ஆதிக்கம்: ஆட்டம் சமநிலையில் முடியலாம்



ஆஸ்திரேலியா – மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது ஆட்டத்தின் நேற்றைய மூன்றாம் நாளில் மழையின் ஆதிக்கம் அதிகமாக அமைந்தமையால் ஒரு பந்துகூட வீசப்படாத நிலையில் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கோல்டர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க முதல் நாள் முடிவில் தீவுகள் 207-6 என்ற நிலையில் இருந்தது.

இரண்டாம் நாளில் மழை குறுக்கிட்டமையால் 11 பந்துப்பரிமாற்றங்கள் மட்டுமே வீசப்பட்டன. இரண்டாம் நாள் முடிவில் தீவுகள் 248-7 என்ற நிலையில் இருந்தது.

நேற்றும் மழை ஆதிக்கம் செலுத்த ஒரு பந்துகூட வீசப்படாத நிலையில் நாள் முடிவுக்கு வந்தது. ரம்டின் 30 ஓட்டங்களுடனும் றோச் ஓட்டங்கள் எதனையும் பெறாமலும் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக லையன், பற்றின்சன் இருவரும் தலா 2 இலக்குகளையும் கசில்வூட், கேக்பி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# செந்தமிழ், அருணோதயா அணிகள் அரையிறுதி ஆட்டங்களுக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜன. 6
பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் தொடரில் வடமராட்சி கிழக்கு அணிகளுக்கு இடையிலான காலிறுதி ஆட்டங்களில் செந்தமிழ் அணி, அருணோதயா அணி ஆகியவை வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டங்களுக்குத் தகுதி பெற்றுள்ளன.

கடந்த சனிக்கிழமை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்தக் காலிறுதி ஆட்டங்களில், முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் செந்தமிழ் அணியை எதிர்த்து உதயசூரியன் அணி மோதிக் கொண்டது. இதில் செந்தமிழ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது காலிறுதியில் அருணோதயா அணியை எதிர்த்து சத்தி வேல் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் சமநிலை தகர்ப்பு உதைகள் வரை ஆட்டம் இழுபறிப்பட்டது. சமநிலைத் தகர்ப்பில் அருணோதயா அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

**றோயல் வி.கழகத்தொடர்**
யாழ்ப்பாணம், ஜன.6
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நிக்கிலஸ் அணியை எதிர்த்து மன்னார் தோட்டவெளி ஐக்கிய அணி மோதவுள்ளது.

**மத்தி-கொக்குவில் இந்து**
இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுக்கு உட்பட்ட அணிகளின் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ். மத்திய கல்லூரியும் இன்றும் நாளையும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. இந்த டெஸ்ட் ஆட்டம் கொக்குவில் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் நடைபெறும். (23)



மன்னார் மாவட்ட மெய்வன்மைச்சங்கம் நடத்திய வீதியோட்டத்தில் முதல் மூன்று இடங்களை முறையே ஜெநோசன் (தும்பனைக்குளம்), சுதன், ஜிசஸ்செல்டானோ ஆகியோர் கைப்பற்றினர். (ம-23)

## சென். அன்ரனிஸ் அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 6
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ், பாசையூர் சென். அன்ரனிஸ் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

வடமாகாண ரீதியாக நடத்தப்படும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து யங்கும்பன்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் மன்னார் அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து மாலை 5 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் சமநிலைத் தகர்ப்பு உதைகள் வரை ஆட்டம் இழுபறிப்பட்டது. இதில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## வெளியேறும் வலயத்தில் இருந்து தப்பிப்பிழைத்தது செல்சி அணி

இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரில் பலஸ் அணியை வீழ்த்தியதன் மூலம் தொடரில் இருந்து வெளியேறும் நிலையைத் தவிர்த்துக் கொண்டது செல்சி அணி.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற இந்த ஆட்டத்தின் 16 ஆவது நிமிடத்திலேயே நட்சத்திர வீரரான ஹசார்ட் உபாதை காரணமாக வெளியேறினார். இது செல்சிக்கு பெருத்த பின்னடைவாக இருக்கும் என்று எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் ஏனைய வீரர்களின் சிறந்த செயற்பாட்டால் செல்சியில் சமனிலைத் தன்மை பேணப்பட்டது. முதல் முப்பது நிமிடங்கள் வரை கோல்கள் பதியப்படவில்லை. 31 ஆவது நிமிடத்தில் ஒஸ்காரும் 60ஆவது நிமிடத்தில் வில்லியனும் 66ஆவது நிமிடத்தில் டியகோ கோஸ்டாவும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றிருந்தனர். செல்சியிடம் தோல்வியடைந்த பலஸ், தொடரில் இருந்து விலகும் நிலை ஏற்பட்டுள்ளது. (ம)





## வருடத்தை வெற்றியுடன் ஆரம்பித்த நட்சத்திர வீரர் ஸ்பெயினின் நடால்

நடப்பு வருடத்துக்கான முபடாலா ரென்னிஸ் கிண்ணத்துக்கான தொடரில் (அபுதாபி ரென்னிஸ் தொடர்) ஆண்கள் பிரிவில் ஸ்பெயின் ரபேல் நடால் சம்பியனாகியுள்ளார்.

அபுதாபியில் வருடாவருடம் முபடாலா ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. தொடர்ச்சியாக ஆட்டங்கள் நடைபெற்று இரு நாள்களில் தொடர் நடத்தி முடிக்கப்பட்டுவிடும். இந்த வருடத்துக்கான தொடரில் ஆண்கள் பிரிவில் ஸ்பெயினின் நடால் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார். இறுதி ஆட்டத்தில் கனடாவின் மிலோஸ் றாவோனிக்கைச் சந்தித்த ரபேல் நடால், 7-6, 6-3 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானார்.

கடந்த வருடத்தில் கடுமையான சவால்களை எதிர்கொண்டு எதிர்பார்த்தளவு வெற்றிகளைப் பெற்றிருக்காத நடால், இவ்வருடத்தை வெற்றியுடன் ஆரம்பித்துள்ளமை அவருக்கான தன்னம்பிக்கையை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் 18ஆம் திகிதி சர்வதேச அந்தஸ்துப் பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான ஆஸ்திரேலியத் தொடர் நடைபெறவுள்ள நிலையில், நடாலின் இந்த வெற்றி முன்னணி வீரர்களுக்கு மிரட்டலாக அமையும் என்றும் சொல்லப்படுகிறது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெயிலுக்கு அபராதம்




பெண்நிருபர் ஒருவருக்குக் கொடுத்த நேர்காணலில் தேவையற்ற வார்த்தைகளைப் பிரயோகித்தமைக்காக கெயில் விளையாடிவரும் ரெனேகட்ஸ் அணி அவருக்கு 7 ஆயிரம் அமெரிக்க டொலர்களை அபராதமாக விதித்துள்ளது. சம்பவத்துக்கு கெயிலும் தனது மன்னிப்பைத் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய கழகங்களுக்கு இடையில் நடைபெற்றுவரும் ரி-20 தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ஹரிகேன்ஸ் - ரெனேகட்ஸ் அணிகள் மோதின. இதில் ரெனேகட்ஸ் அணிக்காக விளையாடிய கெயில் 15 பந்தில் 4 பவுண்டரிகள், 3 சிக்சர்களுடன் 41 ஓட்டங்களைக் குவித்தார். இவரது அதிரடி ஆட்டத்தால் ரெனேகட்ஸ் அணி வெற்றி பெற்றது.

கெயில் ஆட்டமிழந்த பின்னர் வெளியில் வீரர்களுடன் இருக்கும்போது தொடரை ஒளிபரப்பு செய்யும் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றின் பெண் தொகுப்பாளர் கெய்லுடன் உரையாடினார். அப்போது உங்களால் எப்படி ஆக்ரோசமாக விளையாட முடிந்தது? என்று அவர் கேட்டதற்கு பதிலளித்த கெயில் 'இதே போல் நானும் உங்களை பேட்டி எடுக்க வர விரும்புகிறேன். நான் இங்கே வருவதற்கு காரணம் என்னவென்றால், நான் உங்கள் கண்களை இப்போதுதான் முதன்முறையாக பார்க்கிறேன். அது மிகவும் அற்புதமாக இருக்கிறது. இந்த ஆட்டத்தில் நாங்கள் வெற்றிபெற்று பின்னர் பார்ட்டியில் ஈடுபடுவோம் என்ற நம்பிக்கை உள்ளது. நீங்கள் வெட்கமடைய வேண்டாம்' என்றார். இதற்கு அந்த தொலைக்காட்சி நிர்வாகத்தில் இருந்து கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. மேலும், கெயிலின் இந்த பேச்சு வீடியோவாக வெளியாகி சமூக வலைதளங்களில் வைரஸாகப் பரவியதையடுத்து, அவருக்கான கண்டனங்களும் வந்து குவிந்தன.

இந்த விவகாரம் விஸ்வரூபமெடுப்பதை உணர்ந்த கெயில் நான் விளையாட்டுக்காகத்தான் அப்படிச் சொன்னேன் என்று மன்னிப்புக் கேட்டாலும் அவர் விளையாடும் மெல்போர்ன் ரெனேகட்ஸ் அணி அவருக்கு 7 ஆயிரம் அமெரிக்க டொலர்களை அபராதமாக விதித்துள்ளது. (ம)




## வேகத்தால் இந்தியாவை வீழ்த்த வியூகம் வகுக்கும் ஆஸ்திரேலியா

இந்தியா ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான தொடரில் வேகப்பந்து வீச்சுக்கு முழுவதும் சாதகமாக அமையக்கூடிய ஆடுகளங்களை அமைக்க ஆஸ்திரேலியா திட்டமிட்டிருப்பதாக கணிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள இந்திய அணி 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரிலும், 3 ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரிலும் விளையாடவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் ஆட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தத் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி சில தினங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டது. இந்தியாவுக்கு எதிராக விளையாடவுள்ள ஆஸ்திரேலிய அணியை வைத்தே ஆடுகளம் வேகத்துக்கு முழுவதும் சாதகமாக அமைக்கப்படவுள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் ஆஸ்திரேலிய அணியில் ஓர் சுழல்பந்து வீச்சாளர்கூட இடம்பெறவில்லை. பகுதிநேரப்பந்து வீச்சாளரான மக்ஸ்வெல் மட்டும் இடம்பெற்றுள்ளார். இதனையடுத்தே இந்திய அணியை வேகத்தை வைத்து வீழ்த்த ஆஸ்திரேலியா திட்டமிட்டிருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஆட்டமிழக்காது 1006 ஓட்டங்கள் மும்பை வீரர் புதிய சாதனை




இந்தியாவின் பாடசாலைகளுக்கு இடையிலான தொடரில் மும்பை வீரர் ஒருவர் ஆட்டமிழக்காது ஆயிரத்து ஆறு ஓட்டங்களை விளாசி சாதனை படைத்துள்ளார்.

மும்பைப் பகுதியைச் சேர்ந்த பிரணவ் தனவாத் என்ற 15 வயது கிரிக்கெட் வீரர், மும்பை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தலைமையேற்று நடத்திய தொடரில் 16 வயதுக்கு உட்பட்ட பள்ளி மாணவ வீரர்கள் பங்கேற்ற தொடரில் ஆர்யா குருகுலம் பள்ளிக்கு எதிராக ஆயிரத்து ஆறு ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார். 323 பந்துகளை எதிர்கொண்ட பிரணவ் 129 பவுண்டரி, 59 சிக்சர்களுடன் ஆயிரத்து ஆறு ஓட்டங்களைக் குவித்து சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவருக்கு நட்சத்திர வீரரான சச்சின் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். (ம)

# இதுபோன்று இனிமேல் முடியாது அதிரடி வீரர் ஸ்ரோக்ஸ் கருத்து

தென்னாபிரிக்க, இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் 2ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் அதிரடி இரட்டைச் சதத்தைப் பெற்ற இங்கிலாந்தின் சகலதுறை வீரர் பென் ஸ்ரோக்ஸ், தனது வாழ்நாளில் இப்படி இனிமேல் அனேகமாகத் துடுப்பெடுத்தாட முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

24 வயதான பென் ஸ்ரோக்ஸ், 30 நான்கு ஓட்டங்களையும் 11 ஆறு ஓட்டங்களையும் விளாசி, 258 ஓட்டங்களைப் பெற்றார். இவ்வோட்டங்களைப் பெற, வெறுமனே 198 பந்துகளை மாத்திரமே அவர் எடுத்துக் கொண்டார். தனது இரட்டைச் சதத்தை 163 பந்துகளில் அடைந்த ஸ்ரோக்ஸ், டெஸ்ட் ஆட்டங்களில் பெறப்பட்ட இரண்டாவது வேகமான இரட்டைச் சதம், இங்கிலாந்து சார்பாகப் பெறப்பட்ட வேகமான இரட்டைச் சதம், இடதுகை வீரரின் வேகமான இரட்டைச்சதம் என்ற சாதனைகளைப் படைத்தார். முதலிடத்தில், நியூசிலாந்தின் அஸ்டிலில் 153 பந்துகளில் பெறப்பட்ட இரட்டைச் சதம் காணப்படுகிறது. இதுபோன்ற ஓர் சிறப்பான ஆட்டத்தை இனிமேல் தான் வெளிப்படுத்துவது சந்தேகம் என்று தெரிவித்துள்ளார் ஸ்ரோக்ஸ். ஸ்ரோக்ஸ் மேலும் குறிப்பிடுகையில் 'எனது வாழ்வில், இவ்வாறு இனி மேல் அநேகமாக விளையாட மாட்டேன். இரட்டைச்சதம் பெற்ற பின்னர் முச்சதம் பெறும் எண்ணம் என்னிடம் இருக்கவில்லை. மாறாக எவ்வளவு முடியுமோ அவ் வளவு வேகமாக ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை வேகமாக இடைநிறுத்த வேண்டும் என்றே சிந்தித்தேன். என்றார். (ம)

## உலகக்கிண்ணத் தொடரிலிருந்து ஆஸ்திரேலியா திடீர் விலகல்

இந்த வருடம் பங்களாதேஷில் நடைபெறவுள்ள 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக்கிண்ணத் தொடரிலிருந்து பாதுகாப்புக் காரணங்களுக்காக விலகுவதாக அறிவித்துள்ளது ஆஸ்திரேலியா. கிரிக்கெட் விளையாட்டில் கொடிகட்டிப் பறக்கும் அணிகளில் ஒன்று ஆஸ்திரேலியா. இருந்தாலும் கிரிக்கெட்டிற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்குமோ, அந்த அளவிற்கு வீரர் களின் நலனுக்கும் பாதுகாப்புக்கும் முக்கியத்துவம் கொடுக் கும். பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட் டுச்சபை தொடரை நடத்த எவ்வளவு முயன்றும் பயனில்லாமல் போனது. உளவுத்துறையின் எச்சரிக்கை காரணமாக இந்த உலகக் கிண்ணத் தொடரையும் ஆஸ்திரேலியா புறக்கணித்துள்ளது. ஆஸியின் இடத்துக்கு அயர்லாந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (ம)

கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி
German Language Academy
ஜேர்மன், சுவிஸ், ஒஸ்ரியா ஆகிய நாடுகளுக்கான A1 பரீட்சை வெகு விரைவில் நடைபெறவிருப்பதால் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
எமது கல்லூரி அரச அங்கீகாரம் பெற்றது.
077 970 7322. ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்
கலை, வர்த்தக கணித
விஞ்ஞான பிரிவுகள்
ஆரம்பம்:
சனிக்கிழமை - 09.01.2016
1.00 P.m. Gr:10,11
Science
MR.V.A.Gnanthiran-B.Sc
St.Patrick's College

'ELAS'
"Special English Course"
நீங்கள் பல்கலை செல்லும் போது உங்களது ஆங்கில தேவையினை 100% பூர்த்தி செய்கின்ற கற்கை நெறி
New Batches Start on 10.01.2016 - 9 am (Weekends)
11.01.2016 - 9 am (Week Days)
Sir Pon Ramanathan R.d, Thirunelveli Jaffna. (பல்கலைக்கழக எதிரில்)
Contact No : 076 697 3040, 021 221 2410

FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy இல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM
MR. V. JEGAN (Trained in France - 2007)
DELF A1, A2 Exam
0779 789 456 / 021 221 7781
No. 40, பலாலி வீதி.
ஆரிய குளத்துக்கு அண்மையில்
ஆரம்பம் : 09.01.16 சனி 2 மணி
TP: 021 3202973
கண்டி வீதி, சாவகச்சேரி
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

இலவச கணினிப் பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித்திட்ட அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டு 2000ஆம் ஆண்டு முதல் அயிரக்கணக்கான மாணவர்கள், அரச ஊழியர்களுக்கு பயிற்சியினை வழங்கிய MCS நிறுவனம் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிற்கு அடிப்படையிலிருந்து பட்டக்கற்கை நெறிக்கான தயார்ப்படுத்தல் பயிற்சிகள் உள்ளடங்கலாக கணினி ஆங்கிலக் கற்கை நெறிகள் மேலும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மென்பொருள் நிறுவனங்களிலும் அதிக சம்பளத்துடன் வேலைவாய்ப்பினை உடைய கற்கை நெறிகளையும் வழங்க உள்ளது. முதற்கட்டப்பயிற்சியை அடுத்து Entrance Exam இல் தேர்வு செய்யப்படுவோர் மாத்திரமே இரண்டாம் கட்டப்பயிற்சிக்கு அனுமதிக் கப்படுவர். விண்ணப்பிக்க விரும்புவோர்.
Type Free <Name><District><DOB> & Send To 0772395895
MCS IT CAMPUS
34, Sir Pon Ramanathan road, near University of Jaffna
BIT-University of Colombo, CIMA-UK, Engineering- USA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.